2 சி 1722

தமிழரசு

சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட	இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு ரூ.	1—0—0
	பினங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு	2—0—0
	ஜீவிய சந்தா	20—0—0
	தனிப் பிரதி விலை	0—1—0
	மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது	0—2—0

மாதிரி சஞ்சிகை இனம்.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

ஒவ்வோரு ஆங்கில மாதம் 15-ஆம் தேதியிலும் வெளிவரும்.

விளம்பர விகிதம்

உட்பக்கம்	ஒன்றுக்கு	1-மாதத்திற்கு	ரூ. 15—0—0
,,	அரைப் பக்கத்திற்கு	,,	8—0—0
,,	கால் பக்கத்திற்கு	,,	5—0—0
கவர்	3-வது பக்கத்திற்கு	,,	20—0—0
,,	4 ,,	,,	25—0—0

இதர விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,

'தமிழரசு' ஆபீஸ்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

வெளி வந்து விட்டது! வெளி வந்து விட்டது!!

தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடகநூல்)

தமிழ்ப்புலவர் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இதன் முன் பாகத்தைச் சென்ற வருட 'தமிழரசு' இதழ்களில் தொடர்ச்சியாகப் படித்த நேயர்கள் நாள்தோறும் இப் புத்தகத்திற்கு ஆடர் செய்துகொண்டே இருக்கிறார்கள். இந் நூலைச் சில பக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும் படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை

எட்டணா தான்

சொற்பப் பிரதிகளே அச்சிட்டிருப்பதால் முந்திக் கொள்ளுங்கள்.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலிவீதி சென்னை.

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

ஜீவ ரகசியம்

என்ற அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்துவிட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப்பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட்டிருப்பதால் இதற்கு 'ஜீவரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர்களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மையெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை—தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட்டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம் சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள்களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாதமுதலி வீதி, சென்னை.

SEP 195
ACL-TNAL
03393

சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு 1/8 படி பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கை கால் பிடிப்பு, உடம்புவலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு

28 SEP 1935
MADRAS

முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினார். அவர் வார்த்தைக் கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரி அண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30

இப்படிக்கு.
அண்ணாவையங்கார்.

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் எனக்குக் கொடுத்த சகல மேக சித்தாதி எண்ணெயை இரண்டு நாள் சாப்பிட்டேன். என் முழங்கால் வீக்கமும் பிடிப்பும் நீங்கிவிட்டது. இடுப்பு வலியும் போய்விட்டது. வயிற்றில் சப்தித்துக்கொண்டிருந்த வாய்வும் நீங்கிவிட்டது. இன்னும் ஒரு வேளை எண்ணெயைக் கையிருப்பாக வைத்திருக்கிறேன். இந்த லெட்டர் கொண்டுவரும் பிராம்மண விதவை மிகவும் ஏழை. கால் குடச்சலினால் அனேக நாளாய்க் கஷ்டப்படுகிறாள். கிருபை கூர்ந்து ஒரு ரூபா வாங்கிக்கொண்டு இரண்டு வேளை எண்ணெய் கொடுத்தனுப்பவும். நான் தங்களை வந்து பார்க்கிறேன்.

இப்படிக்கு,

கீழ்வீதி, சீனிவாச ஐயங்கார்,
சைவ முத்தையா முதலி வீதி, சென்னை.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

சகல மேக சித்தாதி எண்ணெய்

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

இணையற்ற



அயத்தங்க திராவகம்

நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரப் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

சில அபிப்பிராயங்கள்

அன்புள்ள மாசிலா திலக!

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அனுபவ வைத்தியனாதலால் விலை குறைவு செய்து அனுப்பினால் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் ஏஜண்டுமானாலு மாவேனாதலால் அதை யனுசரித்த அரை டஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S V. அக்னீஸ்வரன்.

ஐயா!

தாங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்தங்க திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினால் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கும் அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்

20—6—30, கண்ணபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்.

நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணா 12.

வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

கூழ்ப்பாண்ட லேகியம்

இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கியகுணம். எலும்புருக்கி

ரோபால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும். சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தாக்கூடியது.

சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, கூழ்ப் பாண்ட லேகியம், மீன் எண்ணெயைக் காட்டிலும் குணம் செய்கின்றது. கணச்சூட்டுக்கு மேன்மையாய்த் தெரிகின்றது. க்ஷயரோகம் வாராதபடி தடுக்கவும் மேலானதாய்க் காணப்படுகின்றது. மலச் சிக்கல் நீங்குகின்றது. ஆனபடியால் எங்கள் எல்லா ஷாப்புக்கும் மாதா மாதம் 10 பவுன் அனுப்பவும். இந்த லெட்டர் கொண்டுவரும் ஆள்வசம் 3 வீசை கூழ்ப்பாண்ட லேகியம் கொடுத்தனுப்பவும்.

M. C. நஞ்சுண்டராவ். B. A., M. B. & C. M. மைலாப்பூர்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டணுக்கு' என்னும் ஊருக்கும் ஜில்லா முனிசீப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினால்தான் என் குழந்தை பெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A., B. L.,
District Munsiff, Tanuku.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, 2 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. யில் அனுப்பவும். இப்போது என் மனைவியின் தேக காந்தல் குறைந்திருக்கின்றது. அத்துடன் சிவப்பிரகாச பற்பொடி 1 டசன் அனுப்பவும்.

வியாசராவ் M. A., B. L., District Munsiff, Bellary.

ஒரு பவுன் புட்டி விலை ரூபா 2.

அயக்காந்த செந்தூரம்

இந்தச் செந்தூரத்தில் ஒரு அரிசி எடை காலை மாலைகளில் தேனில் சாப்பிட சுரம் நீங்கும். இரத்த விருத்திக்கு இது நல்ல மருந்து. பித்தப்பாண்டு, பித்தசோகை இவைகளுக்கு வெள்ளாட்டுப் பாலில் அரிசி எடை கலந்து சாப்பிட 3 நாளில் வீக்கம் நீங்கும். இரத்த விருத்திக்காகக் குளிர்ச்சியுள்ள கூழ்ப்பாண்ட லேகியத்தி லாவது வேறு எந்த லேகியத்திலாவது வைத்துச் சாப்பிடலாம். மற்ற மருந்துகளைப்போல் இது மலம் கட்டாது என்பதே இதன் முக்கிய குணம். வெள்ளாட்டுப் பால் கிடைக்காவிட்டால் பசும் பாலில் சாப்பிடலாம். பாரிச வாயுவுக்கு இது நல்ல மருந்து.

இந்தச் செந்தூரம் அயம், காந்தம் இரண்டும் சேர்த்து 100 புடம் போட்டது. இதை இருமலுக்குத் தேனில் கொள்ள நீங்கி விடும். ஈளை, இருமல், காச இருமல் இவ்விரண்டையும் (பிரான்கை டிஸ் ஆஸ்தமா) மூன்று நாளில் நிறுத்தி விடும். புட்டி 1-க்கு ரூ. 3.

எனதன்புள்ள டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர் களுக்கு, எனது மூத்த குமாரத்திக்குத் தாங்கள் கொடுத்த அயக் காந்த செந்தூரம் கொடுத்ததில் கைகால் வீக்கம், கண்ணில் இரத்த மில்லாமல் வெளுத்திருந்தது இப்பொழுது நீங்கி இருக்கின்றது. உப்பில்லாப் பத்தியம் மூன்று நாளும் வறுத்த உப்பு சுட்டபுளி சேர்த்து பத்தியம் மூன்று நாளும் தீர்ந்து விட்டது. இனிக் கூழ்ப் பாண்ட லேகியத்துடன் சேர்த்துப் பத்தியமில்லாமல் சாப்பிடலாம் என்றால் இந்தக் கடிதம் கண்டவுடன் 1 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. மூலமாய் அனுப்பி வைக்கவும்.

கிருஷ்ணசாமி அய்யங்கார், சைதாப்பேட்டை.

சிவப்பிரகாச ஜன்னித் தைலம்

நம் தேசத்தில் பாலியத்தினால் மோகத்தினாலும், தேகவலிமை யினாலும், நாள் கிழமை பாராமல் ஸ்நானம் செய்து புணரும் ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் ஒரு தலைநோய், கழுத்து நரம்பு முதலிய வியாதிகளுக்கு இந்தத் தைலம் மிகவும் உபயோகமானது.

உபயோகிக்கும் விதம்:—இந்தத் தைலத்தைத் தலையில் தடவி இரண்டுநாளைக் கொருதரம் ஸ்நானம் செய்து வரவும். ஸ்நானம் செய்தவுடன் ரசம் சாதம் சாப்பிடவேண்டும். இப்படி 2, 3 ஸ்நானம் செய்வதற்குள் தலைவலி நின்றுவிடும். வேறு பத்தியம் கிடையாது.

5 பலம் கொண்ட எண்ணெய் விலை ரூபா 5.

கிடைக்குமிடம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

அன்பே ஆண்டவன்

தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

மலர்	யுவ௵ புரட்டாசி௴	இதழ்
6	1935௵ செப்டம்பர்௴ 15௨	9

பொருள் அடக்கம்

ஆசிரியர் குறிப்புகள் ... 642
தேச சேவை ... 648
ஸரோஜினி அல்லது விதியின் வலிமை ... 652
பொதுப்பணி புரிமின்! ... 657
ஆதிலக்ஷ்மி அல்லது உண்மைக் காதலி ... 659
நான் கேட்ட வரலாறு ... 671
சுப்பையா பிள்ளையின் சாமர்த்தியம் ... 678
வெளி விகடம் ... 680
மணாளனை மயக்கிய மதியூகி ... 683
குவெட்டா பூகம்பத்தில் ஜானகிராமன் ... 690
சந்தேகப் பேய் ... 697
பிரமை மேலிட்டால்...... ... 702
ராஜத்தின் கனவு ... 704
பாலிய விவாகத்தால் விளைந்த பயன் ... 707
கேசவபுரம் மைனர் அல்லது கற்பரசி கமலாம்பாள் ... 709
பேயின் பேட்டி ... 718

குறிப்பு:—'தமிழரசி'ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாகமாட்டார்.



பத்திராசிரியர்கள் மகாநாடு

சென்றமாதம் கல்கத்தாவில் கூடிய மூன்றும் அகில இந்திய பத்திராசிரியர்கள் மகாநாடு இதற்குமுன் கூடிய இரண்டு மகாநாடுகளைப்போலல்லாது சிறிது நாட்டு மக்களின் கவனத்தையும் இழுத்துள்ளது. அதற்குக் கூட்டமும் அதிகமாகவே யிருந்துள்ளது. அதில் அலகாபாத்திலிருந்து வெளிவரும், 'லீடர்' (ஆங்கிலப்) பத்திரிகையின் ஆசிரியர் திரு சி. ஒய். சிந்தாமணி தலைமை வகித்தார். திரு. சிந்தாமணி பத்திரிகைத் தொழிலில் மிகுந்த அநுபோகம் பெற்றிருப்பதுடன் சிறந்த அரசியல் வாதிகளிலும் ஒருவராவர். எனவே இப்பொழுது நாடு இருக்கும் நிலையில், பத்திரிகைகள் இருக்கும் நிலையில் அம்மகாநாட்டில் தலைமைவகித்து அம்மகாநாட்டை வெற்றிபெற நடத்தி உருவான காரியங்கள் செய்ய வழிகாட்டுவதற்கு அவர் தகுந்தவராவர். அப்படிப்பட்டவரை அம் மகாநாட்டுக்குத் தலைவராக தேர்ந்தெடுத்த வரவேற்புக் கமிட்டியாரின் செய்கை போற்றத்தக்கது. அதற்காக அவர்களை வாழ்த்துகின்றோம்.

மகாநாட்டுத்தலைவர் திரு. சிந்தாமணி நம்நாட்டில் பத்திரிகைகள் படும் பாட்டை நன்கு விவரித்துள்ளார், அவசரச் சட்டங்களினால் இந்தியா முழுவதும் பல பத்திரிகைகள் சர்க்காரின் கோபத்திற்காளாகி ஜாமீன்கட்ட நேர்ந்தது. பல ஜாமீன்கட்ட இயலாது நின்றுவிட்டன. ஜாமீன் கட்டியவைகளில் சில ஜாமீன் தொகையை இழந்தன. அவை பொதுமக்கட்கு நன்கு தெரிந்தவையே. அவைகளைப்பற்றி மீண்டும் எடுத்துரைக்க வேண்டியதில்லை யென்று நம்புகிறோம். பத்திரிகைகள் என்னபாடுபட் டிருக்கும் என்பதை அவசரச்சட்டமேற்பட்டது முதல் இதுவரை சுமார் 638 பத்திரிகைகளிடம் ஜாமீன் கேட்டிருப்பதிலிருந்தும், மொத்தம் பத்திரிகைகள் சுமார் 275950 ரூபாய் ஜாமீன் கட்டியிருப்பதிலிருந்தும், சுமார் 39550 ரூபாய் ஜாமீன் தொகையில் இழந்திருப்பதி லிருந்தும், சிந்தித்து உணர்ந்துகொள்ளலாம். எனவே தலைவர் அந்த அவசரச் சட்டத்தை வன்மையாய் கண்டித்ததுடன் இறக்கவிருக்கும் அச்சட்டத்திற்கு புத்துயிர் அளிக்க சர்க்கார் முன்வந்திருப்பதையும் அழுத்தமாய் கண்டித்துள்ளார். அந்த சட்டத்தை அறவே எடுத்துவிட வேண்டுமென்றும் கூறியுள்ளார். மகாநாடும் இவ்விதமே தீர்மானித்

துள்ளது. ஒன்றிரண்டு பத்திரிகைகள் தாறுமாறாக மனம் போனபடி எழுதலாம். அதற்காக பத்திரிகை உலகத்தையே பாதிக்கும்படியான சட்டம் இயற்றுவது நியாயமாகாது. மனம்போன போக்கில் எழுதும் ஒன்றிரண்டு பத்திரிகைகள்மீது நடவடிக்கை எடுக்கச் சர்க்காருக்குச் சாதாரணச் சட்டமே போதுமானது. சர்க்காருக்குப் புதிய சட்டம் வேண்டும் என்பதில்லை என்று கருதுகிறோம். இந்தியச் சட்டசபை மெம்பர்கள் அச் சட்டத்திற்கு சர்க்கார் உயிர் கொடுக்க விரும்புவதற்கு இடங்கொடாது, அதை சாகச் செய்வாரென நம்புகிறோம். இவ்விதம் செய்வது அவர்களின் முக்கியமான கடமைகளில் ஒன்றாகும்.

மற்றும் மகாநாடு சில முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. அத் தீர்மானங்கள் பத்திரிகை ஆபீஸ்களில் வேலை செய்பவர்கள் படும் கஷ்டத்தையும் அவர்கள் அநுபவிக்கும் துன்பத்தையும் மகாநாட்டில் கூடி இருந்தவர்கள் நன்குணர்ந்திருக்கிறார்கள் என்பதை காட்டுகின்றன. மகாநாடு பத்திரிகைகளுக்கு அனுப்பும் தந்திக் கட்டணத்தை உயர்த்தியுள்ளதைக் கண்டித்துள்ளது. பத்திரிகைகளுக்கு அனுப்பும் தந்திக் கட்டணத்தை உயர்த்தியிருப்பதனால் பத்திரிகை ஆபீஸ்கள் மட்டும் பாதிக்கப்படவில்லை. பொதுமக்களும் பாதிக்கப்படுகிறார்கள். தந்திக் கட்டணம் குறைவாயிருந்தால் பத்திரிகை ஆபீஸ்கள் நல்ல செய்திகளையும் பெருங் கலகம் போன்ற செய்திகளையும் தந்தியில் அனுப்பும்படிச் சொல்லும். தந்திக் கட்டணத்தை உயர்த்தியதால் அவைகளை சாதாரணத் தபாலிலே அனுப்பும்படிச் சொல்லும். அதனால் பொதுமக்கள் அச்செய்திகளை உடனுக்குடன் அறியமுடியாது. இந்த அளவிற்கு பத்திரிகைகளும் பொதுமக்களும் பாதிக்கப்படுவர். தந்திக் கட்டண உயர்வால் பத்திரிகை ஆபீஸ்களுக்குப் பணக் கஷ்டமும் உண்டாகும். பெரும்பான்மையான பத்திரிகை ஆபீஸ்கள் பணக்கஷ்டத்துடனே பத்திரிகைகள் நடத்துகின்றன என்பதும், அவைகள் லாபம் அடைவதில்லை என்பதும் எல்லோரும் நன்கறிந்த விஷயம். எனவே அடுத்த வரவு செலவு திட்டத்தில் அந்த உயர்வை நீக்கிவிட வேண்டும் என்று சர்க்காரையும் இந்தியச் சட்டசபை மெம்பர்களையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மகாநாடு நிறைவேற்றியிருக்கும் தீர்மானங்களில் பத்திரிகை ஆபீஸ்களில் வேலையிலிருப்பவர்கட்கு மாதா மாதம் ஒழுங்காகத் தவறாது சம்பளம் கொடுக்க வேண்டும், அவர்கட்கு புராவிடெண்ட் நிதி முதலியவைகள் ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானித்திருப்பதுதான் முக்கியமானது. பல பத்திரிகை ஆபீஸ்களில் வேலை செய்பவர்கள் சம்பளம் கிடைக்காது வாடி வதங்குவது வெளிப்படையாய் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. 'வேலையகப்பட்டாலும்

கூலியகப்படவில்லை' என்னும் முதுமொழி இவர்கட்கு முற்றிலும் பொருத்தமாக இருக்கிறது. மாதா மாதம் சம்பளங் கிடைக்காமையினால் வேலை செய்பவர்கள் கஷ்டப்படுவது போக, ஆபீஸ்கட்கும் அதனால் பெரும் நஷ்டங்களே ஏற்படும். சம்பளங் கிடைக்காவிடில் வேலை செய்பவர்கள் எப்படி உற்சாகத்துடன் வேலை செய்வர்? உற்சாகமிருந்தால்தானே துரிதமாயும் சுறுசுறுப்பாயும் திறமையாயும் வேலை செய்ய முடியும்! மனச் சோர்வு இருக்கும்போது இவ்விதம் வேலை செய்ய முடியுமோ? முடியாது. எனவே வேலைச் சுணக்கம் ஏற்படுகின்றது. அதனால் ஆபீஸுக்கு கெட்ட பெயர் உண்டாகிறது. ஆபீஸுடன் தொடர்பு வைத்திருப்பவர்களுக்கும் 'இது என்ன ஆபிஸ். இந்த ஆபீஸில் ஒன்றையும் கவனிப்பாரில்லை. இங்கு காரியங்கள் ஒழுங்காக நடைபெறுகின்றதல்ல' என்று சொல்லிக்கொண்டு ஆபீஸுடன் தங்கட்குள்ள தொடர்பை அறுத்துக் கொள்ளுகின்றனர். பின்னர் அதனால் ஆபீஸுக்கு கஷ்டங்களும் நஷ்டங்களும் ஏற்படுகின்றன. ஆகவே மகாநாடு மேற்கூறியபடி தீர்மானித்தது மிக முக்கியமானதாகும். அகில இந்திய பத்திராசிரியர்கள் சங்கம் இத்தீர்மானத்தைஎல்லாப்பத்திரிகை ஆபீஸ்களேயும் அநுஷ்டிக்கும்படிச் செய்யவேண்டும். தீர்மானம் நிறைவேற்றியதுடன் நின்றுவிடக் கூடாது. அத்தீர்மானத்தை அனுஷ்டானத்தில் கொண்டுவந்து விட்டால் பத்திரிகை ஆபீஸ்களுக்கும் அங்கு வேலை செய்பவர்கட்கும் நல்ல கௌரவமும் மதிப்பும் உண்டாம்.

மற்றும் மகாநாடு மாகாணங்களில் கிளைச்சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானித்திருப்பதும் வரவேற்கத் தக்கது. இப்பொழுது நம் நாட்டில் அடுத்த மாகாணத்தில் பத்திரிகைத் தொழில் எவ்விதம் நடக்கின்றது, ஆபீஸ்கள் எவ்விதம் நிர்வாகம் செய்யப்படுகின்றன, பத்திரிகைகளை விருத்தி செய்ய என்ன செய்கிறார்கள் என்பதை பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவர்களிலும் மிகச் சிலரே அறிவர். கிளைச்சங்கங்கள் ஏற்படுத்தினால் அவ்வப்போது மற்றைய மாகாணங்களில் பத்திரிகை உலகம் எவ்விதமிருக்கிறதென்பதை அறிந்துகொள்ளச் சாத்தியப்படும். அத்துடன் பத்திரிகைச் சட்டங்களின் அமுல் எவ்விதமிருக்கின்றன என்பதையும் அறிந்து அவைகளை கண்டித்து பத்திரிகைகட்கு வாய்ப்பூட்டிடும் சட்டங்கள் தோன்றாவண்ணம் சர்க்காரை எதிர்த்துப் போராட பெரும் சாதகமாகவுமிருக்கும். ஆனால் மகாநாடு செய்துள்ள ஒரு காரியம் வருந்தத் தக்கதா யிருக்கிறது. மகாநாடு பத்திராசிரியர்களாக விரும்புபவர்கட்கு யூனிவர்சிட்டிகளில் ஒரு போதனாமுறை ஏற்படுத்தவேண்டும் என்று கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை தோற்கடித்து விட்டது. இவ்விதம் மகாநாடு செய்ததற்கு யாது காரணம் என்று தெரியவில்லை. மேல் நாடுகளில் எல்லாம் இவ்விதமான போதனா முறைகள் இருக்கின்றன. அதனால் அங்கு பத்திரிகைத் தொழிலில் ஈடுபடு

பவர்கள் எல்லாம் நாவன்மை உடையவர்களாயிருப்பதுடன் சொல் வன்மையுடன் கட்டுரைகள் எழுதும் சமர்த்தர்களாயும் இருக்கின் றனர். அதனால் அவர்கட்கு எங்கும் நல்ல மதிப்பும் பெருமையுமிருக் கிறது அதேபோல் போதனை முறையில் தேர்ச்சி பெற்றவர்கள் நம் நாட்டிலும் பத்திரிகை தொழிலிலீடுபடுவார்களானால் பத்திரிகைகள் நன்கு மதிப்புப்பெற்று வெளிவரும். அவைகளில் வசவு புராணங் களும் ஆபாசமான கட்டுரைகளும் இடம்பெறாது. எனவே நம் நாட்டில் பத்திரிகைத் தொழிலுக்கு போதனைமுறை மிகவும் இன்றி யமையாதது என்பதே நமது அபிப்பிராயம். பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் யூனிவர்ஸிட்டி போதனைமுறை பயிற்சி பெற்றவர் களாயிருப்பின் சர்க்கார் பத்திரிகைகளுக்குப் போடும் வாய்ப்பூட்டுச் சட்டங்களை எதிர்த்துப் போராடுவதற்கும் ஒரு பெரும் ஆதாரவாகவு மிருக்கும் சர்க்கார் வாய்ப்பூட்டுச் சட்டங்கள் போடப் போதிய காரணங் காட்ட முடியாது இவ்வளவு சௌகரியங்களையும் நன்மை களையும் செய்யக்கூடிய ஒரு போதனை முறையை மகாநாடு வேண்டாம் என்று மறுத்துவிட்டது மிகவும் துக்கிக்கத் தக்கதாகும். கல்கத்தா யூனிவர்ஸிட்டி இவ்விதமான போதனை முறை யொன்று வைக்கத் தீர்மானித்திருக்கிறது. சென்னை யூனிவர்ஸிட்டியும் இவ்வித மான முறை யொன்றை ஏற்படுத்துவதைப்பற்றி யோசித்து வருகிறது. இந்த யூனிவர்ஸிட்டிகள் இம்முறையை கட்டாயம் ஏற்படுத்த வேண்டும். இவை இம்முறையை ஏற்படுத்தியதும் நாட்டி லுள்ள பத்திரிகைகளும் பத்திராசிரியர்களின் சங்கங்களும் இவை களுடன் ஒத்துழைத்து இம்முறையை வெற்றி பெறச் செய்யும் என்று நம்புகிறோம்.

தயக்கமேன் ?

உலகு எங்கும் எதிர்பார்க்கப்பட்ட அகிலதேச சங்கம் (செப்டம் டர்) இம்மாதம் 4-ந் தேதி கூடி இத்தலி—அபிஸீனியா தகராறைப் பற்றி யோசித்தது. அப்பொழுது இத்தலியின் சார்பாக அது அபிஸீனியாமீது தயாரித்திருந்த குற்றப் பத்திரிகையை இத்தலிப் பிரதிநிதி அலாயிஸி பிரபு வாதித்து விளக்கினர். அக்குற்றப் பத்திரி கையில் பிரமாதமான குற்றம் ஒன்றையும் காணோம். அதிலும் அபிஸீனியா சர்வதேச சங்கச் சட்ட திட்டங்களின்படி நடக்கவில்லை யென்று இத்தலி கூறியிருப்பதுதான் சிரிக்கத்தக்கதா யிருக்கிறது. அபிஸீனியா ஒன்றுதான் அப்படி நடந்திருக்கிறதா? எல்லா நாடு களுமே இக்குற்றத்திற்கு ஆளானவைகளே. அப்படியிருக்க, அபிஸீ னியாமீதுமட்டும் இக்குற்றம் சுமத்துவது 'ஆகாத பெண்டாட்டி கால்பட்டால் குற்றம் கைபட்டால் குற்றம்' என்பதுபோலவே இருக் கிறது. மற்றும் இத்தலி, அபிஸீனியாமீது சாட்டிய குற்றங்களை எல்லாம் அபிஸீனியா பிரதிநிதியான புரபசர் ஜெஸி மறுத்துள்ளார்.

அவ்விதம் அவர் மறுத்துப் பேசும்போது இத்தலிப் பிரதிநிதிகள் வெளியே போய் விட்டனர். இதுவே இத்தலி சாட்டிய குற்றங்கள் எல்லாம் ஆதார மற்றவை என்பதற்குப் போதிய அத்தாட்சியாகும். ஆனால் இத்தலிப் பிரதிநிதிகள் சங்கச் சட்ட திட்டங்களை மீறி நடந்த ஒரு நாட்டின் பிரதிநிதியுடன் சரி சமமாக இருந்து வாதிக்க விரும்பாததினால் தாங்கள் வெளியே போய்விட்டதாக கூறுகின்றனர். இது வெறும் நொண்டிச் சமாதானமே தவிர வேறல்ல. மறுத்ததை மறுத்துக் கூறுவதற்கு இடமில்லாதிருக்கும்போது அவர்கள் தங்கள் அந்தஸ்தை காப்பாற்றிக் கொள்ளுவதற்கு இவ்விதம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்று கருதினர் போலும். இப்படியிருந்தும் இத்தலி அபிஸீனியாமீது படை யெடுக்கும் கருத்தைவிட்டு விடவில்லை. அது போர்க் கோலமே பூண்டுவருகிறது. இத்தலியின் செய்கை நியாயமற்றதென சர்வ தேச சங்கத்தைச் சேர்ந்த வல்லரசுகள் எல்லாம் உணர்ந்தும் வழுவழா என்று பேசிக்கொண்டிருப்பதின் காரணந்தான் தெரியவில்லை. இவர்கள் தீவிரமான நடவடிக்கை எடுக்கத் தயங்குவதேன்? இத்தலி சர்வாதிகாரியான சினர் முசோலினியோ உலகில் தனக்கு நிகராவார் யாருமில்லை என்ற ஆணவத்துடன் பேசுகிறார். இத்தாலிக்கு இடையூறு செய்பவர்களை எல்லாம் ஒரு கை பார்ப்பதாய் உறுமுகிறார். இவ்வளவு பெரிய தைரியசாலி ஒரு சிறு நாட்டின் மீதுதானா படையெடுக்க ஆசைப்படவேண்டும்? அந்த தைரியத்தை வேறு வல்லரசுகளிடம் காட்டக் கூடாதா? அவ்விதம் செய்தால் அவருடைய முறுக்குக்குப் பெருமை உண்டு. அதைவிட்டு எளியநாடான அபிஸீனியாவினிடம் தனது கைவரிசையைக் காட்ட அவர் விழைவது அவருடைய பராக்கிரமத்திற்கே இழிவன்றோ?

நாம் முந்திய மாதச் சஞ்சிகையில் கூறியபடி சர்வதேச சங்கத்திற்கு இது ஒரு சோதனைக் காலம். இதை எல்லோரும் உணர்ந்திருப்பதாகவும் தெரிகிறது. சங்கங் கூட்டத்தில் பேசிய பிரிட்டிஷ் பிரதிநிதி திரு. ஈடன் 'உலகம் நம்மை கவனித்து வருகிறது. சபை ஒரு சோதனைக் காலத்தை சமாளிக்கவேண்டி யிருக்கிறது. இதில் சபை வெற்றிபெறாவிடில் அதன் செல்வாக்குக் குன்றிப்போம்' என்று கூறியுள்ளார். இது முற்றிலும் உண்மையே. இதில்தான் மேல்நாட்டினர் எவ்வளவுதூரம் நியாய புத்தியுடன் காரியம் செய்வார்கள் என்பது தெரியப்போகிறது. இதில் நியாயம் வழங்க அவர்கள் தவறினால் பின்னர் அவர்களிடம் ஒருவரும் நம்பிக்கை கொள்ளமாட்டார்கள். அவர்கட்கு இப்பொழுது இருக்கும் கௌரவமும் போய்விடும். இந்த உண்மையை உணர்ந்தபின்னும் துரிதமாகக் காரியம் செய்யாமல் இன்னும் ராஜிப்பேச்சு ராஜிப்பேச்சு என்று இழுத்துக்கொண்டிருப்பதில் என்னபயன்? இவர்கள் இவ்விதம் செய்வதால் இத்தலி இவைகள் ஒன்றையும் சட்டை செய்யாது

தனது போர்கோலத்தைப் பெருக்கிவருகிறது. தனது படைகளை திரள் திரளாக ஆபிரிக்காவுக்கு அனுப்பிவருகிறது. ராஜிப்பேச்சினால் விவகாரத்தைத் தீர்க்கவேண்டும் என்பவர்கள், அந்த ராஜிப்பேச்சு ஒரு முடிவுக்கு வரும்வரை போர்க்கோலங் கொள்ளுவதையாவது நிறுத்திக்கொள்ளும்படிச் செய்யவேண்டும். இவ்விதம் செய்யாமல் இத்தலி தனது கையை பலப்படுத்திக்கொள்ள இடங்கொடுத்துக்கொண்டு வல்லரசுகள் ராஜிப்பேச்சு என்று சொல்லிக்கொண்டிருப்பதைப் பார்க்கும்போது மற்றொரு வதந்தி ஒன்று உலாவிவருவது உண்மையாக இருக்குமோ என்று சந்தேகிக்கவேண்டி இருக்கிறது. 1925ம் வருஷத்தில் ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறதாம். அதன்படி பிரிட்டனும் இத்தாலியும் அபிஸீனியாவை பங்கு போட்டுக்கொள்ள வேண்டுமாம். பிரான்சும் இந்த ஒப்பந்தத்தை ஆதரித்திருக்கிறதாம். ஆனால் பிரிட்டன் இதுவரை நடந்துகொண்ட மாதிரியைப் பார்க்கும்போது இச்செய்தி உண்மையாக இராதென்றே நம்புகிறோம். பிரிட்டிஷ் சர்க்கார் நியாயத்துடன் நடந்து அபிஸீனியாவுக்கு நியாயம் வழங்குவர் என்றே திண்ணமாய் நம்புகிறோம். அதன்மூலம் மேலே குறிப்பிட்டது போன்ற வதந்திகள் உலாவுவதையும் பொய் என்று மெய்ப்பிப்பர் என்றும் கருதுகிறோம்.

சென்னை சட்டசபை

ஆகஸ்டு மாதம் 10ம்தேதி சென்னை சட்டசபையில் பேசிய கவர்னர் சென்னை சட்டசபைக்கு வரும் நவம்பர் மாதத்திலிருந்து இன்னும் ஒருவருஷம் உயிர் கொடுத்திருப்பதாகக் கூறினார். சென்னை சட்டசபைக்கு இப்பொழுது உயிர் கொடுத்திருப்பதைப்பற்றி ஒன்றும் குறைகூற முடியாதுதான். ஆனால் இதற்குமுன் இரு தடவைகள் அதற்கு உயிர்பிச்சை கொடுத்ததை குறைகூறாமலிருக்க முடியாது. புதிய அரசியல் சீர்திருத்தம் எப்பொழுது வரும் என்று கூறுவதற்கான அறிகுறிகள் ஒன்றுமில்லாத நிலையிலேயே சட்டசபையின் ஆயுளை விருத்தி செய்தது மிகவும் வருந்தத்தக்கது. அப்போதே சட்டசபையை கலைத்திருந்தால் கிரமப்படி இப்பொழுது அதன் ஆயுளாகிய மூன்று வருஷம் முடிவுபெற்றிருக்கும்.

விடுதலை

இந்திய சர்க்கார் சிறையிலடைத்து வைத்திருந்த பண்டித ஜவஹாலால் நேருவை அவரது மனைவி ஜெர்மனியில் அபாயமான நிலைமையிலிருப்பதை முன்னிட்டு விடுதலை செய்துள்ளனர். இப்பொழுதாவது அவரை சர்க்கார் விடுதலை செய்தது போற்றத்தக்கதே. தனது கணவன் முகம் கண்டபிறகு திருமதி கமலாநேரு குணமடைந்து சுகமே தாய்நாடு அடைவாரென நம்புகிறோம்.

தேசசேவை

[சுகி]

தேசசேவை என்றதும், கதருடை, மறியல், மேடைப்பிரசங்கம், தடியடி, சிறைவாசம் என்று நினைப்பீர்கள். அல்லது பத்திரிகைகளில் எழுதி மூன்றும் பேருக்குத் தெரியாமல் இருப்பதென்றும் நினைக்கலாம். அப்படியொன்றுமில்லை இக்கதையில் வரும் கதாநாயகன் தியாகராஜனின் தேச சேவையோ வேறு விதமானது.

சில வருடங்களுக்கு முன் பெரியகுளம் என்னும் கிராமத்தில் சுந்திரம்பிள்ளை என்ற ஓர் பிரபு தன் மனைவி கற்பகவல்லியுடன் வசித்துவந்தார். இவ்விருவர்களுக்கும் இடைவிடா இன்பம் கொடுக்க தியாகராஜன் என்ற குமாரனும், கமலம் என்ற புத்திரியும் இருந்தனர். சுந்திரம்பிள்ளை தன் வாழ்நாட்களில் முக்கால்பாகத்தை துரைத்தனத்தாருக்குச் செலவுசெய்து மீதிபாகத்தை இவ்வூரில் செலவழிக்க குடிவந்தவர். இவர் உத்தியோகம் வகித்த வாலாற்றைச் சொல்லின், இவரால் நன்மைப் பெற்றவர் வெகு சிலர், தீமையடைந்தவர்களின் தொகை எண்ணிக்கைக் கடங்காது. கற்பகவல்லியம்மாள், தன் பெயருக்கேற்ப தன்னை யண்டினோரை ஒரு போதும் தள்ளாமல் ஆதரிக்கும் தருமபத்தினி. தியாகராஜனும் கமலமும் சிறு வயது முதற்கொண்டு தாயின் அடிபணிந்து அவள் சொற்படி நடந்து வந்தமையால், தாயின் குணங்கள் யாவும் அமையப்பெற்று சாந்தம், தயவு இரக்கம், முதலிய நற்குண பூஷணிகளாய் விளங்கினர்.

தியாகராஜன் தன்னுடைய 20-ம் வயதில் சென்னை இராஜதானி கல்லூரியில் B. A. பட்டம் பெற்று விவசாயம் விஷயமாய்ப் படிக்க இங்கிலாந்து தேசத்திலுள்ள ஓர் விவசாயக் கல்லூரிக்குப் போனான். கமலம் 16 வது வயதில் பத்தாம் வகுப்பு தேறி வீட்டிலேயே தன் தயாருக்கு உதவியாக இருந்தாள். ஒழிந்த நேரங்களில் இராட்டினத்தில் நூல் நூற்கவும் துணி நெய்யவும் பழகிவந்தாள். இங்கிலாந்து சென்ற தியாகராஜன் தன் தாயின் போதகத்தை சிரமேற்கொண்டு குடி, காமம், முதலிய கெட்ட குணங்களைப் பின்பற்றாமல் தான் நாடிவந்த காரியத்தில் மிகவும் ஊக்கமுள்ளவனாய் படித்து வந்தான்.

சுமார் மூன்று வருடங்கள் கடந்தன. தியாகராஜன் என்ற பெயருக்கு அடுத்தபடியாக ஏற்கனவே B. A. என்ற எழுத்துகளு

டன் M. Sc. எழுத்துகளும் கூடின. பட்டம் பெற்றவுடன் தன் சுயநாட்டிற்குத் திரும்பிவந்து தன் பெற்றோரும், சகோதரியும் சந்தோஷப்படும்படி ஜீவித்து வந்தான்.

தியாகராஜனின் கீர்த்தி தாய்நாடெங்கும் பத்திரிகைகள் மூலமாய்ப்பரவியது. இதையறிந்த துரைத்தனத்தார் அவனுக்கு சென்னையில் விவசாய உதவி டைரக்டர் வேலையைக் கொடுத்தனர். கால வித்தியாசத்தாலோ அல்லது உத்தியோகமடைந்த அதிர்ஷ்டவசத்தாலோ மூன்று மாதங்களுக்குள்ளாக அவன் பெற்றோர் தாங்கள் நேசித்துவந்த மக்களிருவரையும் இம்மண்ணுலகில் விட்டு விண்ணுலகுக் கேகினர். இவ்வெதிர்பாராத சம்பவம் உடன்பிறந்தார் இருவரையும் துக்கசாகரத்தி லாழ்த்தியது. தியாகராஜன் தன் தகப்பனார் சேர்த்து வைத்திருந்த சொத்துகள் யாவற்றையும் எடுத்துக்கொண்டு தங்கையுடன் சென்னைக்குப்போய் எப்பொழுதும் போலவே உத்தியோகத்தைக் கவனிக்கலானான்.

உத்தியோகம் வகிக்கும் காலத்தில் குடியானவர்களின், பாடுகளையும் அவர்களின்கீழ் உழைக்கும் ஹரிஜனங்களின் பாடுகளையும் கவனித்துத் துக்கமடைவான். இவ்வியாகூலத்துடன் பெற்றோரை இழந்த விசமும்கூடவே, தான் வகித்து வந்த உத்தியோகம் பெரியதேயாயினும் அடிமைத்தொழில் என்றெண்ணி, தன் ஜீவியகாலமெல்லாம் ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் உதவி செய்ய வேண்டுமென்று இராஜினமா செய்துவிட்டான். தமையன் செய்த மேலான பிரதிக்கினையைக் கண்ட தங்கை, தானும் அவ்வாறே நடக்கவேண்டுமென்று வைராக்கியம் கொண்டாள்.

இவ்விருவரின் எண்ணமும் ஒன்றுபடவே தருமபுரி என்னும் ஊருக்குச் சென்று தாங்கள் உத்தேசித்த காரியத்தைச் செய்ய எண்ணினர். அவ்வாறே தமையனும் தங்கையும் தகப்பன்வைத்துப் போன சொத்தைக்கொண்டு சுமார் 150 ஏக்கர் நிலங்களை வாங்கி, அவற்றில் ஓர் பாகத்தில் தங்களுக்கும் தாங்கள் அமர்த்தப்போகும் வேலையாட்களுக்கும் சில குடிசை வீடுகளைச் சுகாதார வசதியுடன் கட்டி முடித்தனர். பிறகு அவ்வூரிலேயே தீண்டாமையாலும் வறுமைப் பிணியாலும் பரிதவித்திருந்த ஹரிஜன குடும்பங்களை அவ்வீடுகளில் குடியேற்றி, தங்கள் நிலங்களில் வேலைகொடுத்து கூலியும் கொடுத்துதவி வந்தனர். கமலமோ தங்கள் வேலையாட்களின் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டவும், நோயுற்றவர்களைக் கவனிக்கவும், உடைகள் தைத்து உதவி செய்யவும், ஓய்வுநேரங்களில் இராட்டினத்தில் நூல் நூற்கவும் அவைகளைத் துணிகளாக நெய்யவும் கற்றுகொடுத்து வந்தாள்.

நாளடைவில் அவர்கள் நிலமும் செழிப்புற்று நற்பலனைத்தந்தது. வேலையாட்கள் யாவரும் தங்களுக்கு இப்பேருபகாரத்தைச்

செய்ய முன்வந்த உத்தமர் இருவரையும் நினைத்து கடவுளைத் தொழுது வந்தனர். பள்ளிச் சிறுவர் பெற்றோர் பயிரிட்டுச் சேர்த்த பஞ்சினால் நூலை நூற்று துணிகள் நெய்து, தாங்களும் தங்கள் பெற்றோரும தங்களைக் காத்துவரும் உத்தமரும் அவைகளை அணிய பார்த்து மகிழ்ந்து வந்தனர்.

வைதிகத்திலும், நாம் உயர்குலத்தவர் என்ற நினைவிலும் பெருமை கொண்ட அவ்வூர் வாசிகளிற் சிலர் தங்களால் தாழ்த்தப் பட்டவர்கள், தீண்டப்படாதவர்களென்று ஒதுக்கிவைக்கப்பட்டவர் கள் அடைந்த முன்னேற்றத்தைக் கண்டு சகியாமல், இவ்வளவுக் கும் மூலபுருஷனாகிய தியாகராஜனை ஒழித்துவிடுவதே மேலென் றெண்ணி அவ்வூர்வாசியும் போக்கிரியும் பொன்னம்மாள் என்ற 16 வயது சிறுமியின் தகப்பனுமாகிய காட்டேரியை அதற்காக சித்தப் படுத்தி வைத்திருந்தனர். மகாத் தியாகியும் திக்கற்றவர்களுக்கு தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்யக் காத்திருக் கும் தியாகராஜனின் ஜீவனைக் கொல்ல காட்டேரியின் மனம் வைதீ கர்களால் விலைக்கு வாங்கப்பட்டது.

அமாவாசை தினம். கதிரவன் அன்றிரவு நடக்கப்போகும் கொடுஞ் செயலைக் காணச்சகியாதவனாய் மேற்றிசையில் மூழ்கினான். சந்திரன் தன் கண்களால் இப் பாவச்செயலை காண இயலாதவனாய் தன்னிருப்பிடத்தைவிட்டு வெளிவரவில்லை.வானத்தின் நக்ஷத்திரங்கள் இப்பூமியைக் காணவண்ணம் கார்மேகம் மூடிக்கொண்டது. இவை யாவற்றையும் அறியாதவர்களாய் தியாகராஜனும் கமலமும் தத்தம் அறையில் நித்திரை செய்தனர்.

குடிமயக்கத்தால் மதிமயங்கிய காட்டேரி, நடு நிசியில் கையில் கத்தியுடனே கொடுஞ் செயல் புரிய தியாகராஜனின் மனை நோக்கி நடந்தான். ஆனால் உத்தமரை ஆதரிக்கும் தெய்வம் 'துஷ்டனை நிக்ர கம் செய்து சிஷ்டனைப் பரிபாலனம் செய்வது' தான் அவதரித்ததின் நோக்கமாகையால், ஒரு நாகசர்ப்பம் அவனைத் தீண்டும்படி செய்து, உடனே காட்டேரி 'ஐயோ! மோசம் போனேன்' என்று சொல்லி விழுந்தான்.

இச் சத்தத்தைக் கேட்ட தியாகராஜனும், கமலமும் கையில் விளக்குடன் ஓடிவந்து காட்டேரி சர்ப்பத்தால் தீண்டப்பட்டிருப் பதைப் பார்த்து வீட்டிற்குள் தூக்கிச் சென்று சிகிச்சை செய்தனர். காட்டேரியின் மகள் பொன்னம்மாளும் வரவழைக் கப்பட்டாள். தியாகராஜனும் அவன் தங்கையும் செய்த சிகிச்சைகள் பயன்பெறுமற் போகவே காட்டேரியின் மாணகாலம் சமீபமானது. அப்பொழுது காட்டேரி, 'தியாகராஜன், கமலம், பொன்னம்மாள் மூவரையும் தன் பக்கத்தில் அழைத்து தியாகராஜனை நோக்கி, 'ஆ! ஐயனே! வறுமைப்பிணியால் உலகத்தில் நான் அன்புடன் பரிபா

வித்து வந்த என் மகள் பொன்னம்மாளைக் காக்கும்பொருட்டும், வைதீகர்களின் நெஞ்சம் குளிரும்படியும் நான் உம்மைக் கொல்ல வந்தேன். உமக்காக நான் வெட்டினகுழி எனக்கே குழியாக முடிந்தது. என் சகோதரராகிய தாழ்த்தப்பட்டவருக்கு உதவிய உத்தமனே, அறியாமற் செய்த இப்பிழையை மன்னித்து இவ்வுகலவாழ்க்கையை இன்றோடு முடிக்க விடை கொடுப்பீர்' என்று கண்கலங்க மன்றாடினன். பிறகு தன் மகள் பொன்னம்மாளின் காத்தைப்பற்றி தியாகராஜனின் காத்தில் வைத்து 'நீவிர் இவ்வுலகில் இவளுக்குச் செய்யும் உபகாரமே நான் செய்த கொடுஞ் செயலுக்கு தண்டனை' மன்னிப்பீர் என்று சொல்லி ஜீவனை விட்டான். மரணப்படுக்கையண்டையில் இருந்த மூவரும் மிகவும் மனங்கசிந்து கண்ணீர் விட்டனர். அடுத்தநாள் காலை சகல சடங்குகளுடன் காட்டேரியின் தேகம் தகனம் செய்யப்பட்டது. சதிசெய்த ஊராரும் தாங்கள் நாடிய காரியம் ஈடேறுமற் போனதைக்கண்டு துக்கித்தனர்.

காட்டேரி கேட்டுக்கொண்ட வேண்டுகோளின்படி தியாகராஜன் பொன்னம்மாளைத் தன்மனையிலேயே வைத்துப்பாதுகாத்துவந்தான். நாளடைவில் பாரமரிப்பு காதலாக மாறி மணமாக முடிந்தது. இவ்விதமாக ஹிந்து சமூகத்தில் குடிகொண்டிருந்த தீண்டாமைப் பேயை விரட்டியடித்த முதல் வீரனென்ற பட்டத்தையும் தியாகராஜன் அடைந்தான். கமலமும் தன் தமயன் செய்த கலப்பு மணத்தால் மகிழ்ச்சி அடைந்தவளாய் அவர்களை சந்தோஷப்படுத்திவந்தாள்.

இக்கதையில் கண்ட சத்தியங்கள் எப்பொழுதும் என் தாய் நாட்டில் தாண்டவமாடவேண்டும் என்று தவம் செய்து வருகிறேன்.



(ஒரு நாட்டுப்புறத்தான் கிராமபோன் பாடும்போது பார்த்து) 'ஐயோ, வெகு நேரம் கத்துகிறதே, இந்தா கொஞ்சம் காப்பி' என்று பிலேடில் ஊத்தினன்.

கிரா-உடையவர்:— மடையா! என் காப்பியை ஊத்தினய்?

நாட்டுப்புறத்தான்:— பாவங்கசாமி! கழுதை மாதிரி கத்துச்சே தொண்டை வறளுமே.

எஸ். எ. சஞ்சீவி

சரோஜினி அல்லது விதியின் வலிமை

[தேவகோட்டை: வி. இராமனாதன்]

பூரணச் சந்திரன் பொலிவுற்று விளங்கினான். புல், பூண்டு, மண் அனைத்தும் பால் மயம். நீண்ட நெடு மரங்களும் பால் மயம். நீலத்திரைக் கடலும் பால் மயம். அனைத்தும் பால்மயம். இப்படிக்கொத்த இனிய சந்திரிகையின் ஆனந்தத்தை அனுபவிப்பதற்கின்றி அழகுத்திரளான சரோஜினி ஆனந்தபவன மாளிகையில் ஏகாங்கியாக, துக்கமே உருக்கொண்டு தனது மேஜையின் முன் அமர்ந்தவண்ணம், ஒரு கடிதத்தைக் கையில் பிடித்தவளாய், 'இது உண்மைதானா? அவர்பால் கொண்ட காதல்பெருக்கால் அவரே சதமென எண்ணி, எனது அருமைத் தாய், தந்தையர்களையும் அறியாமல் அவரைப் பின்பற்றிவந்த என்னை கைவிட்டுச் செல்வதென்றால் கடவுளுக்குத்தான் ஏற்குமோ? ஒருவேளை இக்கடித விஷயம் அவரின் விரோதிகளின் சூழ்ச்சியாக விருக்கலாமோ? அவரின் அன்பிற்குரிய என்னைப் பிரிந்து அவர் அன்னியநாடு செல்லப்போவதாக இக்கடிதம் கூறுவது எவ்வாறு உண்மையாக விருக்கமுடியும்? என்னைக் கண்டு களிக்காத ஒரு நாள் ஓர் யுகம் போல் தோன்றுமே அவருக்கு. அப்படிப்பட்டவரா என்னைக் கைவிட்டுச் செல்வார்? ஒரு போது மிராது! ஒரு வேளை இப்பாவி சரோஜினியின் துரதிர்ஷ்டவசத்தால் அவர் என்னைக் கைவிட்டுச் சென்றுவிட்டால்........' என்று பலவாறு சிந்தித்து துன்பக் கண்ணீர் வடிக்கும்பொழுது, கதவுதட்டப்படும் சத்தங்கேட்டு, சரோஜினி விரைந்து சென்று கதவின் தாளைத் திறந்து, தனது அன்பின் களஞ்சியமாகிய கமலகாந்தனைக் கண்ணுற்று, மௌனமே குடிகொண்டவளாய், மறுபடியும் தனது மேஜைமுன் அமர்ந்தாள்.

'கண்மணி! ஏன் இவ்வித முகவாட்டம்? யாதுகுறை ஏற்பட்டது?' என்று கூறிய வண்ணம் அவளது கரத்தைப்பிடித்து தனது கன்னத்தி லொத்திக்கொண்டான் கமலாகாந்தன்.

'அன்னிய நாடு சென்றால் அங்கொருத்தியுடன் இன்புற்று வாழலாம் என்றெண்ணி, என்னை இங்கு விடுத்துச்செல்ல எண்ணினீர்கள் போலும்! மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள் என்பது சரிதான்போலும்! தங்களிடம் கொண்ட காதல் பெருக்கால், பெற்று வளர்த்து சீராட்டிய தாய் தந்தையரையும் உணராமல் தங்களைப் பின் தொடர்ந்ததற்கு இதுதான் கைமேல்கண்ட பலன்போலும்! 'எப்பொழுதும் விட்டுப் பிரியேன்' என்று கொடுத்த வாக்குறுதியை எங்கு மறைத்தீர்கள்? ஆடவர்களையே நம்பலாகாது' என்ற விஷயம் உங்களிடம் மெய்ப்பிக்கக் கண்டேன்' என்று தேம்பித் தேம்பி யழுத வண்ணம் மொழிந்தாள் சரோஜினி.

அவளின் தேகம் வியர்த்தது. முகம் துக்கத்தால் வெளுத்தது. கண்கள் சிவந்தன. கண்ணீர் கரை புரண்டது. மேனிவாடியது.

இதனைக் கண்ட கமலாகாந்தன் செய்யும் உபாயம் தோன்றாது திகைத்தவனாய், அவளின் மெல்லிய தேகத்தை தனது வீர மார்புடன் அணைத்து, கைக்குட்டையால் அவளின் வதனத்தில் மெல்லிய காற்று வீசும் வண்ணம் விசிறி, சோர்வுற்ற அங்கங்கைளை சற்றுத் தெளிவடையச் செய்து, 'காதலி! என்ன பிதற்றுகின்றாய்? இக்கட்டுக் கதைகளை உனக்குப் புகட்டியவர்கள் யார்?' என்றான்.

'ஆம், ஆம்! இக்கடிதத்தைச் சற்றுக் கவனித்தால், நான் பிதற்றினேனா அல்லது நீங்கள் தான் என்னை இப்பொழுது திருப்திப் படுத்தும் பொருட்டு, இவ்விதம் பசப்புகின்றீர்களா வென்பது புலனாகும்' என்றாள்.

கடிதத்தை ஆதிமுதலந்தம்வரை வாசித்த கமலாகாந்தன், இக்கடிதத்தை எச் சண்டாளன் வரைந்து எனது காதல் களஞ்சியத்தின் மனதைப் புண்படுத்தினனோ வென்று சிந்தித்தவனாய், 'ஓகோ! இதற்குத்தானா இவ்வளவு வருத்தம். நான் மேல்நாடு செல்லப்போவது வாஸ்தவந்தான்! ஆனால் நான்மட்டு மல்ல; என்னுடன் என் அன்பைக் கொள்ளைகொண்ட மற்றொரு மாதையும் அழைத்துச் செல்லப் போகின்றேன்' என்றான்.

இதனைச் செவிமடுத்த சரோஜினி, கோபத்தால் கண்கள் பொங்கியெழ 'தாங்கள் அழைத்துச்செல்ல வெண்ணிய, 'அச்சக்களத்தி யார்' என்றாள்.

'அவள்தான் என் இருதயத்தைக் கொள்ளைகொண்ட ச....ரோ ...ஜி...னி' என்றான். உடனே சரோஜினியின் முகம் அன்றலர்ந்த தாமரையுடன் போட்டிபோட்டது. புன்னகை தவழ்ந்தது.

* * *

ஓர் நாள் நள்ளிரவு ரயில்வண்டியொன்றில், ஒரு யௌவனக் கட்டழகியும், அவளுக்கேற்ற ஓர் ஆடவனும் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தனர். அவர்கள் கமலாகாந்தனும் சரோஜினியும் தவிர வேறு யாராக விருக்கக்கூடும்? சுமார் 3 மணியிருக்கலாம். சரோஜினி கண் விழித்தாள். என்னே அவள் கண்ட கோரக்காட்சி. தனது ஆருயிர்க் காதலன்—கமலாகாந்தன் நித்திரை செய்து கொண்டிருந்த விடத்தில், தலையற்ற ஓர் பிரேதம் கிடக்கக் கண்டாள். மனம் பதைத்தாள். வாடினாள்; விம்மினாள். அப்பிரேதத்தை ஆராய்ந்தாள். அடையாளம் ஒன்றும் தென்படவில்லை. ஓவென ஓலமிட வெண்ணினாள். ஆனால் ஆபத்தாய் முடியுமெனக் கருதினாள். இனியும் தான் தாமதிப்பின் தன்னிலை அபாயமாகுமென்றெண்ணி அடுத்த ஸ்டேஷனில் மெல்ல நழுவி நடந்தாள். தன் கால்களின் போக்கின்படி தனது மனதையும் விடுத்தாள்.



சற்றுத் தூரத்தில் மூன்று நான்கு ஆட்கள் தொடர்ந்து ஓடி வரும் சத்தங்கேட்டு, பிரமித்து, கால்கள் நடுங்க, தன்கதி யாதாகுமோ வென்றெண்ணி பல பல நினைந்தாள். ஓடிவந்தோர், களங்கமற்ற அவளைக் கைப்பிடியாய்ப் பிடித்து, 'அடி பாதகி! என்ன ஆணவம் உனக்கு? ஒரு ஆடவனைக் கொலைசெய்ததுமன்றி என்ன நிஷ்களங்கமாக விழிக்கின்றாய்! கள்ளி' எனக்கூறி கபடமற்ற சரோஜினியைப் பெரிய போலீஸ் அதிகாரிமுன்பு கொண்டுபோய் நிறுத்தினர்.

அந்தோ! அவளின் பரிதாப நிலையைக்காணச் சகியாமல் கொடிய இரவும் மறைந்தது. குற்றமற்ற சரோஜினி குற்றவாளி என குற்றம் சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டாள். அடைபட்ட சரோஜினி, 'அந்தோ! என் கதி இவ்வாறும் ஆகுமோ? உயர்ந்த

குடும்பத்தில் பிறந்தேன். நான்கொண்ட காதல் பெருக்கால், அரும் பாடுபடுபட்டுப் பெற்றெடுத்த அன்னையையும் பிதாவையும் அறவே மறந்து, அவ்வுத்தமக் காதலரைப் பின்பற்றினேன். ஐயோ! என் தலைவிதி இவ்வாறும் ஆகுமோ! அன்னிய நாட்டிற்கு ஆனந்த யாத்திரை செய்யுங்காலையில் இக்கோர சம்பவம் நிகழவும் போமோ !

ஆ! என்செய்வேன்? அவர் எப்பாவியால் கொலை செய்யப்பட்டாரோ? குற்றமற்ற பாவியாகிய நான் நாதனை இழந்ததுமட்டுமின்றி கொலைகாரி என்றும் குற்றம் சாட்டப்பட்டேன்! என்ன அநீதியிது? குற்றமொருவர் புரிய மற்றவரை வதைக்கும் இப்பாழும் உலகில், அதிலும் ஆருயிர் நாதனை இழந்தபின்பு, இவ்வுயிர் இப்பாழும் உடலில் தரித்திருப்பதினால் யாது பயன் ? ஏ! ஜெகன் மாதவா! லோகேஸ்வரி! நீ இருப்பது வாஸ்தவமானால், துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலினி என்பது வாஸ்தவமானால், உண்மைக்கொலையாளியை இவ்வுலகிற்கு காட்டி, ஏழைச் சரோஜினி நிரபராதி என்று நிரூபிப்பாயாக இதோ இவ்வேழையின் உயிரைப் பெற்றுக்கொள்' என வாய்விட்டுக் கூறி தனது இடையிலிருந்த மடக்குக் கத்தியை எடுத்து விரித்து, தனது மார்புக்கு நேராக ஓங்கும் சமயம், 'ஏ சரோஜினி! வேண்டாம் வீண்பழி! நிறுத்து' என்று கூறியவண்ணம் ஓர் ஆண் உருவம் தோன்றியது.

இதனைக்கேட்ட சரோஜினி, திடுக்கெய்தி 'ஐயோ! இதென்ன! இவ்வுருவம் என் காதலரை யொத்ததாக விருக்கின்றதே! ஒருவேளை அவர் கொலையுண்ட காரணத்தால் பேயாய்த் திரிகின்றாரோ என்னவோ? ஐயோ! தெய்வமே! இதுவும் உன் சோதனையின் கொடுமை போலும்!' என்று கூறியவண்ணம் அடியற்ற நெடுமரம்போல் மண்மிசை வீழ்ந்து மயக்கமுற்றாள்.

பின்பு கண்விழித்தாள். தான் மறுபடியும் தனது ஆனந்தபவன் மாளிகையில் காதலன் கமலாகாந்தனின் செவ்விய தொடையில் தனது சிரசை வைத்து சயனித்திருப்பதை உணர்ந்து, தான் காண்பது உண்மையில் கமலகாந்தனே என்று தேறித் தெளிந்து, 'அன்பே!' என்றாள்.

'ஆருயிர்க் காதலி ! பயமின்றிப் பேசு. தைரியத்தைக் கைவிடாதே' என்றான் கமலாகாந்தன்.

'சிறையில், மூர்ச்சித்து வீழ்ந்த நான் எவ்வாறு இங்குகொண்டு வரப்பட்டேன்? ரயில் வண்டியில் கொலையுண்டு கிடந்த ஆண்மகன் யாவன்? சகல விருத்தாந்தத்தையும் சவிஸ்தாரமாய்ச் சொல்லுங்கள்' என்று தனது முத்தாரம் போன்ற பல் வரிசை தோன்ற கொஞ்சிய வதனத்துடன் கேட்டாள்.

• • •

'நாம் ரயில் வண்டியில் ஏறிய சற்று நேரத்தில், இருவரும் அயர்ந்த நித்திரையிலாழ்ந்தோம். இரண்டு ஸ்டேஷன்களை யடுத்து நான் கண்விழித்தபோது எனது ஜன்ம விரோதியாகிய மாதவன் உனதருகில் அமர்ந்தவண்ணம் என்னை நோக்கி ஓங்கிய வாளுடன் விளங்கினான். உடனே திகில் கொண்டேன். அவனின் வாளுக்கு அவனையே இரையாக்கினேன். பின்பு உன்னைக் கவனித்தபொழுது உயிரற்ற பிணம்போல் கிடக்கக் கண்டேன். ஒருவேளை அப்பாதகனால் மயக்க மருந்திடப்பட்டிருக்கலாமென்பதை இப்பொழுது யூகித்தறிந்தேன். எனது வாழ்நாளில் முக்கியமாக நான் வேருடன் களைய வெண்ணிய விரோதியிடமிருந்து வெற்றி பெற்றேனாயினும், எனதன்பின் களஞ்சியமாகிய நீ இறந்தபின், இவ்வுலக வாழ்வின் சுகத்தை வெறுத்து, எனது உயிரை மாய்த்துக்கொள்ளும் பொருட்டு வண்டியினின்றும் குதித்தேன். ஆனால் காயமொன்றும் ஏற்படவில்லை. இச்செய்கையை எவ்வாறோ, அறிந்த ரயில்வண்டி கார்டு அபாய சங்கிலியை இழுத்து, வண்டியை நிறுத்தி என்னை ஒரு கள்வனென மதித்து, வண்டிப் பிரயாணிகளிடம் 'ஏதாவது களவு போயிற்றா?'வென்று விசாரித்து வரும்பொழுது, நாம் இருந்த வண்டிக்கு இரண்டு வண்டிகளுக்கு முன்பிருந்த ஒரு தனவந்தரின் பணப்பை காணாமற் போனதாக அறிந்து, என்னை அக்குற்றத்திற் குட்படுத்தி, சிறையிலடைத்தனர். நமது அதிர்ஷ்டவசத்தால் நாம் இருவரும் அடைபட்டிருந்த அறைகள் அடுத்தடுத்திருந்தன. தெய்வ சங்கல்பத்தால் நீ கூறிய சில வார்த்தைகள் எனது காதில் விழவே, எனது பலத்தால் உன் அறைக்குள் வந்தேன். ரயிலில் கண்ட பிரேதம் நானென நீ எண்ணியதினால், திடீரென என்னைக் கண்டதும் நீ மூர்ச்சித்து வீழ்ந்தாய். உடனே, எனது பலத்தாலும் முயற்சியாலும் சிறைக்காவலனை வயப்படுத்தி உன்னை இங்கு கொணர்ந்தேன். இனி நாம் இங்கிருப்பின் அபாயம் சம்பவிக்கும். ஆதலின் இப்பொழுதே பக்கத்து கிராமாந்தரங்களுக்குப்போய் தலைமறைவாய் வாழ்வது மேல்' என்று கூறினான். பிறகு அவர்கள் அவ்வாறே செய்தனர். இப்பொழுது லக்ஷ்மிகாந்தம் என்ற ஒரு ஆண் மகவிற்கு பெற்றோராக இன்புற்று வாழ்கின்றனர்.

பொதுப்பணி புரிமின் !

[சாமி சிதம்பரனர்]

(நொண்டிச் சிந்து)

1. அன்பை மனங்கொள்வோம்—இந்த
அவனியில் வாழ்ந்திடும் உயிர்கள் எல்லாம்
துன்பம் அடைதலின்றி—என்றும்
தொடர்ந்திடும் நலம்பல பெற்றிருந்தே
இன்பம் அனுபவித்தே—நன்ருய்
இருப்பதற் காணபல் பணிபுரிவோம் !
நண்பீர் ! இதுதேர்வீர் !—மேன்மை
நல்கிடும் பொதுஜன ஊழியமே.

2. சாதி களின்பெயரால்—தீய
சண்டைகள் செய்வதை விட்டொழிப்போம் !
பேதங்கொள் மதங்களினல்—நாமும்
பிரிவினை கொண்டிங்கு துயருழுருேம் !
நீதிகள் யார்க்கும் ஒன்ருய்—நின்று
நிலவிடும் படிபணி செய்துழைவோம் !
ஓதுங்கள் மனிதரெலாம்—உலகில்
ஒருகுலம் ஆகுவர் எனும்மொழியே.

3. பஞ்சமும் நாட்டினிலே—தோன்றிப்
பரவிட வழியின்றித் தடைசெய்வோம்
கொஞ்சமும் சுயநலமே—இன்றிக்
கொடுஞ்செயல் மனத்தினில் கருதல் இலோம் !
தஞ்சம் எனவருவோர்—தங்கள்
தளர்வினைத் தவிர்த்துநல் இடம்அளிப்போம்
அஞ்சும் வழக்கமின்றி—என்றும்
ஆண்மைகொண் டருஞ்செயல் பலபுரிவோம் !

4. மக்கள் உயர்வாழ்வே—இந்த
மாநிலத் தொருவருக் கொருவர்செய்யும்
மிக்க உதவியினுல்—என்றும்
மேன்மையை அடைந்திடும் இதுமெய்யே !
தக்கவை இவையென்றும்—செய்யத்
தகுதியற் றவைஇவை எனவுணர்ந்தும்
பக்குவம் ஆனவைகள்—தம்மைப்
பகுத்தறிந் தியற்றுதல் மனிதர்கடன்

5. வெப்பந் தனிற்களைத்தோர்—தண்ணீர்
வேட்கையைத் தணிக்கின்ற குளமெனவே
ஒப்பரும் நிழல் அளித்தே—அவர்
உளத்தினை மகிழ்செய்யும் மரம்எனவே
இப்புவி தனிற் பிணியால்—பெரும்
ஏழ்மையால் வருந்துறும் மனிதர்கட்கும்
தப்பற நலம்புரிதல்—இந்த
தரணியில் அறிஞர்தம் கடன்ஆமே.

6. ஒற்றுமை கொண்டுழைத்தால்—மிகவும்
உயர்ந்துள மலையையும் புரட்டிடலாம் ;
சற்றுமே தடையின்றி—பெரிய
சாகரந் தனைத்தரை யாக்கிடலாம்
பெற்றிட லாம்மகிழ்வே—இந்தப்
பெற்றிமை தனைமறந் திடல் வேண்டும் ;
கற்றதன் பயனிதுவே—என்று
காசினி எங்கணும் முழங்கிடுவோம்.

ஆதிலக்ஷிமி அல்லது
உண்மைக் காதலி

[வி. ஜி. ஜெயராம்]

தோடுடையே செவியன்விடை யேறியோர் தூவென்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வ,
னேடுடைய மலரானுனை நாட்பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே.

என்ற இனியதொனி ஒரு தோட்டத்தின் மூலையிலிருந்து வந்துகொண்டிருந்தது. அகன்றமார்பும், விசாலமான நெற்றியும், தற்கால நாகரிக உடையும் அணிந்த சுமார் 20 வயதுக்கு மேற்படாத ஒரு வாலிபன் அந்தப் பாடலைக்கேட்டுக்கொண்டே அத்திசையை நோக்கிச்சென்றான். அங்கே 14 வயது உள்ள ஒரு சிறுமி ஒரு ஊஞ்சலில் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவளைக் கண்ட வாலிபன் இத்தனை அழகுடைய பெண்ணும் பூலோகத்தில் இருக்கின்றாளா? என்ன அழகு! இவளது—கண்களையும், இடையையும் தாமரை போன்ற கலங்கமில்லா முகத்தையும் வர்ணிக்கத்தான் நம்மால் ஆகுமோ!

வண்டோ எனும் விழியாள்—வளை
வில்லோ எனும் நுதலாள்
கண்டோ எனும் இதழாள்—உயர்
கமுகோ என்னும் கழுத்தாள்
வண்டோ என்னும் தனத்தாள்(?)—விரி
கதிரோன் மிகும் ஒளியாள்
உண்டோ எனும் இடையாள்—அதி
உத்தமி இவளாரோ.

என்று நான் படித்த பாடலுக்கும், இவளழகுக்கும் ஒத்திட்டுப் பார்த்தான், பாடலில் கூறி இருப்பதில் சிறிதும் தவறில்லை. இவள் யாரென்று அறிய முடியவில்லையே. இவள் இங்கிருப்பதின் காரணம் என்ன? என் மாமனுக்குப் பிள்ளைகள் ஒன்றுமில்லை. அப்படியிருக்க அவர் தோட்டத்தில் உட்கார்ந்திருக்கும் இவள் யார்? ஒருக்கால் என் மாமனுடைய நண்பர்களில் ஒருவரின் மகளாய் இருக்குமோ? இல்லை, இல்லை. அப்படி இருக்க முடியாது. நண்பர் மகளாய் இருந்தால் வீட்டிற்கு வந்திருப்பாளே' என்று தனக்குள் கூறிக்கொண்டே அவளிருக்கும் இடம் சென்றான்.

மனிதர் காலடிச் சத்தத்தை கேட்டதும் அப்பெண் திடுக்கிட்டு எழுந்தாள். வாலிபனைக்கண்டதும் நாணித் தலைகுனிந்தாள்.

வாலிபன்:—'பெண்ணே, நீ யார்? உன் பெயர் என்ன? உன்பெற்ளேர் கள் பெயர் என்ன?' என்று கேட்டுக்கொண்டே ஊஞ்சலில் உட்கார்ந்து, பெண்ணையும் ஒரு பக்கத்தில் உட்காரும்படி வேண்டினன்.

பெண்:—'ஐயா! என் பெயர் ஆதிலக்ஷிமி, என் தகப்பன் பெயர் தியாகராஜ முதலியோர். அதோ இருக்கும் சிறு வீட்டில் நாங்கள் குடியிருக்கிறேம்' என்ருள்.

வாலிபன்:—'நீங்கள் வந்து எத்தனை நாட்கள் ஆகிறது?'

பெண்:—'நாங்கள் ஒரு வருடகாலமாக இங்கிருக்கிறேம். என் தகப்பனர் உபாத்தியாயர் வேலையில் இருக்கிருர். அவர் கட்டளைப்படி நான் எங்கும் செல்வதில்லை. என் தாயார் நான் சிறுமியாக இருக்கும் பொழுதே காலகதி அடைந்தாள்' என்று கண்களில் நீர் கலங்க உரைத்தாள்.

'பெண்ணே வருந்தாதே! கடவுள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு கஷ்டத்தை வைத்திருக்கிருர். உன்னைக் காப்பாற்ற உன் தகப்பனர் இருக்கிருர். நானும் யாருமற்றபாவிதான். நான் 5 வயதில் தாயையும், 12 வயதில் தகப்பனையும் இழந்தேன். இப்பொழுது என் மாமனுடன் காலம் கழிக்கிறேன். நான் சென்னையில் படித்துக்கொண்டிருப்பதால் இங்கு வருடம் ஒரு தடவை விடுமுறையின்போது வந்துபோவேன். இப்பொழுது இங்கு வந்து ஒருவாரம் ஆகிறது. இன்னும் ஒரு மாதத்தில் புறப்பட்டுச் செல்ல வேண்டும். இவ்வருடம் பி. ஏ. பாஸ் செய்துவிட்டால் ஏதாவது வேலை பார்க்கவேண்டும். என் மாமனே தற்புகழ்ச்சி உள்ளவர். அவரைவிட்டு எப்பொழுது நீங்கலாம் என்ற எண்ணம் என் மனதில் உறுத்திக்கொண்டிருக்கிறது' என்ருன் கமலசேகரன் என்னும் பெயர்கொண்ட அவ்வாலிபன்.

ஆதிலக்ஷ்மி:—'ஐயா! உங்களுடைய மாமனுக்கு குழந்தைகள் இல்லையோ?' என்ருள்.

கமலசேகரன்:—'இல்லை, அதனல்தான் என்னைப் பாதுகாத்து வருகிருர். அநேகமாக என்னுடைய 'ரிசல்ட்' நாளையதினம் தெரிந்துவிடும். கடவுள் எப்படி விடுவாரோ,' என்று வருத்தத்துடன் கூறினன்.

ஆதி:—'ஐயா! வருந்தவேண்டாம். தங்களுக்கு நற்செய்தி கிடைக்கும்.'

கமலசே:—'அப்படி நற்செய்தி கிடைத்தால் எனக்கு என்ன பரிசு அளிக்கப்போகிருய்?'

ஆதி:—'தாங்கள் அல்லவோ சந்தோஷத்திற்கு அறிகுறியாக நான் கேட்கும் பரிசைத் தரவேண்டும்.'

கமல:—'ஆம்! நீ கேட்கும் பரிசை நான் கொடுக்க வேண்டியதுதான். நான் கேட்கும் பரிசை நீ கொடுப்பாயா?'

ஆதி:—'கட்டாயம் தருவேன். நேரமாய்விட்டது; இராச் சாப்பாடு தயார் செய்யவேண்டும். தகப்பனூர் வரும் வேளையும் ஆகிவிட்டது. தாங்கள் நாளையதினம், இங்கு வருவீர்களா?'

கமல:—'அப்படியே வருகிறேன்' என்றுகூறி அவளை அனுப்பிவிட்டு, வெகுநேரம் அவள் செல்லும் நடையின் அழகினை பார்த்தபடியே உட்கார்ந்திருந்தான்.

II

மறுநாள் மாலை நான்கு மணிக்கே, நாம் மேற்கூறிய தோட்டத்தின் ஊஞ்சலின்மேல் ஒரு வாலிபன் உட்கார்ந்துக்கொண்டு யார் வரவையோ ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். நெடுநேரம் காத்திருந்தும், தான் நாடி வந்தவரை காணுததால், சோர்வுற்றுப் படுத்தான். அவன் மனதில் ஏதேதோ எண்ணங்கள் உதித்தன. அவன் பார்வை சில சமயங்களில் ஆகாயத்திலும், சில சமயங்களில் பூமியிலும் மாறி மாறி விழுந்துகொண்டிருந்தது. தன் தலைப்பக்கம் யாரோ வரும் ஓசையைக்கேட்டு எழுந்தான். அங்கு ஒரு யுவதி நின்றுகொண்டிருந்தாள். அவள், 'அதிகநேரம் காத்துக்கொண்டிருக்கிறீர்கள் போல் இருக்கிறது' என்ருள்.

கமல:—'இப்பொழுதுதான் வந்தேன். நீ ஏன் இவ்வளவு நேரம்......

ஆதி:—'என் வரலாற்றை பிறகு தெரிவிக்கிறேன். தங்கள் 'ரிசல்ட்' என்ன?'

கமல:—'நான் இவ்வருடம் ராஜதானியில் முதலாவதாக தேறினேன். உனக்கு என்ன பரிசு வேண்டும்?'

ஆதி:—நான் கேட்கும் பரிசை உங்களால் கொடுக்க முடியும். மறுக்க மாட்டீர்களே?'

கமல:—'கட்டாயம் தருவேன்'

ஆதி:—(அவன் அருகில்சென்று) 'தங்களை பிரியாதிருக்கும் வரம்வேண்டும்' என்று அவன் பாதங்களை பிடித்துக்கொண்டு வேண்டினுள்.

கமல:—'நீ கேட்டதின் கருத்தென்ன? எனக்கு விளங்கவே இல்லையே?'

ஆதி:—'நான்.........நான் தங்களை காதலிக்கிறேன். தங்களையே என் கணவராக மதிக்கிறேன்.'

கமல:—'கண்ணே! நீ கேட்ட வரத்தைக் கொடுத்தேன்' என்று அவளை தூக்கி முத்தமிட்டு தன் அருகில் உட்காரவைத்துக்கொண்டு 'கண்மணி! நீ கேட்ட வரத்தைக் கொடுத்தேன். இப்பொழுது நான் கேட்கும் வரத்தை கொடுப்பாயா?'

ஆதி:—'அன்பரே தங்களுங்கு என்ன வரம் வேண்டும்?'

கமல:—'நீ என்னைவிட்டுப் பிரிவதில்லை என்று வாக்குறுதி செய்.'

ஆதி:—'இன்னும் சந்தேகமா? தங்களால் இன்று தீண்டப்பட்ட இத் தேகம் என்றும் தங்களுடையதே. வேறு ஒருவரையும் தீண்டும்படி

விடேன். அப்படி நேர்ந்தாலும் என் பிணத்தைதான் தீண்டவேண்டும்" நாதா! அதோ என் தகப்பனுர் வந்துவிட்டார். நான் சென்று வருகிறேன்., என்று எழுந்து தன் வீட்டிற்குச் சென்ருள்.

இப்படிச் சில நாட்கள் சென்றன. ஒருநாள் கமலசேகரன் துன்பமே வடிவாகக்கொண்டு ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தான். அடிக்கடி முணு முணுப்பதும் பெருமூச்செறிவதுமாக இருந்த அவனை ஆதிலக்ஷ்மி உற்றுக் கவனித்து, தன் வீட்டைவிட்டு அவ்விடம் வந்தாள். அவளைக் கண்டதும் அவன் கண்களில் நீர் மளமளவென உதிக்க ஆரம்பித்தது. இதைக் கண்ட ஆதிலக்ஷ்மி தன் கண்களில் நீர் பெருக, 'அன்பரே! என் இப்படி புலம்புகிறீர் கள், வருந்தாதேயுங்கள். நீங்சள் புலம்புவதின் காரணம் என்ன?" என்று அவன் காங்களைப் பற்றிக்கொண்டு கெஞ்சியவண்ணம் கேட்டாள்.

கமல:—'கண்ணே! நான் பெரும்பாவி. நான் உனக்கு சில நாட்களுக்கு முன் கொடுத்த வாக்கினின்று தவறிவிட்டேன். இல்லை, இல்லை, அது ஒருக் காலும் முடியாது. உனக்கு கொடுத்த வாக்கைத் தவறமாட்டேன். அதைவிட என் மாமனை விட்டுப் பிரிவேன்' என்று துக்கத்துடன் மொழிந்தான்.

ஆதி:—'நாதா ! என்ன தாங்கள் கூறுவது ஒன்றும் புரியவில்லையே. சற்று விவரமாகக் கூறுங்கள்.'

கமல:—(தன் துக்கத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு) 'கண்மணி! எனக்கு என் மாமன் வேறு ஒரு பெண்ணை மணம் செய்ய கருதி இருக்கிருர். அவள் ஜமீன் கற்பூரசுந்திர முதலியாரின் மகள், ஐயோ! உன்னையன்றி நான் வேறு பெண்ணை மணக்க விரும்புவேனே! விரும்பேன், விரும்பேன், கையால் தொடவும் மாட்டேன். எனக்கு தாயாவது, தகப்பனுவது இருந் தால் என் பிரியப்படி நடப்பார்கள் அல்லவா? தெய்வமே! 'தாயற்றபோதே சேற்றுப்போம்' என்பதற்கிணங்க, என்தாயும், தந்தையும் இறந்த பிறகு நான் பல கஷ்டங்கள் அனுபவித்தேன். ஏன் இன்னும் என்னைச் சோதனை செய் கிருய்? அனுதரக்ஷகா, ஆபத்துபாந்தவா, நீயே கதி. இவ்வேழையைக் காப் பாற்றவேண்டும்! என்மாமனை விட்டுப்பிரிவேனே தவிர அந்த ருக்குமணியை மணம்புரியேன். ஆதிமூலமே! அண்டினேரை ஆதரிக்கும் ஐயனே! என்மேல் இரக்கம் வைக்கக்கூடாதா' என்று கூறி மூர்ச்சித்து கீழே விழுந்தான்.

அவன் கீழே விழுந்ததைக் கண்ட ஆதிலக்ஷ்மி பதறி, கண்களில் நீர்வடிய அவனைத் தூக்கித் தன்மேல் சாற்றிக்கொண்டு, முந்தாணையால் விசிறி அவன் களையைப் போக்கினுள். கண்விழித்த கமலசேகரன் தன் காதலி வருந்து வதைக் கண்டு சகிக்காமல் எழுந்து அவளை தன் மார்புடன் சேர்த்தணைத்து முத்தமிட்டு, 'கண்ணே ! கலங்காதே. உன்னையன்றி வேறு ஒருவரையும் கண்ணெடுத்துப் பாரேன். நீ வருந்தாதே. உனக்கு வீணில் துன்பம் உண் டாக்கினேன்,' என்று அவளைத் தேற்றி சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந் தான்.

அப்பொழுது அங்கு புதரில் மறைந்திருந்த உருவம் ஒன்று தனக் குள்ளாக, 'அடீ கள்ளி! உன் அத்தானுகிய என்னை மணக்க மறுத்துவிட்டு ஏழ்மையே விரதமாகப்பூண்ட அந்த அற்பப் பயலையா விரும்புகிருய்? உங்க ளுக்குத் தகுந்த தண்டனை விதித்து, நீ என்னை மணக்கும் மார்க்கத்தைத் தேடுகிறேன். அப்படி யில்லையாகில் நான் ராமநாதன் என்ற என்னுடைய

பெயரை மாற்றிக்கொள்ளுகிறேன்' என்று கூறிச் சென்றது. காதலர்கள் உத்தரவு பெற்றுக்கொண்டு தத்தம் இல்லம் சென்றனர்.

III

இது நிற்க, ஒரு பெரிய பங்களாவில் சுமார் ஐம்பது வயதுடைய ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். அவர் முன் 21 வயதுடைய ஒரு வாலிபன் நின்றுகொண் டிருந்தான். அவன் 'மாமா! தங்கள் வார்த்தையை தட்டிக் கூறுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும். நான் அப்பெண்ணை மணந்து கொள்ள மாட்டேன். அதைவிட இவ்விதமே காலங் கழிப்பேன்' என்றான்.

உடனே பெரியவர் கோபத்துடன் 'அடே! என்ன சொன்னாய், என் வார்த்தையைத் தட்டி நடக்க ஆரம்பித்துவிட்டாயா? அவளுக்கு என்ன குறை, மிக்கபணக்காரி, புத்தியுள்ளவள், அழகில் இந்திராணிக்கு ஒப்பானவள்' என்றார்.

'ஆம், ஆம், எல்லாம் வாஸ்தவம்தான். அழகில் ராணிதான். புத்தியோ சொல்லவேண்டியதில்லை. கெட்ட எண்ணத்திலும் கோட்சொல்லுவதிலும் குறைச்சல் இல்லை. தானே அழகியென்ற தற்புகழ்ச்சியுடையவள். பணக்காரியாதலால் சிறிதும் அச்சமின்றி ஆடவர் முன் நின்று சிரிப்பதும், அடிக்கடி தலையை கோதிக்கொள்வதும், மரியாதை இல்லாமல் பேசுவதும், ஏழைகளைத் துன்புறுத்துவதுமான அத்தகைய கொடியவளையா மணம் புரிந்துகொள்ள வேண்டும்? மாமா! சிறிது யோசனை செய்து பாருங்கள். எதையும் தீரவிசாரித்துச் செய்யுங்கள். நேற்று அவள் குணங்களை நன்கு அறிந்தேன். என் நண்பன் சங்கரனும் எனக்கு அவள் குணங்களைப்பற்றி கூறினான்' என்றான் கமலசேகரன்.

'அடே, நீயா என் நண்பரின் புதல்வியை குறைகூறுவது. துஷ்டா! உன் நாவையடக்கு. அவளைப்போல் கௌரவமுள்ளவர்கள் வேறு யாரும் கிடையாது. உன்னை நான் காப்பாற்றி வருகிறேன் என்பதை மனதில் வை. நன்றாக யோசனை செய்து பதில் சொல். வீணே பதறாதே!' என்றார் சிவசங்கர முதலியார் என்ற அப்பெரியோர்.

கமல:—'மாமா! நான் யோசனை செய்து பார்த்துவிட்டேன். நீங்கள் கூறியபடி ருக்மணி கௌரவமுள்ளவள் அல்ல. கர்வம் உள்ளவள் என்று சொல்லுங்கள். அவள் குணம் உங்களுக்கு பிறகு தெரியவரும். அவளை மணக்க மாட்டேன், இது நிச்சயம்.'

சிவசங்க:—'அடே! துன்மார்க்கா, இங்கு நிற்காதே. இவ்விடத்தை விட்டுப் போ, இனி உனக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை, போ, வெளியே,' என்று அவன் கழுத்தைப் பிடித்து தள்ளிக் கதவைச் சாற்றிக் கொண்டார்.

சிவசங்கர முதலியாரால் தள்ளப்பட்ட கமலசேகரன் வருத்தத்துடன் தன் அறைக்குச் சென்று கண்களில் நீர்வடிய கண்ணாடிமுன் நின்று தன் உருவை நோக்கினான். தன்னுடைய சட்டைகளைக் கழற்றி அங்கிருந்த 'ஸ்டாண்டில்' மாட்டிவிட்டு தன் தகப்பனாருடையதும் மிக்க பழைமையானதுமான ஒரு உடையை உடுத்திக்கொண்டு அங்கிருந்து மிக மனவேதனையுடன் தோட்டத்திற்குச் சென்று ஊஞ்சலின்மேல் உட்கார்ந்தான்.

இதாவிற்க, ஒரு சிறு வீட்டில் 14 வயதுடைய பெண்ணும், 40 வயதுடைய தியாகராஜ முதலியாரும் உட்கார்திருந்தார்கள்.

தியாக:—'குழந்தாய்! ஆதிலக்ஷ்மி, உனக்குத் தகுந்த வயது வந்துவிட்டது. நீ உன் மாமன் மகன் ராமநாதனை மணந்துகொள்வதுதானே. உன் இஷ்டமென்ன? சொல். அவனும் இங்கு வந்திருப்பதால் அதற்குத் தகுந்த முயற்சி செய்கிறேன். அவனும் பெரிய பணக்காரன். நீ யாதொரு கஷ்டமும் இல்லாமல் இருக்கலாம். வெட்கப்படாமல் சொல்.'

ஆதி:—'அப்பா! நான் ஒன்று சொல்லுகிறேன். கோபிக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன்' என்றாள். இவ்வார்த்தை அவரை வருத்தத்தில் ஆழ்த்தியது.

தியாக:—'குழந்தாய்! உன் மனதிற்கு மாறாக நான் நடக்கமாட்டேன். தைரியமாகச் சொல்.'

ஆதி:—'அப்பா! என் தாயார் இறந்தபிறகு நான் தங்கள் வார்த்தையை மறுக்காமல் நடந்து வந்தேன். அப்படியிருந்தும் தங்கள் வார்த்தையை மீறி அதோ இருக்கும் தோட்டத்திற்கு ஒருநாள் போயிருந்தேன்.........அங்கிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்திருக்கையில் ஒரு வாலிபர் அங்கு வந்தார். அவர் ஜமீன்தாரின் தமக்கை புதல்வர். தாய்தந்தையரை இழந்து இப்பொழுது மாமன் ஆதாரவை நாடி இருக்கிறாராம். அவர் பெயர் கமலசேகரனும்......... என்று மேலே கூறுவதற்குள்,

தியாக:—'என்ன, கமலசேகரரா? ஜமீன் சிவசங்கர முதலியார் வீட்டில் இருப்பவர்தானே. ஆ! கடவுளின் அருள் இருந்தவாறென்னே! அம்மா! அவரை நான் அறிவேன். மூன்று நாட்களுக்கு முன் நான் பள்ளிக்கூடத்திற்குப் போகும்பொழுது இருவர் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் காரை வேகமாக ஓட்டிக்கொண்டு போனார்கள். இன்னும் ஒரு வினாடியில் கார் என் மேல் ஏறி இருக்கும். அப்பொழுது கமலசேகரர் தன் உயிரைத் திரணமாக மதித்து என்னைக் காப்பாற்றினார். அப்பொழுது அவர் வரலாற்றை அறிந்தேன்.'

ஆதி:—'இதைப்பற்றி அவர் ஒன்றும் கூறவில்லை. நான் அவரையே என் காதலராக வரித்திருக்கிறேன்' என்று கூறி வெட்கத்தால் தலை குனிந்தாள்.

தியாக:—'அம்மா! ஜமீன்தாரோ பெரிய பணக்காரர். அவர் தன் மருகனுக்கு உன்னை மணம் செய்ய இஷ்டப்படுவாரா? இன்னும் சில நாள் பொறு. கடவுள் உன்னைக் கைவிடார்! என்று கூறிக்கொண்டிருக்கும் பொழுது, ராமநாதன் உள்ளே நுழைந்தான்.

ராம:—'மாமா! என்ன யோசனையுடன் இருக்கிறீர்கள். தங்கள் புதல்வியை எனக்கு மணம்செய்து கொடுக்கமாட்டீர்களா?'

தியாக:—'அப்பா! இன்னும் சிலநாட்கள் போகட்டும், பிறகு பார்ப்போம்.'

ராம:—'இன்னும் சில நாட்கள் போகவேண்டுமா? உங்கள் எண்ணமெல்லாம் எனக்குத் தெரியாதென்று நினைக்கிறீர்கள்? அவன் கமலசேகரனை

இச்சித்திருப்பது எனக்குத் தெரியும். எனக்குப் போட்டியாக நிற்கும் அவனை உயிருடன் விடேன்' என்று கோபத்துடன்கூறி வெளியே சென்றான்.

IV

காலை மணி பத்திருக்கும். ஆதிலக்ஷ்மி குளித்துவிட்டு பூஜை செய்து கொண்டிருந்தாள். அப்பொழுது கதவு தட்டும் சப்தம் கேட்டுக் கதவைத் திறந்தாள். தன் அன்பன் முகம் மாறுபட்டு பழமையான உடைகளை உடுத்திருப்பதைக் கண்டு அன்புடன் உள்ளே அழைத்துச் சென்று கொஞ்சம் பலகாரம் கொடுக்க அவன் அதை உட்கொள்ள மனமில்லாமல் கொஞ்சம் உண்டான். பிறகு 'கண்ணே, என் மாமன் வீட்டைவிட்டுப் போகும்படி கண்டிப்பாக உத்தர விட்டு என்னை வெளியே தள்ளி விட்டார். இதோ, நான் வெளியே போகிறேன். 'அன்பே! நீ வருத்தப் படாதே. சரியாக ஒரு வருடத்தில் உன்னை வந்து காண்கிறேன்' என்றான்.



இவ்வார்த்தையைக் கேட்டதும் அவள் கண்களில் நீர் மாலை மாலையாக வெளிப்பட்டது. பேச நா எழவில்லை. அப்படியே மூர்ச்சித்து அவன் மேல் சாய்ந்தாள். கமலசேகரன் அவள் மூர்ச்சையை நீக்கினான்.

மூர்ச்சை நீங்கிய அவள் 'நாதா! தாங்கள் என்னைப் பிரிந்தா போகப் போகிறீர்கள். வேண்டாம், வேண்டாம், என்னைவிட்டுப் பிரியாதீர்கள். தங்கள் மாமன் வீட்டில் தங்க இஷ்டம் இல்லாவிட்டால் இங்கு தங்கிவிடுங்கள். நம்முடைய சங்கதியை என் தகப்பனாருக்கு நேற்று இரவு கூறினேன். அவரும் சம்மதித்தார். நாதா, தாங்கள் எங்கும் போகவேண்டியதில்லை' என்றாள்.

கமல:—'கண்ணே! நீ சொல்வது சரிதான். ஆனால் நான் இங்கு தங்கினால் என்மாமன் உன் பிதாமேல் கோபம் கொள்வார். நீ வீணே வருந்தாதே. இந்தா, இந்த மோதிரத்தை வைத்துக்கொள். என்னைப் பார்ப்பதுபோல் இதைப் பாவித்து வா. இது என் தாயாரால் கொடுக்கப்பட்டது. நான் என் மாமன் சொத்து ஒன்றையும் தொடவில்லை. எல்லாவற்றையும் அங்கே வைத்துவிட்டேன்' என்றுகூறி மோதிரத்தைக் கொடுத்தான்.

ஆதிலக்ஷ்மி அதை வாங்கித் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு பிறகு தன் விரலில் அணிந்துகொண்டாள். அவன் உடனே உட்சென்று தான் வைத்திருந்த ரூபாய் 50தையும், தன் மோதிரத்தையும் அவனிடம் கொடுத்தாள்.

கமலசேகரன் துக்கத்துடன் அவளிடம் விடை பெற்றுக்கொண்டு அவ் விடம் விட்டகன்ருன். அவன் தன் கண்களுக்கு மறையும்வரையில் பார்த்துக் கொண்டிருந்து பிறகு மூர்ச்சித்து கீழே விழுந்தாள்.

அப்பொழுது அங்கு வந்த ராமநாதன் அவள் கீழே விழுந்திருப்பதைக் கண்டு திகைத்தான்! பின்பு ஒருவாறு சங்கதியைத் தெரிந்துகொண்டு அவ ளருகில் சென்று மூர்ச்சையை நீக்கினன். மயக்கம் தெளிந்து எழுந்த அம் மடமான் எதொன்றும் கூருமல் துக்கத்துடன் உள்ளே சென்ருள்.

நாட்கள் பல விரைந்து சென்றன. கமலசேகரன் சங்கதி ஒன்றும் தெரி தெரியவில்லை. ராமநாதன் மட்டும் அடிக்கடி தன்னை மணக்கும்படி ஆதி லக்ஷ்மியை பயமுறுத்தி வந்தான். அவளோ நாளுக்கு நாள் நலிவடைந்து ஊண் உறக்கத்தை மறந்தாள். எப்பொழுதும் கமலசேகரனல் அளிக்கப்பட்ட மோதிரத்தைப் பார்ப்பதும் கண்ணீர் விடுவதுமாக இருந்தாள். அவள் துக் கத்தைப் பார்க்கச் சகியாத அவளுடைய தகப்பனர் அவளைப் பலவிதமாகத் தேற்றி வந்தார். ஆனல் அவளுடைய மனம் ஆறவில்லை. ஒருநாள் அவள் தான் அடிக்கடி கமலசேகரனை சந்திக்கும் ஊஞ்சலில் போய் உட்கார்ந்துக் கொண்டு தன் காதலனைப்பற்றி எண்ணிக்கொண் டிருந்தாள். அப்பொழுது யாரோ வரும் அரவம் கேட்டு திடுக்கிட்டு எழுந்தாள். அவள் முன் சுமார் 45 வயதுடைய ஒருவர் நிற்பதைக் கண்டாள்.

பெரியவர்:—'அம்மா; நீ யார்? ஏன் இங்கு உட்கார்ந்திருக்கிருய்? என்னை உன் தகப்பனராக பாவித்து உன் விருத்தாந்தத்தைக் கூறு.

ஆதி:—(வணக்கத்துடன்) 'ஐயா! என் தகப்பனர் பெயர் தியாகராஜ முதலியார். அவர் இவ்வூர் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக இருக்கிருர். தாங்கள் யார் என்பதை நான் அறியலாமோ?'

பெரியவர்:—'அம்மா! நான் இவ்வூர் ஜமீன்தார். தியாகராஜ முதலி யார் உன் தகப்பனரா? அவரைவிட உன்னிடம் அருமையான குணங்கள் அமைந்திருக்கிறது. அம்மா! குழந்தாய்! இப்படி என் அருகில் உட்கார்' என்று தன் அருகில் வைத்துக்கொண்டு 'அம்மா! என் மனைவி பத்து வருடங் களுக்கு முன் இறந்துவிட்டாள். எனக்கு பிள்ளைகள் ஒன்றும் இல்லை. ஆதலால் நான் கமலசேகரன் என்னும் என் தங்கை குமாரனை, அவள் இறந்தபிறகு வளர்த்து வந்தேன். ஐயோ! அவனுக்கு கொடுமையான தண்டனை இட்டேனே. அவன் எங்கு நின்று தவிக்கிருனே? தெய்வமே! என் மருகனை என்னிடம் கொண்டு வந்து சேர்க்கமாட்டாயா? ஏ! கமல சேகரா! உன் இஷ்டப்படியே அவளை உனக்கு மணம் செய்யவில்லை. நீ என்னிடம் வந்து சேர். உனக்கு கல்வியிலும், குணத்திலும் சிறந்த மங்கை யைத் தேடிப் பிடித்தேன். கமலசேகரா! இனி உன்னை எப்பொழுது பார்க்கும் பாக்கியம் கிடைக்குமோ' என்று தன்னிலையை அறியாமல் கதறினர். தற்செயலாய் அவர் பார்வை ஆதிலக்ஷ்மியின் கரத்தில் விழுந்தது. உடனே 'கண்மணி குழந்தாய்! இம்மோதிரம் உன்னிடம் எப்படி வந்தது?' என்றுர்.

ஆதி:—'ஐயா! தாங்கள் கோபப்படக்கூடாது. இது என் காதலர் கமலசேகரனல் கொடுக்கப்பட்டது. ஐயோ! என் காதலரின் இனிய

முகத்தை பார்க்கும் காலம் எப்பொழுது வாய்க்குமோ?' என்று கண்களில் நீர் வடித்தாள்.

ஜமீன்தார் அவளைத் தேற்றி, 'குழந்தாய்! வருந்தாதே, உன் காதலனை சீக்கிரம் அடைவாய்' என்று சொல்லி, அவளைத் தன் மாளிகைக்கு அழைத்துச் சென்றார். அம்மாளிகையின் அழகைக் கண்டு ஆச்சரியத்துடன் நின்றாள் அவ்வெழில் நங்கை. ஜமீன்தார் உள்ளே சென்றதும், வேலையாட்கள் சிற்றுண்டிகள் கொண்டுவந்து வைத்தார்கள். ஜமீன்தார் ஆதிலக்ஷ்மியை சாப்பிடும்படி வற்புறுத்திக் கூறியதின்பேரில் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு, சிறிது காப்பி அருந்தினாள். பின் அவர் 'குழந்தாய்! நீங்கள் ஏன் தனியாக இருக்க வேண்டும். இனிமேல் என்னுடன்தான் வசிக்கவேண்டும். நாளையதினம் தலைமை உபாத்தியாயர் வேலை காலியாகிறது. அதை உன் தகப்பனுருக்கு அளிக்கப் போகிறேன். இனிமேல் நீ எப்பொழுது வேண்டுமானாலும் இங்கு வரலாம். உன்னை யாரும் தடை செய்யார்கள்' என்று கூறி, அவளை வீட்டிற்கு அனுப்பினார்.

மறுநாள் தியாகராஜ முதலியார் தலைமை உபாத்தியாயராக மாற்றப்பட்டார். அன்று ஜமீன்தார் வெகு நேரம்வரை தியாகராஜ முதலியாருடன் பேசிக்கொண்டிருந்தார். அவரின் மரியாதையான பேச்சும், வாஞ்சையும் ஜமீன்தாரை ஆனந்தத்தில் ஆழ்த்தியது. அன்று சாயங்காலம் தியாகராஜ முதலியார் சந்தோஷமாக வீட்டிற்குத் திரும்பினார். வீட்டிற்கு வந்ததும் தன் உடைகளை களைந்துவிட்டு துக்கத்துடன் தனக்கு காப்பி கொண்டுவந்த தன் மகளை கண்டு, அவளை அருகில் உட்காரவைத்து, 'லக்ஷ்மி, நான் இன்று தலைமை உபாத்தியாயராக மாற்றப்பட்டேன். ஜமீன்தார் நல்ல குணமுள்ளவர். என்னை விட (Senior) சீனியர்கள் இருக்க எனக்கு இவ் வேலையை கொடுத்ததின் காரணம் என்னவென்று புரியவில்லை. தன்னுடன் வந்து வசிக்கும்படியும் வேண்டுகிறார்' என்றார்.

இவ்வளவுக்கும் அவள் தன் தலையை அசைத்தாளே ஒழிய அவள் துக்கம் முழுதும் நீங்கவில்லை. அவள் அவரைப் பார்த்து, 'அப்பா நேற்று நான் ஜமீன்தாரைச் சந்தித்தேன். அவர் இச்சங்கதிகளை எல்லாம் நேற்று எனக்குச் சொன்னார்' என்றாள்.

'அம்மா! இனி நீ வருந்தாதே. உன் காதலர் சீக்கிரம் வருவார்,' என்று ஆசீர்வதித்தார்.

அன்றுமுதல் குழந்தையும் மகளும் ஜமீன்தார் வீட்டில் வசித்து வந்தார்கள். ஆனால் அவள் வருத்தம் சிறிதும் தணியவில்லை. அவள் துக்கத்தை தணிப்பதையே வேலையாகக்கொண்ட ஜமீன்தார், புதிய குளங்களையும், ஊர்களையும், பள்ளிக்கூடங்களையும், அழைத்துபோய் காட்டுவார். அவர் அவளிடம் வைத்திருக்கும் வாஞ்சையை கண்டு ஊரில் எல்லோரும் ஆச்சரியம் அடைந்தனர்.

V

கமலசேகரன் பிரிந்துசென்று மாதம் ஆறுகடந்துவிட்டது. ஒரு நாள் இரவு நாகரிக உடை அணிந்த ஒரு வாலிபன் கடற்கரையில் அலைகளை பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். அவன் முகம் துக்கத்தால் சிறுத்திருந்தது,

அவன் சட்டைபையில் கையைவிட்டு ஏதோ ஒன்றை எடுத்து அதற்கு முத்த மிட்டு சிறிது நேரம் உற்று நோக்கினன். அப்பொழுது மணி எட்டு. ஜனங் கள் வீட்டிற்குப் போய்க்கொண் டிருந்தார்கள்.

'பெண்ணே! உன்னைக் காணும் பாக்கியம் எப்பொழுது கிடைக்குமோ. நான் இப்பொழுது திக்கற்றவன்போல் தனியாகக் காலம் கழிக்க நேர்ந்ததே. போனவாரம் இங்கு வந்த என் நண்பன் நடேசன் நீங்கள் அவ்வீட்டில் இல்லை என்று கூறினனே. ஐயோ! எங்குச் சென்று தவிக்கிறீர்களோ! திக்கற்ற எனக்கு தகுந்த உத்தியோகத்தை அளித்த அக்கடவுள் உன்னை என்னிடம் சேர்த்து வைக்காரா,' என்று தனக்குத்தானே பேசிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு, பல சந்துகளை கடந்து தன் ஜாகைக்கு போய்க்கொண் டிருந்தான் கமலசேகரன்.

கமலசேகரன் சென்னையில் தனியாய் வசித்து வருவதை அறிந்த ராமனுதன் அவனை எப்படியாவது கொன்றுவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் சென்னைக்கு சென்று, பழியை தீர்த்துக்கொள்ள சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். நாம் மேற்கூறிய தினத்தன்று கமலசேகரன் தன் ஜாகைக்கு, ஒரு சந்து வழியாய் சென்றுக்கொண்டிருந்தான். ராமனுதன் தன் காரில் தற்செயலாக செல்லும்பொழுது கமலசேகரனை கண்டான். உடனே ராமனுதன் இதுதான் தக்க சமயமென்று, கமல சேகரன்மீது காரை மோதினன். கமலசேகரன் அப்படியே மூர்ச்சித்து விழுந்துவிட்டான். அங்கிருந்தவர்கள் அவனை ஜெனால் ஆஸ்பத்திரிக்கு தூக்கிச் சென்றூர்கள். மறு நாள் கமலசேகரனின் மேல் வேகமாக ஓட்டினதற்காக குற்றம் சாட்டப்பட்டு ராமனுதன் தண்டனைவிதிக்கப்பட்டான்.

நாட்கள் பல விரைந்து சென்றன. கமலசேகரன் நிலைமை கேவலமாக இருந்தது. அடிக்கடி அவன் 'லக்ஷ்மி, லக்ஷ்மி, உன்னை எப்பொழுது காணப் போகிறேன்' என்று பிதற்ற ஆரம்பித்தான். கமலசேகரனுடைய நண்பனை ஜயசீலன் (கமலசேகரனுடைய ஆபீஸில் காஷ்கீப்பர் (Cash Keeper) வேலை செய்யும் ஒரு வாலிபன்.) அவன் நிலைமையை கண்டு, மறு நாள் பத்திரிகைகளில், 'கமலசேகரன் என்னும் பெயருடையவனை, சித்தூர்வாசியின் உறவினர்கள் யாவராகிலும் இருந்தால், உடனே கீழ்கண்ட விலாசத்திற்கு வரவும். அவர் மிகவும் அபாயமான நிலைமையில் இருக்கிறர்,'

காஷ்கீப்பர். M. S. M. Ry,
Park Town Madras.

என்று பிரசுரித்தான்.

ஆதிலக்ஷ்மி நாளுக்கு நாள் ஊண் உறக்கமின்றி துரும்பாக மெலிந்தாள். ஒரு நாள் (ஜயசீலன் பிரசுரித்த தினம்) தினசரி பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்த ஜமீன்தார் 'ஆ'என்ற கூச்சலுடன் நாற்காலியில் சாய்ந்தார். இச் சத்தத்தை கேட்ட ஆதிலக்ஷ்மி ஓடிவந்து பார்க்க ஜமீன்தார் மூர்ச்சித்து கிடப் பதை கண்டு அவருக்கு உபசாரம் செய்ய, அவர் மூர்ச்சை நீங்கி துக்கத்துடன் ஆதிலக்ஷ்மியை பார்த்தார்.

ஆதி:—'தாத்தா, ஏன் திடீரென்று மூர்ச்சித்தீர்கள்?'

ஜமீன்:—'குழந்தாய்! ஏதோ மயக்கமாகயிருந்தது. நான் இன்று சென் னைக்குச் செல்லவேண்டும். உன் தகப்பனாரை கூப்பிடு.'

சில நிமிடங்களில் தியாகராஜ முதலியார் அங்குவர, அவரிடம் ரகசிய மாக பத்திரிக்கையில் கண்டதை கூறி, உடனே புறப்பட்டுச் சென்னைக்கு சென்றார். ஜமீன்தார் சென்னையில் ஜயசீலனை கண்டு சங்கதிகளை தெரிந்து கொண்டு, உடனே ஆஸ்பத்திரிக்கு சென்று, கமலசேகரனை கண்டு கண்ணீர் விடலானார். அவனுடைய ஆபீஸ் தலைமை உத்தியோகஸ்தர்கள் அவனுடைய ஸ்திதியை கண்டு வருந்தி, அவனுடைய குணத்துக்கும், அடக்கத்துக்கும், இரண்டுமாதச் சம்பளத்துடன் விடுமுறை கொடுத்தார்கள். ஜமீன்தார் அதிகப் பணம்செலவுசெய்து, அவனை தன் ஊருக்கு கொண்டுபோகவேண்டிய முயற்சி செய்து தன்னில்லத்துக்கு கொண்டுசென்றார்.

'ஏன் அவர் சென்னைக்குச் சென்றார். பத்திரிகையில் என்ன இருக் கிறது என்று பார்க்கலாம் என்றாலும் அதை என் தந்தை எடுத்துச்சென்றார். என் காதலரைபற்றிய சமாசாரம் ஏதாவதிருக்கலாம்' என்று பலவாறு எண்ணிக் கொண்டிருந்தாள் ஆதிலக்ஷ்மி. மாலை மணி எட்டாயிற்று. தன் தகப்ப னருக்கு அன்னம் பரிமாறினாள். அவர் முகம் வாட்டமடைந்திருப்பதைக் கண்ட அவள் ஏதோ, விபத்து நடந்திருக்கிறது என்று எண்ணிக்கொண் டாள். பிறகு தானும் கொஞ்சம் ஆகாரம் உட்கொண்டு, தன் தந்தையை பார்க்க அவர் அறைக்குச் சென்றாள். அவர் அங்கு இல்லாததை யறிந்து, அங் கிருந்த பத்திரிகையை எடுத்துக்கொண்டு தன் அறைக்குச் சென்றாள்.

அவள், அதில் தன் நாதரைப் பற்றிய விளம்பரத்தைக் கண்டு மூர்ச்சித் தாள். மறுபடியும் எழுந்து "இன்னும் ஒரு வருடத்தில் என்னை மணப்ப தாக வாக்களித்த தாங்கள் என்னை விட்டுப் பிரிவது சரியோ, தெய்வமே! ஏழைகளை காப்பாற்றலாகாதா! என் காதலருக்கு பிறகு நான் உயிர் வாழ் வேனோ? நாதா! தங்களுக்கு முன் நான் சென்று, தங்கள் வரவுக்கு இடம் தேடி வைக்கிறேன்' என்றுகூறி கமலசேகரன் அளித்த மோதிரத்தை எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டு தன் பெட்டியை திறந்து ஒரு சிறு கத்தியை எடுத் தாள், ஆ! என்ன பரிதாபம். அடுத்த நிமிஷம் கத்தி அவள் மார்பில் பாய்ந் தது. கீழே விழுந்தாள்.

தன் அறைக்கு சென்ற தியாகராஜ முதலியார் அங்கு பத்திரிகை இல் லாததையும், தன் மகளும் இல்லாததையும் கண்டு, அவள் அறைக்கு சென்று பார்க்க, அவள் கீழேகிடக்கும் நிலைமையை கண்டு கதறலானார்.

அதே சமயம் ஜமீன்தார் கமலசேகரனுடன் உட்புகுந்து அவனை படுக்கையில் படுக்கவைத்துவிட்டு தன்னுடன் அழைத்துவந்த டாக்டரை அங்கேயே விடுத்து, மேல் அறைக்கு வந்தார். அங்கு ஆதிலக்ஷ்மியின் நிலைமையையும், அருகில் கதறிக்கொண்டிருக்கும் முதலியாரையும் கண்டு திடுக்கிட்டார். அருகில் சென்று பார்க்க, அவளுக்கு இன்னும் உயிர் உடலைவிட்டு நீங்கவில்லை என்று அறிந்து, டாக்டரை வருவித்து சிகிச்சை செய்தார். இரண்டு நோயாளிகளையும் ஒரே அறையில் வைத்து, இரவும் பகலும் தூக்கமில்லாமல் ஜமீன்தார் அவர்களுக்கு வேண்டிய உதவி செய்து வந்தார். நாளுக்குநாள் இருவரும் சுகமடைந்து வந்தனர். ஆனால் ஒருவரும் கண்திறக்கவில்லை. ஜயசீலன் வந்து கமலசேகரனை பார்த்துவிட்டுப் போனான். ஒருநாள் இருவரும் கண் விழித்தார்கள். ஆதிலக்ஷ்மி தன்னருகில் இருப்பவரைப் பார்த்து, 'தாத்தா! என் கணவரெங்கே? ஐயோ நான் இன்னுமா உயிருடன் இருக்கிறேன்' என்று படுக்கையை விட்டு எழுந்தாள். அவளை அசைக்கக் கூடாது என்று டாக்டர் கூறியிருந்தார். ஆகையால் ஜமீன்தார், 'குழந்தாய்! பதறாதே. உன் கணவன் க்ஷேமமாக யிருக்கிறான்' என்று அவனைச் சுட்டிக் காட்டினார். காதலர்களின் கண்கள் ஒன்றை ஒன்று சந்தித்தன. பின் ஜமீன்தாரை நோக்கின. அப்பார்வை அவர்களின் எண்ணத்தை வெளியிடுவதுபோல் இருந்தன. அடனே ஜமீன்தார் கமலசேகரனை பார்த்து, 'கமலா, உன் விருப்பப்படியே நீ லக்ஷ்மியை மணக்கலாம். நான் முழுமனதுடன் சம்மதிக்கிறேன். இனி என் சொத்தெல்லாம் உன்னுடையதே' என்றார். பின் லக்ஷ்மியை பார்த்து, 'குழந்தாய்! நான் சொன்னது சரிதானே' என்றார். காதலர்கள் முகம் நன்கு மலர்ந்தது. ஒருவாரத்தில் பூர்ண சுகமடைந்தார்கள்.

தைமாதம் 15-ந் தேதி கமலசேகரனுக்கும், ஆதிலக்ஷ்மிக்கும் திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. கமலசேகரன் தன் வேலையை ராஜிநாமா செய்துவிட்டு தன் மாமனாருடைய ஜமீனை மேற்கொண்டான். ஆதிலக்ஷ்மியும், கமலசேகரனும் குடிகளுக்கு யாதொரு துன்பமும் வரவொட்டாமல் எல்லோரும் புகழும்படி வசித்துக்கொண் டிருக்கிறார்கள். ஜமீன்தாரும், முதலியாரும் இப்பொழுது இரு குழந்தைகளுடன் கொஞ்சிக்கொண் டிருக்கிறார்கள். அக்குழந்தைகள் நம் கதாநாயகனுக்கும். கதாநாயகிக்கும் பிறந்தவை. தான் அவைகளுக்கு கடவுளின் திருநாமத்தையிட்டு செல்வமாக வளர்த்து வருகிறார்கள்.





நான் கேட்ட வரலாறு

[திருவையாறு கே. வைத்தியநாதன்]

'முன்னெப்பொழுதும் நான் அவரைக் கண்டதேயில்லை. கறுப்போ சிவப்போ என்றுகூட நான் அறிந்திராத அந்த மனிதர் திடீரென்று என்னறைக்குள் அகாலத்தில் தோன்றினால் நான் என்ன நினைப்பது? என்னதான் செய்வது? 'திருடன்! திருடன்!' என்று கூக்குரலிடுவதா?—கம்பீரமான முகத்துடனல்லவா இருக்கிறார்!' 'புது மனிதர்! புது மனிதர்!! என்று ஓலமிடுவதா?—இதற்கென்ன அர்த்தம்?—அவர் முகத்தைப் பார்க்க என் விழிகள் கூசுகின்றன. என் நெஞ்சுத் துணிவு எங்கேனும் பறந்து போய்விட்டதோ, அல்லது அடங்கியொடுங்கி மூலையில் பதுங்கிக் கொண்டதோ அறியேன்—இப்படி இமைகொட்டாது விழித்துப் பார்க்கும் அந்தக் கருமணிகளோடு என் மருண்ட நயனங்கள் எவ்வாறு வாதுபுரிய முடியும்?—ஆ! அவர் மனிதர்தானா! ஒருவேளை கல்லால் செய்யப்பட்ட பிம்பமா

யிருக்கலாமோ! அல்லது காகித மெழுகு வேலைகளின் திறமையை காட்ட வந்த பதுமையோ!.......என்றெல்லாம் என் படுக்கையில் சயனித்தபடியே சிந்திக்கலானேன். அறையின் நடுவே தொங்கிய மின்சாரவொளி சிறிதும் மங்கவில்லை. கதவு தாளிடப்பட்டுதான் இருக்கிறது.

என் படுக்கைக்கு மிக அருகாமையில் தோன்றிய அவ்வுருவத்தை மட்டும் என்னால் நிதானிக்க முடியவில்லை. நீண்ட ஹாலுக் கப்பால் முன்னறையில் நித்திரைபுரியும் என் கணவரை எழுப்பும் பொருட்டு (மணியடிக்க) என் கட்டிலின் தலைப்புறத்திலுள்ள பொத்தானை அழுத்த முயன்றேன். அதற்குள் அந்தப் புதுமனிதரின் புன்முறுவல் தோற்றமும், 'வேண்டாம்' என்ற மென்மதுரச் சொல்லும் என் கரத்தை அவ்வாறு செய்ய வொட்டாது தடுத்து விட்டன.

சில நிமிஷங்கள் வரை மௌனம். அப்போது எங்கள் இருவரின் இருதய ஒலியின் ஓசையைத் தவிர வேறெவ்வித ஓசையுமில்லை.

எதிரில் நின்ற அந்த திவ்ய ரூபத்தை எவ்வளவு நேரந்தான் உற்றுப் பார்க்கலாம்? ஆகவே பார்வை ஒளி சிறிது மங்கியது—என் கண் இமைகளை யாரோ பொத்தியதுபோல் எனக்குத் தோன்றியது. அவ்வளவுதான் கண்கள் கெட்டியாய் மூடிக்கொண்டன. மீண்டும் நான் விழித்தபோது ஒரு நிமிஷமாகி யிருக்கலாம். திடுக்குற்று எழுந்தேன். ஆ! என்ன விந்தை! என் கணவர் என் எதிரில் நின்றிருந்தார். உடனே எனக்கு உடம்பெல்லாம் குபீரென்று வியர்த்தது. ஏதோ ஒரு கனவு கண்டதாக நான் எண்ணினேன். வியர்வையைத் துடைத்துக்கொண்டே எழுந்துட்கார்ந்தேன்.

'கமலா!' என என் கணவர் ஏதோ கலவரத்தோடு என்னை விளித்தார். நான் மௌனஞ் சாதித்தேன். அதுகண்ட அவர் ஏதோ ஒருவித பீதியோடு என்னருகில் அமர்ந்து எனது கையைப்பற்றினர். நான் அவரது வெளுத்த முகத்தை நோக்கினேன்.

'என்ன சமாச்சாரம்! இந்த கள்ள வழியின் மூலமாய் யார் இங்கே வந்தது?..........' என்றார் எனது கணவர்.

அதுகேட்ட நான் திடுக்குற்றேன். ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாது 'என்னவோ எனக்கொன்றும் விளங்கவில்லை. ஏதோ ஒரு கனவு கண்டு என்னுடம்பெல்லாம் இப்படி வியர்த்து விட்டது.' என்றேன்.

'சரி, படுத்துக்கொள். காலையில் பேசிக்கொள்வோம். உனக்குப் பயமாயிருந்தால் நானும் இங்கேயே படுத்துக்கொள்ளுகிறேன்' என்றார் என் கணவர்.

நான் பதில் கூறாது தலையணையிற் சாய்ந்தபடி கால்களைமட்டும் நீட்டாமல் படுத்துக்கொண்டேன். கண்களைக் கெட்டியாய் மூடிக் கொண்டேன். ஆனால் என் செவிகள் விழிகளின் வேலைகளையும் சேர்த்துச் செய்யத் தொடங்கின. 'நான் நித்திரை புரிகிறேன்' என எண்ணியவராய் என் நாயகர் தன் மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டு கட்டிலினின்றும் எழுந்து அறை முழுவதையும் சுற்றிப் பார்க்கலானார். பீரோ, மேஜை, பெட்டி இவற்றின் சுற்றுப்புறங்கள் இண்டு இடுக்குகள் முதலியவற்றைத் தன் கையிலிருந்த பிரம்பால், தட்டிப் பார்க்கலானார். பின் கதவின் உட்தாழ்ப்பாளைத் திறந்து கொண்டு வெளியிற்சென்று ஒருமுறை பார்த்துவிட்டு மீண்டும் உள்ளே வந்து கதவைத் தாளிட்டார். என்னருகில் வந்து நின்று ஒருமுறை என்னை உற்று நோக்கினார். பின்னர், கள்ளவாயிலின் வழியே அப்பாற்சென்று கதவை மூடிக்கொண்டு சென்றார்.



மறுநாள் பொழுது விடிந்தது. என் உடம்பு சிறிது களைத்துப் போயிருந்தது. இரவில் கண்ட தோற்றம் கனவா, நனவா என்று எவ்வளவு சிந்தித்தும் எனக்கு விளங்கவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம்; அறையின் கள்ளக்கதவை யாரோதான் திறந்திருக்க வேண்டும். இல்லாவிடில் என் கணவர் விழித்துக் கொண்டுவந்து அவ்வளவு சந்தேகத்துடன் என் அறை முழுவதையும் பரிசோதிக்க வேண்டிய அவசியமில்லையல்லவா? கள்ளக்கதவை விசை தெரிந்து திறக்கும்போது என் கணவர் படுக்கைக்கருகிலுள்ள மணியின் ஓசையினாலேயே அவர் விழித்துக்கொண்டிருக்க வேண்டும். இதை நினைக்கும்போதுதான் நான் கண்ட அந்தச் சுந்தரர் கனவில் வந்தவரே என்று தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அந்த அழகர் எப்படி மறைந்தார்? அதுதான் எனக்கு விளங்கவில்லை.

அன்றுமாலை வழக்கம்போல் நானும் என் கணவரும் தேயிலைப் பானம் அருந்தினோம். அப்போது அவர் நேற்று நீ கனவு கண்டதாகக் கூறினாயல்லவா?' என்றார். 'ஆம்' என்றேன். 'அது கனவுதான் என்று நம்புவதற்கில்லை. அந்த ரகசியக் கதவை யாரோ திறந்துதானிருக்கவேண்டும். இல்லாவிட்டால் என்னறையில் மணியடித்திருக்க முடியுமா?' என்றார்.

'என்னவோ போங்கள்! நான் நன்றாகத் தூங்கிவிட்டேன். நீங்கள் வந்தபோதுதான் என்னவோ பயங்கரமான கனவு கண்டு விழித்துக்கொண்டேன். உடனே உடம்பெல்லாம் வியர்த்தது.' என்றேன் நான். அவர் நான் கூறியதை ஒப்புக்கொண்டதாகத் தெரியவில்லை. பிறகு என் கணவர் எழுந்து தன் அறைக்குச் சென்று ஏதோ படித்துக்கொண்டிருந்தார். நான் இராச்சாப்பாட்டிற்கான ஏற்பாட்டைத் திட்டம் செய்யச் சென்றேன். என்ன காரணத் தாலோ என் நினைவு முழுதும் அந்த இனிமை தழைத்த முகத் திலேயே இருந்தது. இன்றும் அந்த அன்புருவத்தைப் பார்க்க என் னுள்ளம் ஆசை கொண்டது.

இரவாயிற்று. வழக்கம்போல் 9-மணிக்கெல்லாம் ஆகாரம் உண்டு நானும் என் கணவரும் பற்பல விஷயங்களைப்பற்றிப் பேசினோம். பிறகு நித்திரை வருவதுபோல் எனது கண்களைக் கசக்கிக்கொண் டேன். அதுகண்ட என் கணவர் என்னைப் படுத்துக்கொள்ளும்படிக் கூறவே நான் என்னறைக்குச் சென்று சயனித்துக்கொண்டேன். அச்சமயம் என் நாயகர் என்னறைக்கு வந்து ஒருமுறை அறை முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட்டு என்னை நோக்கி 'கமலா! உனக்கு ஏதாவது அச்சமாயிருந்தால் உடனே பொத்தானை அழுத்த மறந்து விடாதே. நடுவில் விழித்துக்கொண்டால் எழுந்து அறை முழுவதையும் சுற்றிப் பார்க்கத் தவறாதே' எனக் கூறிவிட்டுச் சென்றார். என்னவானாலும் பதினெட்டே வயதினளான என்னைக் காக்க வேண்டியது என் வயோதிகக் கணவருடைய பொறுப் பல்லவா?

நடு இரவாயிருக்கலாம். என் கணவர் என்னருகில் வந்து நின்று என் முகத்தைக் கூர்ந்து நோக்கிவிட்டு என்னை யெழுப்பினார். நான் விழித்து எழுபவள்போல் நடித்துக் கண்களைத் துடைத்துக்கொண்டு, 'பொழுது விடிந்துவிட்டதா?' என்றேன். 'இல்லை, இல்லை. அதற்கு இன்னும் 5 மணி அவகாசமிருக்கிறது. இப்போது ஏதேனும் கனவு கண்டாயா என்று கேட்கத்தான் எழுப்பினேன்' என்றார். அது கேட்ட நான் சீற்றங்கொண்டு, 'கனவா! உங்களுக்கென்ன பைத்தி யமா? தினந்தினம் கனவு காண்பதுதான் வேலையோ? இதற்குத்தான் அயர்ந்து தூங்கின என்னை எழுப்பினீர்களாக்கும்!' என்றேன்.

'கோபித்துக்கொள்ளாதே! நேற்றைப்போல் பயப்படப்போகி றாய் என்றுதான் கேட்டேன். வேறொன்றுமில்லை; தூங்கு' என்று கூறிவிட்டு அறையைப் பரிசோதித்துக்கொண்டு சென்றார். அவர் போன சிறிது நேரத்திற்கெல்லாம் கள்ளக்கதவு திறந்த மெல்லிய ஓசை கேட்டது. விழித்துக்கொண்டேன். அந்த அழகிய மனிதர் என்னருகே வந்து நின்றார். நான் சிறிது அப்பால் நகர்ந்தேன். அது தன்னை அமரச் சொல்லுவதற் கறிகுறியாக எண்ணி என்னருகில்

உட்கார்ந்து 'கமலா!' எனத் தன் இன்குரலில் எனையழைத்தார். இது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. பின் நான் 'நீங்கள் இங்கே தாமதிப்பீர்களானல் ஆபத்தாய் முடியும்......' என நான் கூறுவதற்குள் 'அவர் இங்கு வரமாட்டார். அதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறேன்' என்ருர்.

'நீங்கள் யார்? எப்படி இந்தக் கள்ள வழியைக் கண்டுபிடித்தீர்கள்?' என்றேன்.

'உனக்குத் தஞ்சையில் ஒரு அத்தை இருக்கிருளல்லவா? அவளுடைய புதல்வன்தான் நான். சென்னை சென்ற நான் சில தினங்களுக்கு முன்புதான் தஞ்சைக்கு வந்தேன். அப்போது உனது அழகையும் குணத்தையும்பற்றிக் கேட்டதோடு உனது உருவத்தை அங்கு மாட்டப்பட்டிருந்த படத்தில் பார்த்தேன். அப்படத்தை பார்த்ததுமுதல் உன்மீது எனது முழுமனமும் செல்லுவதாயிற்று. எனவே உன்னை நேரில் கண்டு மகிழ மிக ஆசைகொண்டேன். உடனே உன்னைச் சந்திப்பதற்கான உபாயங்களைத் தேடினேன். முடிவில் ஒரு நாள் இங்குவரும் வியாபாரியுடன் மாற்றுடையணிந்து வந்து உன்னைக் கண்டேன். உன்னைக் கண்டது முதலாக எனது காதல் வளர்வதாயிற்று. நீ பிறனுடைய மனைவி என்பதையும் மறந்து உன்னைப்பெறவே என்னுள்ளம் விரைந்தெழுந்தது. அதனல் உனது அறைக்கு வரும் வழிகளைப்பற்றி ஆராயத்தொடங்கினேன். அந்த வியாபாரியும், உனது கணவரும் உரையாடிக்கொண் டிருக்கையில் நான் அவர்கள் அறியாவண்ணம் எழுந்து உனது அறைச்சுவர்களைப் பரிசோதிக்கலானேன். அப்போது உனது அறையிலுள்ள வெளிப் புறக்கதவு எனக்குப் புலப்பட்டது. அது திறக்கும் விதத்தையும் கண்டுகொண்டேன். நேற்று உனது கணவர் வரும் காலடி ஓசை கேட்டதே பீரோவின் பின் சென்று மறைந்துகொண்டேன். அவர் உன்னருகில் நின்றபோது அந்தக் கள்ள வழியின் மூலமாகவே வீதியை அடைந்தேன்' எனக்கூறி முடித்தார்.

நான் அவர் கூறியவைகளை அன்புடன் கேட்டேன். ஆனல் அப்பால் என்னபேசுவது என்று எனக்கு விளங்கவில்லை. நான் ஒருவருக்கு என் உடலைச் சொந்தமாக்கியதும் உண்மையே. ஆனல் வயோதிகரான அவர் என்னல் எய்திய பயன்யாது? என்னை இராப் பகலாகக் காக்கவேண்டிய பொறுப்பை யேற்று அல்லலுற்றதே அவர் அடைந்த பயனாகும். அதனலேயே அவரது வியாபாரத்தையும் சுருக்கிக்கொண்டார். வீட்டிலிருந்துகொண்டே வியாபாரத்தை நடத்தலானர். என்னேடு வீட்டிலுள்ள சமையற்காரனே, பணியாளனே அதிகநேரம் பேசுவானனல் அவருக்கு என்மீது சந்தேகம் உதித்துவிடும். அவரில்லாதபோதுகூட நான் யாருடனும் பேசிவிடக்கூடாது. இதுவே எனக்கு இல்வாழ்க்கையிலேற்பட்ட ஒரு

பெரிய விலங்கு. சகோதரிகளே! எனது உள்ள உணர்ச்சியை இந்தக் கிழவரால் எவ்வளவு காலந்தான் காவல் செய்ய முடியும்? ஆகவே என்னருகிலமர்ந்திருந்த அந்த வாலிபரது முகத்தை ஆர்வத்துடன் நோக்கினேன். களங்கமற்ற காதல் ஒளி அவரது முகத்தில் வீசக்கண்டேன். அப்போது அவர் எனது வலதுகரத்தைப் பிடித்துக்கொண்டு 'கமலா! என்ன மௌனஞ் சாதிக்கிறாய்?' என்றார். நான் எனது இடதுகரத்தை நோக்கியவண்ணம் புன்னகை புரிந்தேன்.

'அப்பா இந்தச் சிரிப்புக்கு என்ன கொடுக்கலாம்?' என்று வினவியபடியே எனது அதரங்களில் முத்தமாரி பொழிந்தார்.

இப்படியே பல தினங்கள் சென்றன. என் கணவர் அதன் பிறகு அதிகமாக இராக்காலங்களில் என்னறைக்கு வருவதில்லை. ஆனால் எனது காதலர்மட்டும் நாள்தோறும் என்னிடம் வந்து பேசியிருந்துவிட்டுச் செல்வார்.

இது இங்ஙனமாக, ஒரு நாள் காலை எனது கணவர், 'கமலா! இதோ பார்! இந்தக் கம்பியை யார் நறுக்கியது? கள்ளக்கதவுக்கும் எனதறையிலுள்ள மணிக்கும் இடையிலுள்ள கம்பியை யாரோ அறுத்துவிட்டிருக்கிறார்கள்' என்றார். நான் மிக்க வியப்படைந்து 'யார் அப்படிச் செய்திருக்கக்கூடும்?' என்றேன். 'கமலா! இது...... நல்லவர்களுக்குக் காலமில்லை.......' என்று முணுமுணுத்துக்கொண்டே சென்றவர் கொஞ்சதூரஞ் சென்றபின் என்னை ஒரு முறை கூர்ந்து நோக்கினார். அந்தப்பார்வை யொன்றே எனது காதற் செய்கையை உணர்ந்துகொள்ளும் வன்மை பெற்றிருந்தது.

அன்று இரவு வழக்கம்போல் என் காதலர் என்னுடன் அன்பாகவே உரையாடிக்கொண்டிருந்தார். எனக்கு மட்டும் மனவமைதி குறைந்திருந்தது. அதனால் அவருடைய அன்புப் பேச்சினின்றும் இடையிடையே என் நினைவு என் கணவர்மீது சென்றது. முடிவில் அவர் எனக்கு முத்தங்கள் அளித்துவிட்டு எழும் சமயம், எனது கணவர் அறையில் துப்பாக்கி வெடித்த ஓசை கேட்டது. உடனே நானும் எனது காதலரும்



ஓடினோம். அங்கே என் கணவர் தரைமீது சவமாய்க் கிடப்பதைக் கண்டு திடுக்குற்றேன்: அவருக்கு அருகில் கிடந்த ஒரு கடிதத்தை எடுத்து எனது காதலர் வியப்போடு வாசிக்கலானார். அதில்:—

நான் அந்திய காலத்தில் மணஞ் செய்துகொண்டது தவறு என்பதை இன்றுதான் பரிபூரணமாக உணர்ந்தேன். பணத்தால் பெண்களுடைய அன்பைப் பெற முயல்வது ஒரு பெரிய அறிவீனமான செய்கையாகும். கமலாவின் அழகில் ஆசைகொண்டு எளிய நிலையிலிருந்த அவளை விலைக்கு வாங்கினேன். என்னுல் அவள் உலக சுகங்களினின்றும் இதுவரை ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தாள். இனியேனும் அவள் தான் மனமாற காதலிக்கும் அந்த வாலிபனோடு உலகவாழ்வில் ஈடுபட்டு இன்புறட்டும். இதுவரை அவளது உணர்ச்சியைச் சிறைப்படுத்தி வைத்திருந்த பாபத்திற்காக நான் எனது ஆஸ்தி முழுவதையும் அவளுக்கே உரியதாக்கி எனது வாழ்க்கையை முடித்துக்கொள்ளுகிறேன். ஆதலால் எந்த மனிதனும் தனது வயோதிகப் பருவத்தில் இளநங்கையை மணப்பது மகாபாதகமான செய்கை என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொண்டு அதற்குப் பிராயச்சித்தமாக எனது உயிரை நானே போக்கிக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

இரவீந்திரநாதர்.

என வரையப்பட்டிருந்தது. கமலா கண்ணீர் வடித்தாள்.

ஒரு மாதம் சென்றபின் எளிய நிலைமையிலிருந்த அவளுடைய காதலன் சந்திரநாதன் திரண்ட செல்வத்தோடு கூடிய கமலாபாயை சீமான்கள் பலர் முன்னிலையில் மறுமணம் செய்துகொண்டான்.

* * *

கடந்த மேமாதம் ஒருதினம் மாலையில் நாகையின் கடற்கரையோரமாக ஒரு படகு போய்க்கொண்டிருந்தது. அப்போது நானும் எனது நண்பர்களிற் சிலரும் அதில் அமர்ந்திருந்தோம். அவர்களில் ஒருவளான கமலா என்னை நோக்கி, 'தாங்கள் 'தமிழரசு' பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதி வருகிறீர்களாமே?' என்றுள். நான் 'ஆம்' எனவும் 'எனது இளமை வரலாற்றைக் குறித்துச் சில குறிப்புகள் வைத்திருக்கிறேன். அவற்றைப் பத்திரிகை வாயிலாக நமது தமிழ்நாட்டு சகோதரிகளும் சகோதரர்களும் அறிந்துகொள்ளும்படி செய்யவேண்டுமென்பது எனது நெடுநாளைய அவா. தாங்கள் இதற்கு உதவி செய்வீர்களா?' என்று வினவ, நானும் எனது சம்மதத்தைத் தெரிவித்தேன். அன்று இரவு அவளுடைய 'ரவீந்த்ரா விலாச' மாளிகையில் என்னிடம் கூறிய விஷயங்களைக் கொண்டும், அவள் கொடுத்த குறிப்புகளைக் கொண்டுமே இக்கட்டுரையை வெளியிட்டுள்ளேன்.

சுப்பையாபிள்ளையின் சாமர்த்தியம்

[எஸ். ஏ. சாமி]

எங்களூர் ஒரு கிராமம். இருந்தாலும் அங்கு ஓர் ரெயில்வே ஸ்டேஷன் உண்டு. அது ஊரிலிருந்து கொஞ்சத்தூரத்திலிருக்கின்றபடியினால் ஜனங்கள் அடிக்கடி அங்கே போகமாட்டார்கள்.

சுப்பையா பிள்ளை எங்களூரில் பெரிய தனவந்தர். அவர் சுமார் ஆறடி உயரம் இருப்பார். உயரத்திற்கேற்ற பருமனை உடையவர். நாகப்பழத்தைப் போன்ற கருத்த மினுமினுப்பான திரேகத்தை உடையவர்.

சுப்பையா பிள்ளை தற்கால நாகரிகத்தின் வாசனையே தெரியாதவர். மிகவும் வைதீகம். காலையில் எழுந்ததும் ஸ்நானம் செய்துவிட்டு கட்டுக்கட்டாக விபூதியை நெற்றியில் இட்டுக்கொண்டு, கடவுளைத் தியானம் செய்துவிட்டுத்தான் மறுவேலைகளைப் பார்ப்பார்.

சுப்பையாப்பிள்ளைக்கு ஓர் சமயம் திருச்சிக்கு போகும்படியான சந்தர்ப்பம் வந்தது. திருச்சிக்கு, தான் இன்னும் ஒரு நாள்கூட ஏறியிருக்காத, ரயிலில் போவதாகத் தீர்மானித்தார். ஆனால் சுப்பையாப்பிள்ளைக்கு ரயில்வே சமாசாரம் ஒன்றுமே தெரியாது.

தனது மூட்டைகளுடன் ஸ்டேஷனை நோக்கி சுப்பையாபிள்ளை கிளம்பினார். திருச்சிக்குச் செல்லும் புகைவண்டித் தொடர் வருவதற்கு இன்னும் அரைமணி நேரம் இருந்தது. சுப்பையாபிள்ளை ஸ்டேஷனை அடைந்ததும் அங்கு ஓர் ஜன்னலின் முன் ஜனங்கள் கூட்டமாய் நின்றுகொண்டு எதையோ வாங்குவதைப் பார்த்தார். உடனே தனது பக்கத்திலிருந்தவரிடம் அதைப்பற்றி கேட்க, அவர் பிள்ளையவர்களிடம் ஜனங்கள் டிக்கட் வாங்குவதற்காக அந்த இடத்தில் கூடியிருப்பதாகச் சொன்னார். மேலும் சுப்பையாப்பிள்ளை டிக்கட் வாங்காமல் ரயிலில் பிரயாணம் செய்யவும் முடியாது என்று தெரிந்துகொண்டார். உடனே அவர் டிக்கட் கொடுக்கும்படியான இடத்திற்குச் சென்று, கூட்டம் சிறிது விலகியவுடன், திருச்சிக்குச் செல்ல எவ்வளவு சார்ஜ் என்று டிக்கட் கொடுப்பவரிடம் வினவினார். அவர் அவரைப் பார்த்து, 'போர்ட் வெளியே மாட்டி இருக்கிறது. போய் பார்த்துக்கொள்' என்று சொல்லிவிட்டார். இதற்

கெல்லாம் சளைப்பவரா சுப்பையாபிள்ளை? உடனே நயமாக, தனக்கு படிக்கத் தெரியாதிருந்தாலும் பெருமையாக, அவரைப் பார்த்து, எனது மூக்குக் கண்ணாடியை எடுத்துவர மறந்துவிட்டேன். தயவு செய்து திருச்சிக்குச் செல்ல ஓர் டிக்கட் கொடும்' என்று ஓர் ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுக்க அவரும் ஒரு டிக்கட்டும், மீதி சில்லரையும் கொடுத்தார். உடனே பிள்ளையவர்கள் தன்து மூட்டைகளுடன் பிளாட்பாரத்தை யடைந்தார்.

அவர் அங்கு நின்றுகொண்டிருந்த ஓர் போர்டரை அணுகி 'தெற்கே போகும்வண்டி எப்பொழுது வரும்' என்று கேட்டார். அவன் 'தெற்கே போகும் வண்டியென்றால் எவ்வூருக்கையா?' என்று கேட்டான். அதைக் கேட்டதும் நமது பிள்ளையவர்களுக்கு அடங்காத கோபம் உண்டாயிற்று. தனக்குள், 'என்ன! இந்த பயலுக்கு இவ்வளவு திமிரா? நான் எந்தவூருக்குப் போனால் இவனுக்கென்ன? கேட்டதற்கு பதில் சொல்லாமல் அபசகுனமாக 'எந்த ஊருக்கு' என்று கேட்கின்றான். இருந்தாலும் இருக்கட்டும். இவனை ஏமாற்ற எனக்குத் தெரியாதா!' என்று தனக்குள் எண்ணிக்கொண்டு அவனை நோக்கி 'சேலத்திற்குப் போகவேண்டும்' என்று சொன்னார். உடனே அவன் அப்பொழுதுதான் புறப்படப்போகும் ஓர் புகைவண்டித் தொடரைச் சுட்டிக்காட்டி, போய் ஏறிக்கொள்ளும்படிச் சொன்னான். உடனே சுப்பையா பிள்ளையும் போய் ஏறிக்கொண்டார். நல்லவேளையாக அவர் போய் ஏறிக்கொண்ட பிறகே தொடர் வண்டி புறப்பட ஆரம்பித்தது.

சுப்பையாபிள்ளை வண்டிக்குள் தனது மூட்டைகளை வைத்துவிட்டு வெளியில் எட்டிப்பார்த்தார். போர்டர் அவ்விடத்திலேயே நிற்பதைக் கண்டு பெருமையாக 'டேய் போர்டர்! உன்னை ஏமாற்றிவிட்டேன் பார்த்தாயா! நான் சேலத்திற்குப் போகவில்லை. திருச்சிக்குப் போகின்றேன்' என்று உரக்கக் கத்தினார். இதற்குள் வண்டி நெடுந்தூரம் வந்துவிட்டது.

நமது சுப்பையாபிள்ளையின் சாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா!



வெளி விகடம்

கோடீஸ்வரன்:—என் பிள்ளை என் பெயரை எடுப்பான் என்று ஜோஸ்யம் சொன்னீரே! அந்த பையல் எங்காத்து வேலைக்காரியை இழுத்துக்கொண்டு போய்விட்டானே.

ஜோஸ்யர்:—நீங்கள் பால்யத்தில் அதுமாதிரி செய்திருப்பீர்கள்.

—டி. மீனாக்ஷி அம்மாள்



ரயிலுக்கு வந்தவர்:— ஸார்! ஒரு டிக்கட்.

டிக்கட் கொடுப்பவர்:— எந்த ஊருக்கு?

ர-வந்தவர்:— வாயில் வரலே சார், வெள்ளைக்காரன் தின்றது.

டி-கொடுப்பவர்:—ரொட்டியா?

ர-வந்தவர்:— ஆமாம் சார், கூட ஒரு வார்த்தை

டி-கொடுப்பவர்:— பன்ருட்டியா?

ர-வந்தவர்:— ஆம்......ஆம்...

—எஸ். எ. சஞ்சீவி

கணவன்:—அடியே! ஒரு அணா காசு கொடுத்தேனே! அம்பிக்கு என்ன வாங்கிக் கொடுத்தே?

மனைவி:—அந்த ஒரு அணாவைக்கொண்டே நாமெல்லாரும் பயனடையலாமென்று 'தமிழரசு' வாங்கித் தந்தேன்.

—திருவை கே. வைத்தியநாதன்

முதல் திருடன்:—மூட்டையை அவிழ்த்து அதில் எவ்வளவு பணம் இருக்கிறதென்று பார்ப்போமா?

இரண்டாவது திருடன்:—இதை யார் வேலையில்லாமல் எண்ணிக்கொண் டிருப்பார்கள்? இன்று சாயந்திரம் பத்திரிகையைப் பார்த்தால் தானே தெரிகிறது.

—கே. மோகனசுந்தரம்

ஒரு வக்கீல் ஒரு டாக்டரைப் பார்த்து:—நீங்களும் சில சமயங்களில் குற்றம் செய்து விடுகிறீர்கள்.

டாக்டர்:—ஆம். வக்கீல்கள் சில சமயங்களில் செய்வதைப் போல.

வக்கீல்:—ஆம் டாக்டர்கள், செய்யும் தப்பிதங்களோ பூமிக்குக் கீழ் 4 அடி ஆழத்தில் தாழ்த்தப்படுகின்றன.

டாக்டர்:—ஆம். வக்கீல்களின் தப்பிதங்களோ 4 அடி உயரத்தில் ஊஞ்சலாடுகின்றன.

—எஸ். சுப்பையராஜு

மனைவி:—போய் எத்தனை நாளாச்சு! இதுவரையில் அங்கே என்ன செய்தீர்கள்?

கணவன்:—இப்படிக் கேட்டால் என்ன பதில் சொல்வதென்று தெரியாததால்தான் அங்கேயே தங்கிவிட்டேன்.

—திருவை கே. வைத்தியநாதன்

டாக்டர்:—உமது மனைவிக்கு பைத்தியக்காரச் சின்னங்கள் ஏதாவதுண்டா?

புருஷன்:—ஏன், இல்லாமலென்ன. வாயிலோடு புடவைக்காரன் போகமுடியவில்லை.

—எம். சுப்ரமணியம்



குழந்தை:—தாத்தா! சிங்கங்கள் மோக்ஷலோகத்திற்குப் போகுமா?

தாத்தா:—போகமாட்டா.

குழந்தை:—ரொம்ப பக்தியாய் இருக்கிறவர்கள்?

தாத்தா:—நிச்சயமாய் போவார்கள். ஏன் கேட்கின்றாய்?

குழந்தை:—ரொம்ப பக்தியாய் உள்ளவரை ஒரு சிங்கம் தின்றுவிட்டது என்று வைத்துக்கொள்; அப்பொழுது சிங்கம் போகுமா?

—கே. மோகனசுந்திரம்

குப்பன்:—உனக்கு தகப்பனார்தான் இல்லையோ?

சுப்பன்:—அவர் சுகமே இருக்கிறார். ஏன் சாகச் சொல்லுகிறாய்?

குப்பன்:—தாயார்தான் போய்விட்டார்களோ? அடடா!

சுப்பன்:—அப்படிச் சொல்லாதே. தாயாரும் சுகமே.

குப்பன்:—ஓஹோ! தம்பிதான் இறந்ததோ?

சுப்பன்:—இல்லை. தம்பியும் சுகமே. என்ன நீ இப்படிப் பேசுகிறாய்?

குப்பன்:—சரிதான், உன் மனைவிதான் இறந்ததோ?

சுப்பன்:—இலலையப்பா, மனைவியும் சுகந்தான். நீ விசாரித்தது போதும்.

குப்பன்:—அப்படியா சங்கதி. யாரோ இறந்ததற்கு நீ மிகவும் துக்கப்பட்டதாக கேள்விப்பட்டேனே, பாவம்! யாருக்காக வருந்தினாய்?

சுப்பன்:—ஆம், உன் மனைவிமக்கள் சீக்கிரம் இறக்கப் போவதாக ஜோஸ்யர் சொன்னார். அதற்காகத்தான் துயரப்பட்டேன்.

—எஸ். சுப்பையராஜு



தாயார்:—ஏன், இப்படி மண்ணைத் தின்கிறாய்?

குழந்தை:— இல்லை யம்மா! 'மண்ணைத் தின்னா மண்ணாய்ப் போய்டுவேன்'னு நீ சொன்னியோல்லியோ அதுக்காகப் பாத்தேன்.

—எம். சுப்ரமணியம்

வீடுபார்க்க வந்தவர்:—இந்த மெத்தை நன்றாகத்தானிருக்கிறது. ஆனால் கீழ் அறையில் வெடிமருந்து தொழிற்சாலை யிருப்பதால் எனக்குப் பிடிக்கவில்லை.

வீட்டுக்காரர்:—நீங்கள் அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம். அவர்களெல்லாம் அதிக நாளைக்கு இங்கிருக்க மாட்டார்கள். ஒரு நெருப்பு பற்றிக்கொண்டால் ஓடிவிடுவார்கள். —எஸ். எ. சஞ்சீவி

ஒரு தர்மஸ்தாபனத்திற்கு பணம் வசூலிக்கவந்த ஒருவரிடம் ஒரு பிரபு பாங்கி ஒன்றுக்கு செக்கு எழுதிக் கொடுத்தார்.

வசூல் செய்பவர்:—(செக்கைப் பார்த்துவிட்டு) என்ன இதில் கையெழுத்தில்லையே?

பிரபு:—தர்ம கைங்கர்யத்தில் என்னுடைய பெயரை பிரஸ்தாபப் படுத்த இஷ்டமில்லை.

—எஸ். சுப்பையராஜு

மணாளனை மயக்கிய மதியூகி

[சி. நாகப்பன்]

'அநாதைப் பெண்ணும், அபலையுமான என்னை தாங்கள் மனமுவந்து நேசிப்பதைக் கண்டு என்மனம் அளவிலா ஆனந்தத்தை அடைகிறது. ஆனால் காதலரே! என்னை எப்பொழுது தாங்கள் மணம் செய்துகொள்ளப் போகிறீர்கள்? எனக்கு இது அவசரமில்லையேனும், அக்கம்பக்கத்திலுள்ளோரும், பந்துக்களும் என்னைக் கேவலமாக பேசித்திரிகிறார்கள். பாலிய பருவமுடைய, என்னை—பால்மனம் மாறுமுன்-என் பெற்றோர்கள் முன்பின் அறியாத, எனக்குத் தெரியாத என் மாமன் மகனுக்கு கடிமணம் செய்துவைத்தார்கள். ஆ! அந்த ஆடவனை யான் பார்த்தது கூட இல்லை. அந்தோ! என் கணவர் என்று சொல்லிக்கொண்டவர் இறந்தாளன்று என்னைப் படுத்தாதபாடு படுத்திவிட்டனர்.

'ஆ! அதை நினைப்பின் என் மனம் பதறுகிறது! ஆம், அது ஒரு பயங்காமான தினந்தான்! காதலரே! அதன் பிறகு எனது நிலையை தாங்கள் அறிந்தவர்களே! எனது விதவைக் கோலம் ஒருபுறமும், எனது சுற்றத்தார் துன்புறுத்தல் மற்றொருபுறமும் பொறுக்க முடியவில்லை. உண்மையான காதலி ஒருவள் ஒருவனைக் காதலிப்பாளானால் அவள் அவனையன்றி வேறு ஒருவனை கனவிலும் கருதக்கூடாது. இதேபோல் ஆடவர்களுமிருப்பின் நம் இந்திய தேசம் இக்கேவலநிலை அடையவேண்டியே இருக்காது' என்று 16 அல்லது 17 வயது மதிக்கக்கூடிய ஓர் அழகிய அணங்கு, கண்டோர் காமுறும் காரிகை, நீண்டு வளர்ந்த கூந்தலையும், கூறிய வாளை ஒத்த பார்வையையும், ரவிவர்மா படத்தையும் பழிக்கச் செய்யும் அழகையுமுடைய ஆரணங்கு, தன் எதிரே நின்ற ஆங்கிலேய உடை உடுத்தி ஆக்ஸ்போர்ட் கிராப்விட்டிருக்கும் 23, 24 வயது மதிக்கக்கூடிய வாலிபன் ஒருவனைப் பார்த்து மேற்கூறியவாறு மொழிந்தாள்.

'காதலி! கனகவல்லி! நீ மொழிந்த வார்த்தைகள் என்மனதை பாவசப்படுத்தி விட்டன. நாளை பள்ளிக்கூடம் திறக்கிறார்கள். நான் இன்றுமாலை மெயிலில் சென்னை செல்கிறேன். அரைவருடப்

பரிக்ஷைக்குப் பிறகு விடும் 'லீவுக்கு' வந்து நமது திருமணத்தை முடிவு செய்வோம், கவலைப்படாதே கண்மணி!' என்றுகூறி அவ்வாலிபன்—காமாக்ஷிநாதன் அவளைப் பிடித்திழுத்து தன் மடிமீது உட்காரவைத்து ஒரு முத்த மீந்தான்.

'காதலரே! தங்களிஷ்டம் எனது சித்தம்! என்னை மறவாமல் மட்டுமிருந்தால் போதும். இவவேழைமீது அன்புகூர்ந்து முன் போலவே பள்ளிக்கூடம் சென்றதும் கடிதங்கள் வரையவும். எனது கவலைக்கு தங்கள் கடிதமாவது ஆறுதல் அளிக்கும். சீக்கிரமே சென்று திரும்புவீர்கள்' என்று கூறி ஆநந்தக் கண்ணீர் உதிர்த்தாள் கனகவல்லி. இருவரும் பிரிந்தனர்.

* * *

'ஆ! யான் என் செய்வேன்? அவர்சென்று ஆறுமாதங்கள் ஆகிறது. நாள் சென்றாலும் கடிதம் எழுதத் தவறாத அவர், எனது காதலர்—எனது ஆருயிர்க்காதலர்—இன்பமனோகார்—அன்று சென்ற நாள் முதல் ஒரு கடிதமும் எழுதவில்லையே? ஹா! என் மனம் கலங்கு கிறது. துயரம் பெருகுகிறது. அவரைக் காணாமல் இனி ஒரு கண மும் சகித்திரேன்' எனது கடிதத்திற்கும் பதிலில்லை' என்று கனக வல்லி தன்னறையில் ஓர் நாள் மாலை உட்கார்ந்துகொண்டு மேற் கண்டவாறு யோசித்துக்கொண்டிருந்தாள்.

'ஆம்! அவர் சென்று ஆறுமாதங்கள் ஆகிறது. லீவுவிட்டு இருக்கும், ஏன் இன்னும் வரவில்லை? இவ்வூருக்கு வந்திருப்பின் என்னைப் பாராமலிரார்' என்று மேலும் யோசித்துக்கொண்டிருக்கும் சமயம் முன் பக்கத்துக் கதவுதட்டும் சப்தத்தைக்கேட்டு திடுக்கிட்டு கதவைத் திறந்துபார்க்க காமாக்ஷிநாதன் நிற்பதைக் கண்டு அப்படியே அவனைப்பிடித்து ஆலிங்கனம் செய்து வரவேற்றாள்.

'ஆ! கடைசியில் வந்தீர்களா? உங்கள் மனம் என்ன கல்லா? ஒரு கடிதம் எழுதக்கூடாதா?' என்றுகூறி கண்ணீர் உதிர்த்தாள் கனகவல்லி.

'கண்மணி! உன்னை கண்மணி என்றுகூற என்மனம் இடம்தர மறுக்கிறது. ஆ! என்சொல்வேன்' என்று மேலும் கூறாமல் சோர்ந்து வாடிய முகத்துடன் கண்ணீர்விட்டான்.

'காதலரே! தங்களுக்கு ஏற்பட்ட தடங்கல் ஏதோ?' என்று பட படப்புடன் கேட்டாள்.

'ஓ! நான் என்ன சொல்வேன்? உன்னை மணந்துகொள்வதற் காக என் தந்தையை அநுமதி கேட்டேன். அவர் விதவையைக் கலியாணம் செய்துகொண்டால் தன் சொத்தில் ஒரு பைசாவும் கொடுக்கமுடியாது என்று கூறிவிட்டார். இந்தத் தொல்லைக்கு யான்

என் செய்வேன்? எங்காவது வேலை கிடைக்குமா வென்று அலைந்தேன். வேலை இல்லாக் கஷ்டகாலத்தில் எங்கும் வேலையுங் கிடைக்க வில்லை. பி. ஏ. பாஸ் செய்திருப்பினும் வேலைகிடைக்கும்.'

'கடைசியில் இப்பொழுது என்ன சொல்லப்போகிறீர்கள்' என்று இடை மறித்துக் கேட்டாள்.

'என்ன சொல்வது, தற்சமயம் உன்னை மணம்செய்துகொள்ள முடியாது.'

'ஹா! கடவுளே!' என்றுகூறி மூர்ச்சையாயினள்.

* * *

சென்னைக் கடற்கரை. எங்கும் காற்று ரமணீகரமாக வீசுகிறது. இளங்காதலர்கள் ஆங்காங்கு உட்கார்ந்து சம்பாஷித்துக்கொண்டிருக்கின்றனர். சிலர் 'ரேடியோ' சங்கீத சாகரத்தில் ஆழ்ந்திருந்தனர். மற்றும் சிலர் தனித்தனியே துணையின்றி வரும் பெண்மக்களை பார்த்து சிரித்து மகிழ்ந்தனர். பற்றும் சிலர் வரும் ஒவ்வொருவரையும் பார்த்துக் கேலி செய்துகொண்டிருந்தனர்.

தன்னந்தனியே ஓர் பக்கம் ஓர் இளமங்கை ஒரு புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டிருந்தாள். வயது 16, 17, இருக்கும். சிவந்தமேனி, ஒற்றைநாடி, கோணவகுப்பு, காதில் லோலக், கையில் கெடியாரம், மூக்குக்கண்ணாடி, தற்கால நாகரிக அணிகலன் பலவும் அணிந்திருந்தாள். தற்கால நாகரிக நாரீமணி ஒருத்தியை நினைத்துப் பார்த்துக்கொள்ளுங்கள்.

இவளுக்கு எதிர்ப்புறம் ஒருவாலிபன். ஆம்! அவன்தான் காமாக்ஷிநாதன். ஒரு புத்தகத்தைப் பிரித்து பார்த்துக்கொண்டு படிப்பதும் மேற்கூறிய பெண்ணை ஒருமுறை பார்ப்பதுமாக இருந்தான். அப்பெண்ணும் ஜாடையாக அவனைப்பார்ப்பதும் படிப்பதும்போல பாவனை செய்துவந்தாள்.

கரையோரத்தில் வீற்று இருந்த அந்த நாகரிக நங்கையின்மீது சமுத்திர அலையொன்று மோதியது. அலறிப்புடைத்து அவள் எழுந்தாள். காமாக்ஷிநாதன் பாபரப்புடன் அவளை அணுகி, 'பெண்ணே, பயப்படாதே!' என்றுகூறி அவளுடைய நனைந்துபோன உடைகளைப் பிடித்துப் பிழிந்தான்.

வெட்கத்தால் அவள் ஒன்றும் கூறுமல் அப்படியே அசைவற்று நின்ருள்.

சிறிது நேரம் சென்றது. 'தங்களுடைய உதவிக்கு வந்தனம்' என்ருள் குயிலினுமினிய குரலுடன்.

'நேரமாகிவிட்டது. செல்லவில்லையா? நீ எங்கு தங்கி இருப்பதோ?' என்றான்.

'நான் எனது தோழி ஒருத்தியின் வீட்டில் தங்கி இருக்கிறேன்' என்றாள்.

'உன்............பெயரோ?'

'மிஸ். மனோகரி.'

'மனோகரி! என்ன அழகிய பெயர்!'

'தங்களுடைய பெயர்?, காமாக்ஷிநாதன் பி. ஏ. பச்சையப்பன் காலேஜ்' என்றான்.

'ஆ! அப்படியா! சந்தோஷம் சென்று வருகிறேன்' என்று கூறி அவள்—மனோகரி—அன்னநடை நடந்து சென்றாள்.

'சென்றுவரட்டும். மறுமுறை சந்திப்போம்' என்று எண்ணிக்கொண்டு ஹாஸ்டலுக்குச் சென்றான் காமாக்ஷிநாதன்.

அன்று இரவுமுழுதும் அவனுக்குக் கொஞ்சங்கூட தூக்கமில்லை. 'மிஸ், மனோகரி! மிஸ்! மனோகரி! உன்னை யான் என்று அடைவேன்? உனது இன்பமான வார்த்தைகளை என்று கேட்டு இன்புறுவேன்? சீ! அவளா? விதவையான அவளை—கனகவல்லியை மறுபடியும் நினைப்பதா? அவளைத்தான் வெறுத்து விட்டேனே? அவளைப்பற்றி சந்தேகம் வேண்டாம்? மனோகரி! உண்மையாக நீ என்னை காதலிக்கிறாயா? ஆ! முத்தம்! ஒரு முத்தம்!' என்று பலவாறு வாய்க்கு வந்தவாறு—உளறிக்கொண்டு, பிதற்றிக்கொண்டு காமாக்ஷிநாதன் அன்று இரவைக் கழித்தான்.

அன்றுமாலை, அதே இடம், மிஸ். மனோகரி! மிஸ்டர் காமாக்ஷிநாதன்; இன்று இருவரும் நெருங்கி சம்பாஷித்துக் கொண்டிருக்கின்றனர்.

மனோகரி! உனது சொந்த ஊர் எது என்பதைக் கூறவில்லையே!' என்று கேட்டான்.

'சேலத்திற்குப் பக்கத்தில்.......இல்லை, இல்லை. ஈரோட்டிற்குப் பக்கத்திலுள்ள பவானி.'

'எனது ஊருக்குச் சமீபந்தானா, எனக்கு ஈரோடு' என்றான்.

'ஆ! அப்படியா? ஒன்பதுமைல் வித்தியாசந்தானா? அதனால் தான் இருவருக்கும் வெகு சீக்கிரம் சிநேகமாகிவிட்டது' என்றாள் சிரித்துக்கொண்டு.

'ஆம், அதில் என்ன சந்தேகம்? மனோகரி! உன் அழகை என்னென்று கூறுவேன்.'

'எனது அழகை புகழ்ந்ததற்கு மிகவந்தனம்.'

'நமக்குள் என்ன வந்தனம்? மனோகரி! உன்னை நான் காதலிக்கிறேன்.'

'மிகவும் சந்தோஷம். 'பழம் நழுவி பாலில் விழுந்தாற்போல' அதுவும் நழுவி வாயில் விழுந்தாற்போல, தேடிவந்த இடத்தில் தங்களைப்போல ஒரு பி. ஏ. எனக்கு கணவனாக ஏற்பட்டதுபற்றி வெகு திருப்தி' என்றாள்.

இவ்வளவு சீக்கிரத்தில் தனக்கு இசைவாள் என்று நினையாத காமாக்ஷிநாதனுக்கு அளவிலா—அபரிமிதமான - ஆநந்தமேற்பட்டு விட்டது. அதே இடத்தில் அவளைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டான். பிறகு தான் இருக்குமிடத்தை அறிந்து வெட்கப்பட்டான். தனது தவறை உணர்ந்தான்.

பல நாட்கள் இருவரும் சந்திப்பதும் பேசுவதுமாக காலத்தைக் கழித்தனர்.

ஓர்நாள் மாலை. மிஸ் மனோகரியின் அறையில் காமாக்ஷிநாதன் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

'காதலரே! தங்களை ஒன்று கேட்க வேண்டுமென்று வெகு ஆவல். இன்றுதான் நினைவு வந்தது. அதாவது தாங்கள் இதற்கு முன்பு, என்னைக் காதலிப்பதற்கு முன்பு, வேறு யாரையாவது காதலித்தது உண்டா' என்று கேட்டாள்.

இந்த எதிர்பாராத கேள்வி அவனை திடுக்கிடச் செய்தது.

'இல்லை' என்றான்.

உண்மையாகவா? இது பொய்யல்லவே?' என்று கோபமாகக் கேட்டாள்.

'நான் ஒருத்தியைக் காதலித்தது உண்மை. ஆனால் அவள் விதவை' என்றான்.

'விதவையா? ஏன் அவளைக் காதலித்துவிட்டு பிறகு சும்மா இருந்து விட்டீர்கள்?'

'எனக்கு இஷ்டமில்லை. அதுவுமன்றி உன்னை இங்கு சந்தித்த பிறகு அவளுடைய நினைவே இருப்பதில்லை' என்றான்.

'அவளை வெறுத்து விட்டீர்களா? அவளிடம் கூறினீர்களா?'

'மணம் செய்துகொள்ள முடியாது என்று கூறிவிட்டேன்'

'அதற்கு என்ன காரணம் கூறினீர்கள்'

'விதவை என்று எனது தந்தை மறுக்கிறார் என்று கூறினேன்'

'நானும் ஒரு விதவையாக இருப்பின்...........என்று அவள் கூறி அவனை கூர்மையாகப் பார்த்தாள்.

'உனது அழகு - நடை - உடை - பேச்சு - போக்கு இவ்வளவும் என்னை மயங்கச் செய்து விட்டன. மிஸ் மனோகரி! நீ ஓர் விதவையாக இருப்பினும் சரி, யாராயிருப்பினும் சரி, உன்னை அன்றி வேறு யாரையும் இனி நினையேன் இது சத்தியம்' என்ருன்.

'அவளைப்போல என்னையும் ஏமாற்றி விடுவீர்களோ என்னமோ என்று கேட்டேன். கோபம் கொள்ளாதீர்கள்' என்று கூறினுள்.

'என் மீது உனக்குச் சந்தேகமிருப்பின், இப்பொழுதே சென்று 'ரிஜிஸ்டர்' கலியாணம் செய்து கொள்வோம்' என்ருன்.

'சரி' என்று மனோகரி கூறி 'டிரஸ்' செய்துகொண்டு 'டாக்ஸி' ஒன்றை ஏற்படுத்தி இருவரும் 'ரிஜிஸ்டர்' ஆபீஸிற்குச் சென்று 'ரிஜிஸ்டர்' கலியாணம் செய்து கொண்டனர்.

'மணமாகி மூன்று மாதங்களுக்குப் பிறகு 'மனோகரி விடுமுறையும் கிட்டாய் விட்டது 'ஹனிமூன்' பிரயாணம் போல நாமும் நமது ஊருக்குச் செல்வோம்' என்ருன் காமாக்ஷிநாதன்.

'சரி' என அவள் ஒப்புக்கொள்ள இருவரும் அன்று மாலையே (1-st Class)ஸில் பிரயாணம் செய்து ஈரோடு அடைந்தனர் மறுநாள் காலை.

'நாதா! சென்னையில் அன்று கூறினீர்களே யாரையோ ஒருத்தியைக் காதலித்ததாக, அவளைச்சென்று பார்க்கவில்லையா?'

'அவளை ஏன் பார்க்க வேண்டும் யான், இனி?'

'அதற்குச் சொல்லவில்லை. பழைய நினைவு ஒருக்கால் ஏற்பட்டு சென்று விடுவீர்களோ என்று கேட்டேன். அவளுடைய வீடு எங்கேயோ?'

'இதோ இந்த பக்கத்துத் தெருவில்தான்'

'அவளை நான் பார்க்க வேண்டும் காதலரே' பாவம் ஒரு ஏழைப் பெண்ணின்—விதவையின்—கற்பைக் கெடுத்தீர்களோ, அதற்காக வேணும் அவளை அழைத்து வந்து நம் வீட்டில் வைத்துக்கொள்ளக் கூடாதா?'

'ஏது உனக்கு அவள் மீது இவ்வளவு கருணை. நான் கூப்பிட்டால் வரமாட்டாள். நீயும் வா, வேண்டுமானுல் சென்று பார்த்து வரலாம்' என்ருன்.

இருவரும் கனகவல்லியின் வீட்டை அடைந்தனர்.

வீடு பூட்டப்பட்டு இருந்தது.

'வீடு பூட்டி இருக்கே, எங்கு சென்று விட்டாளோ?' என்ருன். அதே சமயம் வேலைக்காரி ஒருத்தி கதவைத் திறந்தாள்.

இருவரும் உள் நுழைந்தனர்.

ஹாலில் போடப்பட்டு இருந்த நாற்காலியில் காமாக்ஷிநாதன் உட்கார மனோகரி அங்குள்ள ஓர் அறையினுள் நுழைந்தாள்.

பதினைந்து நிமிடம்வரை காணோம் மனோகரியை. காமாக்ஷிநாதன் எழுந்தான். அதே சமயம் கனகவல்லி அறையினின்றும் வெளிப் பட்டாள்.

'காதலரே! எது இவ்விடம் வந்தது?' என்று புன்முறுவலுடன் கேட்டாள் கனகவல்லி.

'கனகவல்லி! யானும் எனது மனைவியும் இங்கு உன்னைப் பார்க்க வந்தோம், நீ வந்த அறைக்குள் தானே அவளும் வந்தாள்' என்றான்.

'ஒருவரையும் காணோமே!' என்று கூறி சிரித்தாள்.

'என்ன காணோமா?' என்று கூறி அவ்வறைக்குள் சென்றான். அங்கு மனோகரியின் ஆடைகள்-நகைகள் கிடந்தன. ஆனால் அவளை காணோம்.

'இங்கு வந்த என் மனைவி எங்கே? எங்கே? அவள் எங்கே!' என்று கேட்டான்.

'இன்னும் அறிந்துகொள்ள முடியவில்லையா? அந்தோ பரிதாபம், ஒரு ஏழைப்பெண்ணின் கற்பைக் கெடுத்ததுமன்றி அவளை நிரா கரித்து நாகரிக மங்கை ஒருத்தியை மணந்துகொண்ட நாங்கள் அவள் யார்? அவள் எப்படிப்பட்டவள்? என்பதைக் கூட அறியாமல் மணந்து கொண்டீர்களே! அவள் யார்? அம்மனோகரி எங்கே? இன்னும் அறிந்துகொள்ள முடியவில்லையா? கனகவல்லியை ஏமாற்றி விடலாம் என்று எண்ணி யிருந்தீர்களா? கனகவல்லியும் மிஸ் மனோகரியும் ஒருத்தியே என்பதை உணர்க!' என்றாள்.

இவ்வெதிர்பாராத சம்பவத்தைக் கண்ட காமாக்ஷிநாதன் ஒரு புறம் ஆச்சரியப்பட்டாலும், மற்றொருபுறம் வெட்கவும்பட்டான்.

'கனகவல்லி! உனது திறமையைப் போற்றுகிறேன், உனது உண்மைக் காதலை மெச்சுகிறேன். ஆனால் என்னை மன்னிப்பாயா?' என்று பரிதாபகாமான குரலில் கேட்டான்.

'மன்னிக்காமல் என் செய்வது! மன்னிப்பிற்கு என்ன வெகு மானம் தரப்போகிறீர்கள்!' என்று கேட்டாள்.

'இதோ பெற்றுக்கொள்' என்று கூறி முத்தமீந்தான். தன்னை முதலில் காதலித்து வெறுத்த மணாளனை மயக்கிய மதிபூகியின் சாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா?

குவெட்டா பூகம்பத்தில் ஜானகிராமன்

[ப. நீலகண்டன்]

ஸ்ரீமான் வெங்கட்ராமன் அன்னிய ஜவுளிக்கடை மறியல் நடக்கும்பொழுதுதான் முதன் முதலில் ஜானகியைக் கண்டான். தொண்டர் படையில் ஓர் பெண்ணும் சேர்ந்து மறியல் செய்கிறாள் என்பது ராமனுக்குத் தெரியாது. தான் மறியல் செய்துகொண்டிருந்த கடைக்கு அடுத்தகடையில் தான் ஜானகி மறியல் செய்தாள் என்பது பிறகுதான் தெரிந்தது. ஜானகி காவிக்கலர் போன்ற துணியில் ரோஜா புஷ்பம் போட்ட ஆடையை உடுத்தி வெள்ளை ஜாக்கெட்டுப் போட்டுக்கொண்டு நெற்றியில் குங்குமப்பொட் டணிந்து நிற்கும் காட்சி எவருக்கும் சிறிது நேரம் உற்றுப்பார்க்கும்படியே தோன்றும். பராசக்தியைப்போல் தோன்றும் ஜானகியைக் கண்டால் நமது மனதில் ஒருவிதமான தப்பபிப்பிராயமும் உண்டாவதில்லை. அவளைப் பார்த்தால் சகோதரி வாஞ்சை நம்மையறியாமல் உண்டாய்விடும். சிவந்த மேனியில் மஞ்சளணிந்து குங்குமப் பொட்டு வைத்து இயற்கையழகோ டிலங்கும்



அவ்வனிதை அன்னிய துணிகளை வாங்கப் போகும் மனிதர்களைக் கண்டு கைகூப்பி, 'ஐயா அனியாயமாய் அயல் நாட்டிற்கு துணியின் மூலம் பணத்தை யனுப்ப பிரியப்படுகிறீர்களே! நம்மவர்களாலேயே நெய்யப்பட்ட சுதேசியை வாங்கக் கூடாதா? கதரை உடுத்துங்கள். ஏழைகளுக்கு கஞ்சி வாருங்கள். நீங்கள் கதருக்காக செலவழிக்கும் ஒவ்வொரு பைசாவும் கண்ணீர் விடும் ஏழைகளுக்கு ஆகாரமாய்ப்போய் சேரு

கிறதென்பதை உணருங்கள்' என்று சுருக்கமாகவும் ஆணித்தரமாகவும் இனிமையான குரலில் பேசும்பொழுது யார் மனந்தான் இளகாது? ஜானகியைக் காண்போர் சுமார் வயது 17, 18 என்றே மதிப்பர்.

வெங்கட்ராமனுக்கு ஜானகியை முதலில் கண்டதுமே அவள்பால் ஒருவித வாத்சல்யம் உண்டாய்விட்டது இயல்பே. வெங்கட்ராமனுக்கு சுமார் 20 வயதிருக்கலாம். இயற்கையழகு பூரணமாயமையப்பெற்ற வாலிபன். ஒழுங்காக சிவிவிடப்பட்ட கிராப்புத் தலை. அதில் ஆடம்பரமின்றி தாழ்மையான வெண்கதராடையை அரையிலுடுத்தி சட்டையின்மேல் பெரிய புஷ்பங்கள் அச்சிடப்பட்ட சால்வையை வலதுகையின் கீழ்பாரிசமாக இடதுபுறத் தோள்மீது போட்டு கைகூப்பி நின்று மறியல் செய்யும்பொழுது கல்மனதும் கரைந்துவிடும். இிற்க ராமன் மறியல் செய்யும் கடைக்கு அடுத்த கடையில்தான் ஜானகியும் மறியல் செய்கிறாள். அவளை தினம், தினம் காணக்காண ராமனுக்கு அவள்பால் ஏற்பட்ட வாத்சல்யமானது பெருகலாயிற்று. இம்மாதிரி 10 தினங்கள் மறியல் கடந்தது. அதன்பின் தாலூக்கா காங்கிரஸ் கமிட்டியாரால் ஓர் பொதுக்கூட்டம் போடுவதெனவும், அநேகம் தலைவர்கள் வருவார்களென்றும் துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டது. அதில் வெங்கட்ராமனும் ஜானகியும்கூட பேசுவார்களென்று வெளியிடப்பட்டிருந்தது.

மாலை பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. அநேகம் தலைவர்கள் பேசியதின் பின் ராமன் பேசினான். அதன்பின் ஜானகியை பேசும்படி தலைவர் கேட்டுக்கொள்ள ஜானகி பேசவாரம்பித்தாள். அழகான குரல், இனிமையான சொல் நயம். ஆனந்தமான வார்த்தைப் பிரயோகத்தைக் கொண்ட வேண்டுகோள். சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும் தருணத்தில் கூட்டத்திற்கு வெளியில் ஒரு கார் வந்து நின்றது. அதனின்றும் ஒரு மனிதர் இறங்கி பிரசங்க மேடையண்டை வந்து 'ஜானகி இங்கேவா' என்றார். அவர் குரல் கடுமையாகவும் ஆணித்தரமாகவும் இருந்தது. அவரைக்கண்ட ஜானகி எக்காரணம்பற்றியோ அசைவற்று நின்றுவிட்டாள். அவளது முகம் பெருந் திகிலைக் காண்பித்தது. அந்தமனிதர் 'இங்கேவா' என்றார். அது கண்டிப்பான உத்தரவுபோல் தோன்றிற்று. இது ஜனங்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்காவிடினும் ராமனுக்கு இம்மாதிரி ஏன் நடக்கிறதென்றே தோன்றாமல் வியப்பும் திகைப்புமாய் நின்றான். ஜானகி பேசாமல் கீழே இறங்கினாள் பிரசங்கமேடையை விட்டு. அம்மனிதர் அவளுக்கு முன்னால் போய் காரில் ஏறினார். ஜானகியும் பின்சென்று காரில் அமர்ந்தாள். கார் விர்ரெனப்புறப்பட்டது.

பிரசங்கக்கூட்டத்தில் ஒரே ஆர்ப்பாட்டம். அவரவர்கள் பலவிதமான அபிப்பிராயங்களை கூறவாரம்பித்தனர். அதன்பின் வேறொருவர் பேசவாரம்பித்தார். ஜானகியை அவள் தந்தையழைத்துக் கொண்டுபோன சம்பவத்திலிருந்து ராமனுடைய முகம் விசனமான மாறுதலை யடைந்துவிட்டது. அதற்குமேல் அவனால் அங்கிருக்க இயலவில்லையென்பதை அவன் முகம் தெற்றென விளக்கிவிட்டது. யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் எழுந்து நடந்தான்.

ராமன் பேசாமல் சாய்ந்தவண்ணம் அன்றைய தினப்பதிப்பை படித்துக்கொண்டிருந்தான். படிப்பதாகத்தான் பாவனை. ஆனால் எழுத்துக்கள் ஒன்றும் புரியவில்லை. ஜானகியை அவளது தந்தை பிரசங்கமேடையிலிருந்து அழைத்துக்கொண்டுபோன சம்பவம் தான் கண்முன் நிற்கிறது. உடனே எழுந்து ஆணியில் மாட்டப்பட்டிருந்த அங்கவஸ்திரத்தை யெடுத்து போட்டுக்கொண்டு வெளியில் கிளம்பினான். ஆழ்ந்த சிந்தனையில் இருப்பவனைப்போல் தோன்றிற்று அவனுடைய முகம். நாலைந்து வீதிகளைக் கடந்து ஓர் அழகிய பங்களாவின்முன் வந்து நின்றான். கண்ணைக் கவரத்தக்க முறையில் அழகாக அமைக்கப்பட்டிருந்த பங்களாவிற்குமுன் அநேக விதமான பூஞ்செடிகளும், மரங்களும் நிரம்பியிருந்தன. பங்களாவைச் சுற்றி சுமார் 100 அடி உள்ள இடத்தில் குரோட்டன்சுகளும் மரங்களும், மரங்களுக்கு கீழே சிறியகல்மேடையும், அதற்கருகில் தண்ணீர் தொட்டியுமாக வைக்கப்பட்டிருந்தன. தோட்டத்தைச் சுற்றி மதிற்சுவர் எழுப்பப்பட்டிருந்தது. அந்த அழகிய பங்களாவும் தோட்டமும் ஒரு கண்காட்சியெனத் தோன்றிற்று. வெளிவாயிற்படிக் கருகில் ராமன் நின்றான். அங்கே நின்றிருந்த வாயிற்காப்போன் ராமனைப்பார்த்து, 'யாரைப்பார்க்கிறீர்கள்?' என்றான்.

ராமன்:—யாரையுமில்லை. சும்மா நிற்கிறேன்' என்றான்.

வா—கா:—தோட்டத்தை பார்க்கணும்னா போய்ட்டுவாங்க' என்றான். இந்த எதிர்பாராத அனுமதியைக் கேட்ட ராமன் பரம சந்தோஷத்துடன் உள்ளே நுழைந்தான். பங்களாவின் தென்கோடியிலிருந்து சுற்றிப் பார்த்துக்கொண்டே வந்தான். முக்கியமாக அவன் தோட்டத்தை பார்ப்பதைவிட பங்களாவையே பார்ப்பதாகத் தோன்றிற்று. பங்களாவை சுற்றி மற்றொரு பக்கம் வருகையில் பங்களாவின் வெளிப்பக்கத்தில் ஒரு ஜன்னல் தெரிந்தது. அதில் ஓர் மடந்தை பார்ப்பவர் மனதை பரவசப்படுத்தும் அழகுடன் நாற்காலியில் அமர்ந்து ஏதோ ஒரு காகிதத்தின் மத்தியபாகத்தை கத்தரிக்கோலால் வெட்டியவண்ணமிருந்தாள். அவள் ஜன்னலுக் கருகில் அமர்ந்திருந்ததினால் இடுப்புவரை நன்றாகத் தெரிந்தது. சந்திரபிம்பம்போன்ற முகத்தையுடைய அக்கட்டழகி அங்கேயிருந்ததைக்

கண்ட ராமன் அப்படியே அசைவற்று தன்னையுமறந்து சிறிது நேரம் உற்று நோக்கினான்.

தான் இம்மாதிரி ஜன்னலை உற்று நோக்கிக்கொண் டிருப்பதை பிறர் கண்டால் தவறுதலான அபிப்பிராயம் கொள்வார்களெனக் கருதி பூஞ்செடிகளைப் பார்ப்பதும் ஜன்னலைப்பார்ப்பதுமா யிருந்தான். அம்மாதிரி இருப்பது திருப்தியற்றதாக தோன்றவே பக்கத்தி லுள்ள கல்மேடையில் அமர்ந்தான். மறுபடி திரும்பி ஜன்னல் பக்கம் பார்த்தான். வெறும் இடம். அங்கே அமர்ந்திருந்த கன்னி யைக் காணவில்லை. பேசாமல் உட்கார்ந்து விட்டான். இது கனவோ நினைவோ என்று தோன்றவில்லை. 'நாம் அந்த இடத்தை விட்டுபோய் விட வேண்டு'மெனக் கருதியவனாய் எழுந்தான். ஆனால் அவனுக்குப் பின்புறம் அவன் முன் பார்த்த மடந்தை கத்



தரிக்கோலால் காகிதத்தை வெட்டியபடியே உலாவிக்கொண் டிருந்தாள். அவனுக்கு பெருத்த ஆச்சரியம் உண்டாய்விட்டது. நாம் உண்மையில் நல்லுணர்ச்சியோடு இருக்கிறோமா என்ற சந்தேகம் ஏற்படவே பிறரறியாவண்ணம் கண்களைகசக்கி விட்டுக்கொண்டான். ஆம். தன் எதிரில் நடப்பதெல்லாம் உண்மைச் சம்பவங்கள் தான் என்பதை ஒருவாறு உணர்ந்தான். மறுபடியும் ஆசனத்திலமரத் திரும்பினான். அதேக்ஷணம் ஜானகியும் அவனைத் திரும்பிப் பார்த்தாள். 'ஓ! தாங்களா வந்திருக்கிறீர்கள்?' என்ற வார்த்தைகள் ஜானகியின் வாயிலிருந்து தானாகக் கிளம்பிற்று. ஆனந்தமான அந்த மாலை வேளையில் குயிலினுமினிய குரலால் மொழிந்த அவ்வார்த்தை யானது செவிக்கின்பமூட்டும் பாடல்களையெல்லாம் தூக்கியடித்து விடும்போல் தோன்றிற்று. ஜானகி புன்முறுவல் பூத்த முகத்துடன் தலையைத் தொங்கவிட்டவண்ணம் ராமனுக்கு சிறிது தூரத்தில் நின்றாள்.

ஜானகி:—நான் தங்களிடம் பேசுவதில் தவறுதலில்லையே?

ராமன்:—இல்லவே இல்லை. தாங்கள் என்னுடன் பேசுவதில் நான் அளவற்ற மகிழ்ச்சி யடைவேன்.

ஜா:—அன்று பிரசங்கத்தின் முடிவு என்னவாயிற்று?

ரா:—நான் அப்பொழுதே வந்துவிட்டேன். ஆனால் பிறகு யார் யாரோ பேசி கூட்டத்தை முடித்ததாகக் கேள்விப்பட்டேன்' இவர்கள் இம்மாதிரி பேசிக்கொண் டிருக்கையில் ஜானகி என்ன காகிதத்தை கத்தரிக்கிறாள் என்று பார்த்தான் அது ஒரு பத்திரிகை. அதன் மத்தியபாகத்திலிருந்து ஏதோ வெட்டுவதாகத் தோன்றிற்று. கூர்ந்து கவனித்ததில் அது ஒரு புகைப்படம் என்று விளங்கிவிட்டது. ஜானகி அந்த பத்திரிகையின் மத்தி பாகத்தை வெட்டி எடுத்துக்கொண்டு மற்றவைகளை கீழே எறிந்துவிட்டாள். ராமனும் அதை கவனியாதவன்போல் இருந்துவிட்டான்.

ஜானகி:—தாங்களெப்படி உள்ளே வந்தீர்கள்?

ராமன்:—நான் வாயிற்படியில் நின்றிருந்தேன். நான் பங்களாவைப் பார்க்கவெண்ணியதாக நினைத்துக்கொண்ட வேலைக்காரன் உள்ளே அனுப்பினான்.

ஜானகி 'களுக்'கென ஓர் சிரிப்புச் சிரித்தாள்.

ரா:—நான் இங்கு வந்ததில் தங்களுக்கேதேனும் இடைஞ்சலாக..............

ஜா:—இல்லை. இல்லை. தாங்கள் வந்ததில் எனக்கு இடைஞ்சலே இல்லை.

ரா:—தங்களைப்போன்ற பெருந்தன்மையுள்ள படித்தவர்கள் எனக்கு சிநேகமா யிருப்பதென்றால் நான் மிகவும் சந்தோஷப்படுவேன். நான் மறுபடி இங்கு வரலாமல்லவா?

ஜா:—வரலாம். ஆனால் தாங்கள் உடுத்தி யிருப்பது கதரென அறியாவண்ணம் அயல்நாட்டு துணியைப் போல் மெல்லிதாக இருக்கும் கதருடையை அணிந்துகொண்டு வருவது நல்லது. நான் இப்படிச் சொல்வதில் வேறுவிதமான அபிப்பிராயமெதுவும் கொள்ள வேண்டாம். எனது தந்தைக்கு காங்கிரஸ் என்றால் பிடியாது. காங்கிரஸ்காரர்கள் உள்ளே நுழைவதிலும் இஷ்டப்படமாட்டார்' என்றாள். ராமனுக்கு இன்னும் கொஞ்சநேரம் அவளுடன் பேசிக்கொண்டிருக்க வேண்டுமென்கிற ஆசைதான். எனினும், அவள் பத்திரிகையி

னின்றும் வெட்டியெடுத்த புகைப்படம் யாருடையதென தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற அவாவினால் 'நான் சென்று வருகிறேன்' என்றான்.

ஜானகி:—நாளை அவசியம் வருவீர்களல்லவா' என்றாள். 'ஆம்' என்று எழுந்தான். ஜானகி திரும்பிச் சென்றாள். ராமன் கீழே கிடந்த பத்திரிகையை எடுத்துக்கொண்டு நடந்தான். ஜானகி சென்று விட்டாளா என்பதை பார்க்கத் திரும்பினான். அதேக்ஷணம் ஜானகியும் ராமனைத் திரும்பிப் பார்த்தாள். ராமன் மனதில் சொர்க்க லோகத்தைவிட்டு பிரிவதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. பங்களாவைவிட்டு வெளியே வந்ததும் பத்திரிகையைப் பார்த்தான். அது ஓராண்டிற்குமுன் வெளிவந்த தினப்பதிப்பு. அதில் முதல் பக்கத்தில் மத்திய சிறிய பாகம் வெட்டப்பட் டிருந்தது. வெட்டப் டிருந்த பாகத்திற்கு கீழே எழுதப்பட் டிருந்ததைக் கூர்ந்து கவனித்தான். அதேக்ஷணம் வியப்பும் திகைப்பும் உண்டாய்விட்டது.

'இந்த இதழில் நம்முடைய புகைப்படமல்லவோ வெளிவந்திருந்தது. அப்படியானால் நமது புகைப்படத்தையா ஜானகி வெட்டி வைத்துக்கொண்டாள்! பழம்பிரதிகளை யெல்லாம் தேடிப் பார்த்து வெட்டி வைக்க வேண்டிய காரணமென்ன? ஒருவேளை சிறை செய்த எல்லோருடைய புகைப்படங்களையும் வெட்டி வைத்துக் கொள்கிறாளோ என்னமோ! அப்படியிருந்தால் அப்பொழுதே யல்லவோ வெட்டி வைத்திருக்க வேண்டும். அப்படியிராது. நமது புகைப்படத்தை வெட்டி வைத்துக்கொள்ள வேண்டிய காரணம் இன்னும் புலப்படவில்லையே. எதற்கும் நாளைவருவோம்' என்று புறப்பட்டான்.

* * *

மாசற்ற அன்பால் கட்டுண்ட ராமனுக்கு 'நாளை வருவீர்களா?' என்ற சொற்கள் காதில் ஒலித்தவண்ணமே இருந்தன. தான் ஜானகியின்பேரில் மாசற்ற அன்பு வைத்திருப்பதை ராமன் உணர்ந்து கொண்டான்; நாகரிகமெனச் செப்பும் சின்னங்கள் ஒன்றுமின்றி ஆடம்பரமற்ற முறையில் உடுத்தியிருக்கும் ஆடைகளும் களங்க மற்று விளங்கும் மந்தகாசமும் ராமனின் மனக்கண் முன் தோன்றி மறையலாயிற்று. மறுநாள் மாலைப்பொழுதை ஆவலுடன் எதிர் நோக்கிக் கொண்டிருந்த ராமன், ஜானகியின் பங்களாவை நோக்கிப் புறப்பட்டான், அவன் எடுத்தடி வைக்கும் ஒவ்வொரு அடிகளும் சொர்க்கலோகமென சொல்கிறார்களே—அப்படியுமொன்று இருக்குமானால்—அதற்கு செல்பவர்களின் மனநிலையை ஒத்திருந்தான். பங்களாவின் உட்புகுந்து சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு நேற்று

அமர்ந்திருந்த கல்மேடையண்டை சென்று அமருகையில் 'வந்துவிட்டீர்களா?' என்று ஆனந்தமான மெல்லிய தொனியில் வந்த வார்த்தைகளைக் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். சிறிது தூரத்தில் ஜானகி நின்றிருந்தாள். மறுநிமிடம் ராமுவினுடைய முகம் புன்முறுவலால் விரிந்தது. ஜானகி—ராமனைக் கண்ட அவாவினால் 'வந்துவிட்டீர்களா!' என்று கேட்டாளே தவிர மறுபடி என்ன பேசுவதென்று தோன்றாமல் நின்றாள். அதே நிலையில் ராமனும் சிறிதுநேரமிருந்தானாயினும் பிறகு தானே முதலில் பேசுவதெனத் தீர்மானித்து' நான் இங்கு வந்தது தங்கள் தந்தைக்குத் தெரியுமா?' என்றான்.

ஜானகி:—தெரியாதென்றே நினைக்கிறேன். தாங்கள் அவருக்குத் தெரியாமலோ அல்லது அவரது அனுமதியன்னியிலோ இங்கு வருவது சரியல்ல—அது நேர்மையல்ல. நான் இப்படிச் சொல்வதற்காக தாங்கள் வருத்தப்பட வேண்டாம். அதற்கு சில காரணங்களுள. முதலில் தாங்கள் என் தந்தையுடன் சிநேகம் செய்துகொள்ள வேண்டும். பிறகு தாங்கள் இங்கு வருவதில் யாருமே தடை சொல்லமாட்டார்கள்' என்றாள்.

(தொடரும்)

சந்தேகப் பேய்

[என். ஜி. ராஜன்]

என்னே நம் இந்திய நாடு! என்னே நம் இந்திய மக்கள்! இவ்வளவு தாழ்வான நிலைமைக்கும் இவ்விந்து சமூகம் வந்துவிட்டதே. 'காதல்' எனும் பதத்தின் கருத்தை உணராத காதகர்கள் தம் காமவலையை கற்பிற்சிறந்த காரிகைகள்மேல் வீசுகின்றனர். இதன் கருத்தையுணராத இளங்கன்னிகைகளும் அவர்களின் இக்கபட வலையிற் சிக்குண்டு கலங்குகின்றனர். இது தான் என்றால், இக்காம தூதர்கள் கண்டவர்மீதும் காதல் கொள்கின்றனர். இது பாதகமேயன்றி காதலாகுமோ? ஒரு மாதைக் கண்ட மாத்திரத்தில் அவளைத் தன் காதலியாக நினைக்கும் இக்கொடும் பாவிகள் தம் சகோதரியாக அவர்களைக் கருதாதது என்னே? அவர்கள் இங்ஙனம் நடப்பதால் எவ்வளவு கஷ்டங்கள் நிகழ்கின்றன? எத்தனை உயிர்கள் மரிக்கின்றன? அதன்பயனை உண்மையாய் நடக்கிறவனையும் நம்ப முடிகிறதில்லையே. இதற்கிலக்காக நான் கண்ட காட்சியைக் கூறுகின்றேன்.

அரங்கசாமி ஐயங்கார் என்றொரு பக்காப் பிராமணர் இருந்தார். இவருக்குக் 'குஞ்சு' என்றொரு குமாரனும், 'வஞ்சு' என்றொரு குமாரத்தியும் உண்டு. அருமருந்தன்ன பிள்ளை குஞ்சுவுக்கு ஐந்து வயதாவதற்குள் அரங்கசாமி அயனுலகை யடைந்தார். அவர்தம் தர்மபத்தினி தன் கணவன் சிறிது பொருள் வைத்துச் சென்றதால், தன் மகளை ஒரு வக்கிலுக்குக் கலியாணம் செய்வித்து: மருமகனையும் தன் மனையிலேயே வைத்துக்கொண்டாள்.

இடையில், செல்வக் குழந்தை குஞ்சுவும் சீருடன் வளர்ந்து வந்தான். வயதும் பதினொன்காகியது. இவனுக்கொரு நண்பன் உண்டு. இந்நண்பனின் பெயரோ கோவிந்தசாமி. இவனுக்கு வயதோ பதினெட்டுக்கு மேலிருக்கும். ஜாதியில் பிராமணன் அல்லன் எனினும் பிராமண ஒழுக்கம் கொண்டிருந்தான். கோவிந்தசாமியின் தாய் தந்தையர் கிராமத்தில் வசித்து வந்ததால், இவன் குஞ்சுவின் வீதிக் கடுத்த வீதியில் தனி அறையில் வசித்து வந்தான். இவன் தன் நண்பன் குஞ்சுவின்மீது அளவிலா அன்புகொண் டிருந்தான். குஞ்சுவின் தாயை தன் அன்னையினும் பதின்மடங்கு அதிகச் சிறப்

பாகவே மதித்து வந்தான். தன் நண்பனின் தமக்கையைத் தன் உதிரத்தோடு பிறந்த சகோதரியென்றே நினைத்து வந்தான். இவன் பத்திரிகைப் பிரியனாதலால், அவளும் இவனை அச்சமின்றி இவன் வாசித்த, பத்திரிகைகளைக் கேட்பது வழக்கம். அப்படி அவள் கேட்கும்பொழுதும் தலைகுனிந்து பதிலிருத்தனனேயன்றி ஒருநாளும் தலைநிமிர்ந்து பதில் கூறியதை நான் கண்டது கிடையாது. எவரும் கண்டதாகக் கூறவும் முடியாது இவன் அவள் பாதத்தைப் பார்த்திருப்பானேயன்றி அவள் முகத்தைப் பார்த்தறியான், அன்றியும் அவர்கள் இவனை நம்பி தம் பெட்டியைத் திறந்து பணம் வைக்கவும் அதை எடுத்துக் கொடுக்கவும் அனுமதி கொடுத்திருந்தனர். இவனும் ஒருவிதக் கெடு எண்ணமுமின்றி அவர்கள் பிள்ளையைப் போலவே நடந்து வந்தான்.

அவ்வளவு நம்பிக்கையும் நற்குணமும் பொருந்திய இவன்மீது ஓர் அபாண்டப் பழிமூண்டது. குஞ்சுவின் இல்லத்தில் மற்றோர் குலத்துரோகி குடி இருந்தான். அவன் தன் மனைவி இருந்தும் பிறர் மனைவிமேல் இச்சை கொண்டான். கலியாணமான பெண்ணாயிற்றே என்றும் கருதினதில்லை. நம் மனைவியைப் பிறர் இச்சித்தால் நமக்கு எம்மாதிரி இருக்கும் என்றும் எண்ணினான் இல்லை, ஆம். என் நினைக்கப் போகிறான்? ஒரு பெண் அகப்பட்டால் அவளுக்காகப் பெற்ற தாயையும், பெண்டிர் புதல்வியையும், மற்றவனுக்குப் பத்தினியாக்கியாவது அவளுடன் ஆசைகொண் டிருந்தால் போதும் எனும் பாழும் பேய்களன்றோ இவர்கள்? பத்தினிப் பெண்களைக் கெடுக்கும் இப்பாதகப் பிசாசுகள் இருக்கும்வரை நம் பாரத நாட்டிற்குச் செழிப்பேது ?

மேற்கூறிய பாதகனாகிய கிருஷ்ணசாமி தன் காமவலையை, கற்பிளங்குமரியாகிய நம் வஞ்சுவின்மீது வீசினான். ஆயின் சிறிது கற்றுணர்ந்த அக்காரிகை அவனது கபடவலைக்ககப்படவில்லை. அவனை அவமானம் செய்ய வேண்டும் என்று எண்ணினளாயினும், இதைத் தன் கணவனிடம்கூறின் எங்கு கோபமுறுவரோ, என்று எண்ணியவளாய் தன் தாயிடம் கூறினள். உடனே, நற்குணக் குன்றாகிய அவ்வம்மையும், அவனை வீட்டைவிட்டு காலிசெய்து விட்டாள். வேறு வீட்டிற்குப் போய்விட்டதால் இக்காதகனது செய்கை சாதகமாகவில்லை. இச்செய்கை வஞ்சுவின் கணவனுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவர் கற்றுணர்ந்தவர் எனினும், எதையும் ஆராயாது வஞ்சுவின்மீது சந்தேகம் கொண்டார்.

இஃதிங்ஙனமிருக்க, குஞ்சுவின் நண்பனாகிய கோவிந்தசாமி இல்லத்திற்கு வந்தான். வந்தவன், குஞ்சு மெத்தையி லிருந்ததால் இவனும் மெத்தைக்குச் செல்ல மெத்தைப்படியில் ஏறும்போது, குஞ்சுவின் தமக்கையும் மெத்தையிலிருந்து அதிக வேகமாக ஓடி வந்த

தால் இவனேறுவதையும் கவனியாது அவள் அதிவிரைவாக இறங்கி விட்டாள். ஒரு மாதைக் குறுக்கிடுவது தவறாயிற்றே, திரும்பி விடலாமா என்றெண்ணுவதற்குள் இருவாது புஜமும் இடிபட்டு விட்டது: அவனைவிட்டு இரண்டுபடி கீழிறங்கியும்விட்டாள். அவ் வமயம், வஞ்சுவின் கணவன் மெத்தைப்படியருகில் தோன்றினன். அப்போது கண்ட காட்சி அவனுக்கு கோவிந்தசாமியின் மீது ஒருவித சந்தேகத்தை உதிக்கச்செய்தது. ஆயின் வஞ்சுவோ இதைக் குற்றமாகக் கருதினளில்லை. கோவிந்தசாமியும் முதலில் ஒரு மாதை குறுக்கிடுவது தவறு என்றெண்ணினனாயினும், அவளைத் தன் சகோ தரியாகக் கருதியதால், அவனுக்கும் கெடுஎண்ணம் தோன்றிற்றிலது.

அன்றிரவு வஞ்சுவின் கணவன் தன் மனைவியைநோக்கி, 'வஞ்சு! இனி நம் வீட்டுக்கு கோவிந்தசாமியை வாவேண்டாம் என்று சொல்லிவிடு.' அவனுக்குப் பெண்கள் வருகின்றார்களே என்றும் தெரிகிறதில்லை' என்றான். இதைக்கேட்ட வஞ்சு கோவிந்தசாமியின் மீது கொண்டிருந்த சோதர அன்பால், 'கோவிந்தசாமி மிகவும் நல்லவன்; அவன் ஏதோ தெரியாது செய்துவிட் டிருப்பான்' என்று கூறியது அவன் சந்தேகத்தை அதிகப்படுத்தியது. உடனே கோபம் கொண்டவனாய், 'அவனுக்காக நீ பரிந்து பேசவேண்டாம்' என்று கூறி, தினந்தோறும் அவளை உண்மையைக் கூறுமாறு பல விதத்திலும் துன்புறுத்தினான். சூது அறியாத அக் கோதையால் யாதும் செய்ய இயலவில்லை. ஆகையால் அவள் எப்பொழுதும் 'நான் குற்றமற்றவள்' என்று கூறினாளேயன்றி மற்றொன்றும் கூறவில்லை.

இஃது இங்ஙனமிருக்க, ஒருநாட்காலை கோவிந்தசாமி வழக்கம் போல் குஞ்சுவின் வீட்டிற்கு வந்தான். உடனே அவன் நண்பன் இவனை நோக்கி, 'நீ யன்று என் தமக்கை வஞ்சுவை, மெத்தைப்படி யில் குறிக்கிட்டு சென்றனையாம். அதனால் உன்னை எங்கத்திம்பேர் (தமக்கை மணாளர்)வாவேண்டாம் என்று கூறிவிட்டார்'என்றுநடந்த யாவையும் கூறி, தன் தமக்கையைத் துன்புறுத்துவதையும் கூறினான்.

இதைக்கேட்ட கோவிந்தசாமியின் மனம் அனலிடு மெழுகென உருகியது. யாதும் செய்ய இயலாதவனானான். அவன் கண்களில் நீர் கலங்கியது. நீர் நிறைந்த கண்ணுடன் வஞ்சுவை நோக்கினான். 'அக்கா! உண்மையில் நான் அம்மாதிரி நினைக்கவில்லையே' என்று அவன் கண்கள் கூறியது, வாய் ஊமையாகியது. இதைக் கண்ட வஞ்சுவின் தாமரை இதழ்க்கண்ணும் இவனுக்காக வருந்துவது போல் மங்கியது. அவள் பொன்னிற முகம் புளுதியடைந்தது. உடனே ஒன்றும் பேசாமல் கண்ணைத் துடைத்துக்கொண்டே உட் சென்று விட்டாள்.

கோவிந்தசாமியும் ஏதேதோ எண்ணியவனாய்த் தன் ரூமை யடைந்தான். ரூமில் உள்ள தன் மேஜையருகிற் சென்றான். எதிரி

லிருந்த கண்ணாடியில் தன் உருவத்தைக் கண்டான். கண்கள் கலங்கின. பெண்களைப்போல் வாய்விட்டழலாமா என்றும் எண்ணம் கொண்டான். உடனே எதிரில் உள்ள உருவம் ஓர் அசட்டுச் சிரிப்பு சிரித்தது. அன்றியும் 'மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே' என்று கூறுவதுபோல் இருந்தது. உடனே ஏதோ எண்ணம் கொண்டவனாய் ஒரு காகிதமும் பென்சிலும் எடுத்து அதில் என்னமோ எழுதினான். பிறகு தன் க்ஷவரக் கத்தியை எடுத்தான். அதைத் தன் கழுத்தினிடம் கொண்டு போனான். கூரான கத்தியும் அவன் உதிரத்திற்கு காத்திருந்தது போல் அவன் கழுத்தினிடம் அதிவிரைவாகச் சென்றது. சென்ற கத்தி அவன் நெஞ்சிற்குழாயின் ஆழத்தைக் கண்டது. அந்நீண்ட குழாயும் இரு துண்டாகியது.

அங்கே ஏதோ தற்செயலாய் தோன்றிய நானும் என் நண்பன் சௌந்தாராஜனும் பிரேதத்தைக் காணநேர்ந்தது. உடனே பிரேதத்தை ஆஸ்பத்திரிக்கனுப்பிவிட்டு, அந்த ரூமை ஆராய்ந்தோம். அப்பொழுது மேஜையின்மேல் ஒரு கடிதம் இருந்தது. அதைப் பிரித்து வாசிக்க அதில்,

ஆ! இந்து சமூகமே! இந்த நிலைமைக்கும் நீ வந்துவிட்டனையா! உண்மையையும் உன்னால் அறிய முடியவில்லையா? என் உதிரத்தோடு பிறந்த சோதரியாகவல்லவோ அவளை நான் பாவித்தேன். அப்படி இருந்தும் இப்பழி மூண்டதே. இவ்வளவுக்கும் காரணம் தற்கால இந்திய மக்களே. ஆங்கிலம் பேசும் படங்களை பார்த்தும், ஆபாசபான நாவல்களை வாசித்தும், உண்மை உள்ளப் போக்கை ஒருசிறிதும் உணராமல் வெளி ஆடம்பரத்தில் மயங்கி, கண்டதெல்லாம் காதல் எனப் பிறழ உணர்ந்து, தமது ஸ்திரபுத்திக் கெட்டு, தளிர்க்குமுன் பூத்து, பூக்குமுன் காய்த்து, காய்க்குமுன் பழுத்து, பழுக்குமுன் அழிகின்றனர். ஐயோ! சிறுவயதிலேயே—காதலின் கருத்துணராமலேயே—இவர்கள இவ்விதம் செய்வதால் எவ்விதப் பழிகள் நேருகின்றன. ஒருவளைத் தன் சோதரியாகப் பாவித்தாலும் அதில் சந்தேகப்படவேண்டி இருக்கிறது. இவ்விதச் சந்தேகப் பேய்கள் ஒருவனிடம் உண்டாவதால் எத்தனை உயிர்கள் மாய்கின்றனவோ? ஆம். இனி யான் இருந்தும் பயனில்லை. உலகம் உண்மையை அறியாமலேயே ஒருவனை தூற்றிவிடுகிறது. ஆயின் யான் கடைசியாக—சத்தியமாகச் சொல்லுகிறேன்—வஞ்சு ஒரு பாவமும் அறியாதவள். அவளைச் சந்தேகிப்பதிற் பயனில்லை. யாவற்றிற்கும் காரணம் இச்சந்தேகப் பேயே. இச் சந்தேகப்பேயை அகற்றுங்கள்.

அன்றியும் இதைக்கண்ணுறும் கனவான்களை என் சங்கதி யாவற்றையும் குஞ்சுவின்மூலம் அறிந்து 'தமிழரசு'க்கு எழுதுமாறு

கேட்டுக்கொள்ளுகிறேன். இங்கு தமிழரசை நான் குறிப்பிட்டதைக் கவனிக்கவும். மற்ற பத்திரிகைகளின் பெரும்பான்மையானவை நகைச்சுவையை மதிக்கின்றதே யல்லாமல் இம்மாதிரி சம்பவங்களையும், இதனல் நேரும் தீமைகளையும் கவனிக்கிறதில்லை. அன்றியும் வஞ்சு குற்றமற்றவள் என்பதை அவள் கணவனுக்கு எடுத்துக் காட்டவும்.

‘ மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே ’

இப்படிக்கு,

என்றிருந்தது. கோவிந்தசாமி.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால்
தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும்
கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சு. குமாரசாமி முதலியார்,
80, பெரிய மணியக்கார தெருவு, செங்கல்பட்டு.

லெக்ஷ்மணஞ்சனம் டிப்போ,
புதுவயல், (இராமநாதபுரம் ஜில்லா)

லங்கா குரோஸரி ஸ்டோர்,
செட்டித் தெரு, கொழும்பு.

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல்வீதி, ரங்கோன்.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

எம். வி. ராமச்சந்திரன்,
162, அம்மாபேட்டை மெயின் ரோட், சேலம்.

A. V. R. A. ADYCAPPA CHETTYAR
Lalji Mansing Building, 1st Floor,
Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.

பிரமை மேலிட்டால்........

['ரஹி']

ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு காரியத்தில் பிரமை இல்லாமலிராது. சிலருக்குப் பாட்டில் பிரமை. இவர்கள் உறங்கும் நேரம் தவிர்த்து மற்ற நேரங்களிலெல்லாம் 'தோம்ன தோம்ன தோம்' அல்லது 'ரிசநிப சரிபம கமபா' முதலியவற்றை இழுத்துக்கொண்டேயிருப்பார்கள். இன்னும் சிலருக்குத் தாளம் போடுவதிலும் மிருதங்கம் அடிப்பதிலுமே எந்நேரமும் சிந்தனை. இவர்களுக்குத் தங்கள் கரவேக சரவேகத்தைக் காட்ட அதற்குரியக் கருவி இருக்கவேண்டுமென்கிற அவசியமில்லை. தங்கள் கண்ணெதிரில் தோன்றும் மேஜை, பெஞ்சு, கதவு முதலியவற்றிலெல்லாம் தங்கள் கைவரிசையைக் காட்டுவார்கள். சிலருக்கு சிகரட் மோகம். இவர்கள் சிகரட் உபயோகம்பண்ணுவதோடு நில்லாமல் அதன் புகையை மூக்கால் வெளிப்படுத்திக் காட்டுவார்கள். அதை ஆச்சரியத்தோடு பார்ப்பவர்களுக்கு தாங்கள் அப்புகையைக் கண்ணால்கூட வெளிப்படுத்தக்கூடும் என்பார்கள். சிலருக்கு நாய்களிடம் அளவிலாப்பிரியம்.

'பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் நூலோர்
தொகுத்துள்ள வற்றுளெல்லாம் தலை'

என்னும் வள்ளுவர் மொழிக்கேற்ப இவர்கள் ஜீவகாருண்யம் ஒருவாறு பாராட்டத்தக்கதேயாயினும் இவ்விஷயத்திலும் ஒரு நடுவு நிலைமை வகிக்கவேண்டிய நியதியுண்டன்றோ? அதைக் கடந்து உண்ணும் உணவும் பருகும் நீரும் இவ்வினத்தார் தங்கள் நாய்க்கு சமர்ப்பிப்பதற்கே முந்துவார்கள். ராகவனுக்கு இறுதியில் சொன்ன பைத்தியம் பிடித்தது. அவன் வளர்த்த நாய் டய்மண்டின்பேரில் அவனுக்குள்ள அன்பை அறுதியிட்டுச் சொல்ல முடியாது. டய்மண்டை வெளியில் போகும்போதெல்லாம் தூக்கிக்கொண்டு போவான். வீதியில் ராகவனிடமிருந்து டய்மண்ட் பெறும் முத்தங்களுக்கு அளவேயில்லை. ஸ்க்ரூலூசா அதாவது மூளையில் ஏதாவது பழுதா என்று கேட்காதீர்கள். இவ்வாறு நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்க்கப்பட்டு வந்த டய்மண்டின்

பேரில் ராகவனின் நாலாவது வீட்டுக்காரனுக்கு ஆசை பிறந்தது. அது சில தினங்களில் அளவில்லாத ஆசையாய் மாறியது. அவன் டய்மண்டை தனக்கு விற்றுவிடுப்படி நயமாய்க் கேடடான். பயன் படாததால் ராகவனோடு ஒரு நாள் டய்மண்ட் வீதியில் போகையில் ஒரு சிறு பிரம்பால் அடிக்க ஆரப்பித்தான். வீதியில் சண்டையிட அஞ்சி, ராகவன் தன் டய்மண்டை எடுத்துக்கொண்டு நேராக தன் வீட்டிற்குள் வந்து தாளிட்டுக் கொண்டான். சிலநிமிடங்களில்



ராகவன் வீட்டில் பெரிய பெரிய கூழாங்கற்கள் வந்துவிழ ஆரம்பித்தன. இதற்குக் க ரணம் ராகவனின் நான்காவது வீட்டுக்காரனே. ராகவன் நாயோடு ஓடோடி வீடு சென்றதும், இவனும் தன்வீட்டு மேல்மாடிக்குச் சென்று ராகவன் வீட்டில் கூழாங்கற்களை விட்டெறிய ஆரம்பித்தான். நாயைத் தனக்கு விற்றுவிடாததற்காக இவ்விதம் செய்தான்.

ராகவனோ அக்கற்கள் ஒவ்வொன்றையும் எடுத்து வெகு உபாயமாக அண்டைவீட்டுக் கக்கூஸில் எறிய ஆரப்பித்தான். சல்லடைக் கண்போன்ற துவாரம் நிறைத்த அக்கக்கூஸின் கூரை வழியாய் ராகவன் எறிந்த கற்கள் உள்ளே விழலாயின.
முதல் கல்விழுந்தபோது அங்கு அமர்ந்திருந்த தாண்டவராயப்பிள்ளை யாரோ தவறி ஒன்று விளையாட்டாய்ப் போட்டுவிட்டார்களென்றிருந்தார். ஆனால் அடுத்த கல் அவர் மூக்கை உராய்ந்துகொண்டு சென்றது. பிள்ளையவர்களுக்கோ உடனே மூண்டது கோபம் மூக்கின்மேல். இரண்டு எட்டில்வந்து ராகவனைக் கிட்டினார் பிள்ளையவர்கள். யார் கல்லெறிந்தது? என்றார்.

ராகவன்:--யாரைக் கேட்கிறீர்கள். கொஞ்சம் மறைந்திருந்து கவனியுங்கள்' என்று நாட்காவது வீட்டுக்காரனைக் காட்டிவிட்டான். தாண்டவராயப் பிள்ளை ஒரே பாய்ச்சலாய் ஓடிச்சென்று கூழாங்கல் எறிந்தவனை அதாவது ராகவனின் நான்காவது வீட்டுக்காரனை கையைப் பிடித்து போலீஸ்டேஷனுக்குக் கூட்டிக்கொண்டு போனார்.

'அற்ப ஆசைக் கோடி தவத்தைக் கெடுக்கும்' என்பதுபோல் அற்ப விஷயங்களில் பிரமை மேலிட்டால், அது சில சமயங்களில் மானக் கேட்டை விளைவிக்கிறது. என்னே இந்நாய் பைத்தியம் செய்தவேலை!

ராஜத்தின் கனவு

[சி. கண்ணு]

நான் பத்து வயது சிறுமியாக இருக்கையில் எனது பெற்றோர்கள் என்னை ஓர் அழகிய வாலிபருக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். என் கணவரோ நல்ல திடகாத்திரமுள்ள கட்டழகர். உயர்குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். F. A. வரையில் படித்து பாஸ் செய்து பம்பாய்க்குச் சென்று எலக்டிரிக் எஞ்சினியர் வேலைக்குப் படித்து பரிட்சையில் முதலாவதாய் பாஸ் செய்து வந்தவர். தற்பொழுது 300 ரூபாய் சம்பளத்தில் அமர்ந்து இருக்கிறார். நானும் ஐந்து வயது சிறுமியாய் இருந்தது முதல் பள்ளியில்விடப்பட்டு அதிகஊக்கத்துடன் படித்து வந்தேன். நான் 11வது வயதில் பூப்பெய்தினேன். அதன்பிறகு வைதீகப் பிச்சுகளாகிய என் பெற்றோர்கள் என்னை பள்ளியில் படிக்கவிட மறுத்தனர். ஆகையால் படிப்பை நிறுத்திவிட்டேன். சிறிது காலத்திற்கெல்லாம் நான் புருடனுடன்வாழ புக்ககம் சென்றேன். என் புருடனுடன் பிறந்தவர்கள் நான்கு பேர். அவர்களில் மூவர் ஆண்பிள்ளைகள், ஒருவர் பெண். நான் புக்ககம் சென்றதும் என் மாமியும் நாத்தியும் முதலில் என்னை அன்புடன் வைத்திருந்தனர். என் புருடனும் என் வார்த்தைக்கு பதில் சொல்லாமல் இருந்து வந்தார். நானும் அவர்களுக்கு தக்கபடி பணிந்து நடந்து வந்தேன். இப்படி ஒருவருடம் சந்தோஷத்துடன் வாழ்ந்துவந்தேன்.

ஓர்நாள் பகல் 12 மணி இருக்கும். அன்று மாலை 3 மணிக்கு என் நாத்தியின் கல்யாண விஷயமாய் மாப்பிள்ளை வீட்டார் பெண் பார்க்க எங்கள் வீட்டிற்கு வருவதாய் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அச்சமயம் என் நாத்தியும், என் மாமியையும், என்னையும் தவிர மற்றவர்கள் யாரும் வீட்டில் இல்லை. எனது மூன்று மைத்துனன்மார்களும் சாமான் வாங்க கடைக்குச் சென்றிருந்தனர். அதே சமயம் ஓர் தந்திச் சேவகன் கையில் ஓர் கவருடன் எங்கள் வீட்டிற்குள் நுழைந்தான். என்மனம் தந்தியைக் கண்டதும் படபடத்தது. தந்தியை என்னிடம் கொடுத்தான். உடனே நான் அதை வாங்கி நடுக்கத்துடன் பிரித்துப் பார்த்தேன். அதைப் பார்த்த மாத்திரத்

தில் என் தலே சுழன்றது. என் நினைவு மாறிற்று. உடனே, ஆ! என் காதா! நீர் இப்படியா போகவேண்டும் என்ற குரலுடன் அப்படியே ஸ்தம்பித்து கீழே விழுந்து விட்டேன். பின்பு என் கதி என்னவாயிற்றென்று எனக்குத் தெரியாது. மறுபடியும் ஸ்மானே வந்து கண்களேத் திறந்து பார்க்கையில் நான் ஓர் படுக்கையில் கிடத்தப்பட்டிருந்தேன். என்மாமியும் என் நாத்தியும் என்னைப்பார்த்து, அடி ராஜம்! என்னடி இப்படி செய்துவிட்டனே? தந்தியில் என்ன எழுதியிருந்தது? ஏன் மூர்ச்சித்து விழுந்தாய்? என்று பலகேள்விகள் கேட்டனர். அதற்கு நான், 'மாமீ! நான் அதை எப்படி கூறுவேன்? ஹா! என் அன்பான புருஷர் ஹா! இனி அதை எப்படிச் சொல்லுவேன்? என் நாவெழவில்லையே. மின்சாரம் உடம்பில் பாய்ந்து உயிர் துறந்தனராம்' ஐயோ! நான் என் செய்வேன் மாமீ, என்று' கூறிக்கொண்டே மறுபடியும் படுக்கையில் சாய்ந்தேன். மாமியும் நாத்தியும் அடைந்த துக்கத்திற்களவில்லே. அன்று வீடு முழுவதும் அழுகைக்குரல்தான். இதற்குள் மைத்துனர்களும் வந்து சேர்ந்தனர். அவர்கள் சங்கதி அறிந்து ஆருத்துயருற்றனர். அன்று மங்கல வீடாக இருக்கவேண்டியது அமங்கல வீடாக மாறியது. முடிவில் என் புருடனின் பிரேதம் வீட்டிற்கு கொண்டுவரப்பட்டு அதன்பின் நடக்கவேண்டிய ஈமக்கடன்களும் குறைவின்றிநடந்தன. அன்றுமுதல் நான் விதவையானேன். எதற்கும் என்னே சேர்ப்பதில்லே. வெள்ளே வஸ்திரம் அணிந்து மூலேயில் கிடத்தப்பட்டேன். தவிர என் புருடன் உயிருடன் இருந்தபோழ்து நான் அடைந்த சுகம் யாவும் இப்பொழுது இழந்தேன். என் மாமியும் நாத்தியும் என்னேக் கண்டால் வெறுக்கத் தலேப்பட்டனர். தவிரவும் நான் என் புருடன் இறக்கும் தருவாயில் இரண்டுமாத கர்ப்பிணியாய் இருந்தேன். இதைக் கண்டு என் மாமியும் நாத்தியும் என்னேக் கேவலாய் தூஷிக்கத் தலேப்பட்டனர். வாயில் வந்தபடி வசைமொழியில் திட்டலானுர்கள். இதனல் என் மனம் மிகவும் துன்புற்றது. என்மாமி 'என் பெண்ணுக்கு இனி கல்யாணம் செய்ய வேண்டி இருப்பதால் நாலுபேர் இங்கு வருவார்கள். விதவையாகிய நீ இனி என் வீட்டில் இருக்கக்கூடாது' என்றுகூறி என்னே வீட்டை விட்டு வெளியே போகச்சொன்னுர்கள். அந்தோ! என்ன கொடுமை! 10 வயதில் திருமணம்நடத்தி, 11 வயதில் பூப்படைந்து, 12 வயதில் விதவையாகி 2 மாத கர்ப்பிணியாயும் ஆகி பலர் பழிக்க ஆளாகி, என் மாமியும் கைவிட்டபின் நான் எங்கு போவது? என் பெற்ளூர்களோ என் திருமணம் நடந்த $1\frac{1}{2}$ வருடம் கழித்து விண்ணுலகை அடைந்தனர். இந்த பால்ய வயதிலேயே நான் இப்பாழும் மூடச் சம்பிரதாயம் நிரம்பிய இந்து சமூகத்தில் பிறந்த பிறவிப்பயனேயும் அடைந்துவிட்டேன். செல்வத்தில் வளர்ந்துவந்த நான் இப்பொழுது

ஓர்வேளை சோற்றுக்கும் வழியின்றி எப்படி எங்கு போய் யாரிடம் தங்குவது! இன்னும் பலர் நகைக்க ஏதுவானதுபோல் கர்ப்பிணியாவும் இருக்கிறேன். புருடன் இறந்தும் கர்ப்பிணி என்றால் யார்தான் நகைக்கமாட்டார்கள்? இத்தகைய சந்தர்ப்பத்தில் நான் என் வாழ்வையே வெறுத்தேன். இனி சோற்றிற்காக பிச்சையெடுத்து வயிறு வளர்ப்பதைத் தவிர வேறு வழி இல்லை. ஆதலால் இவ்வுயிரை இனி வைத்திருக்கக்கூடாதென்று தீர்மானம் செய்துகொண்டு எப்படியாவது உயிரை மாய்த்துக்கொள்வதே சிறந்ததென்றும், அதைவிட வேறுவழி இல்லை என்றும் உறுதிகொண்டேன்.

* * *

நள்ளிரவு. சிறிது வெளிச்சம்தான் தெரிந்துகொண்டிருக்கிறது. எங்கும் நிசப்தமாய் இருந்தது' பேய்களும் அஞ்சும் காரிருள். பசியோ அகோரமாய் இருக்கிறது. தாளமுடியவில்லை. ஓர் தோட்டத்தின் மத்தியில் ஓர் பாழுங்கிணர். அதன் அருகில் ஓர் உருவம் நின்றுகொண்டு சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டிருந்தது. திடீரென கிணற்றில் குதித்துவிட்டது.

நான் விழித்துக்கொண்டேன். அப்பொழுதுதான் நான் படுக்கையினின்று கீழே தரையில் வீழ்ந்திருப்பதைக் கண்டேன். நான் கண்டயாவும் வெறும் கனவென்று அப்பொழுதுதான் உணர்ந்தேன். அன்றிரவு நான் 'தமிழரசு' என்ற ஓர் அரிய மாதாந்திர சஞ்சிகையினின்று படித்திருந்த சீர்திருத்தக் கதைகளின் பயன் என்று உணர்ந்தேன். என் உடம்பெல்லாம் வலியெடுக்கவாரம்பித்தது. நான் வீழ்ந்த சப்தத்தைக் கேட்டு என் தாயார் அங்கு வந்து என்னை நோக்கி, 'என்ன சமாசாரம்? ஏன் கீழே வீழ்ந்துவிட்டாய்? என்ன, சப்தம் உண்டாயிற்றே' என்று வினவினாள். நான் நடந்ததை ஒருவாறு கூறினேன். என் தாயார் என்னைத் தேற்றி 'கண்ணே! நீ பயப்படாதே. உனக்கு அம்மாதிரி ஒன்றும் நேராது. கவலைப் படாதே, வா நேரமாகிறது. பல்துலக்கி காலை ஆகாரம் சாப்பிடு' என்று அழைத்துச் சென்றாள்.

பாலியவிவாகத்தால் விளைந்தபயன்

—:o:—

[முருகன்]

ஆனந்தபுரம் என்பது மிகவும் வனப்புவாய்ந்த ஊர். அவ்வூரில் ஒரு பெண்ணுக்கு 4 வயதும், பிள்ளைக்கு 5 வயதுமாயிருக்கையில் இருவருக்கும் கலியாணம் நிறைவேறியது. கொஞ்ச நாளைக்கெல்லாம் பெண் வீட்டுக்காரர்கள் மிகவும் தூரமான தேசத்துக்குப் போய்விட்டார்கள். போய் மிகவும் நாளாகிவிட்டபடியால் பெண்ணுக்கு வயது 18 ஆகிவிட்டது. பெரிய மனுஷி ஆகி 6 வருஷகாலம் சென்றது.

பெண்வீட்டுக்காரர்களுக்கும் பிள்ளை வீட்டுக்காரர்களுக்கும் கடிதப்போக்குவரத்து உண்டு. ஆனால் அது பிள்ளைக்குத் தெரியாது. இந்தப் பிள்ளை வெகு கெட்டிக்காரன். சிறு வயது முதல் பட்டணம் வந்து வாசித்து நல்ல படிப்பு உள்ளவனாய், அவன் குடும்பத்தார் எல்லோருக்கும் நன்மையைக் கொடுக்கத்தக்கவனாயிருந்தான். பெண் வீட்டுக்காரர் குழந்தை பெரியவளாகி அதிக நாளானபடியால் சிக்கிரத்தில் சாந்தி முகூர்த்தத்தைச செய்து முடித்துவிட வேண்டுமென்று அடிக்கடி பிள்ளை வீட்டாருக்கு எழுதி அவர்களுக்கு எப்பொழுது சௌகரியமோ அப்பொழுது தெரிவிக்கவேண்டுமென்று கேட்டு வந்தார்கள். பிள்ளை வீட்டுக்காரர் எல்லோரும் சிக்கிரம்வந்து சேர வேண்டுமெனவே, பெண்வீட்டுக்காரர்களும் வந்து சேர்ந்தனர். பிள்ளையும் பள்ளிக்கூட விடுமுறையானபடியால் ஊருக்குவந்து சேர்ந்தான்.

பையன் வந்திருப்பவர்களைப் பார்த்து, 'என் அப்பா இந்தப் பெண் எனக்குத் தமக்கையோ! அவள் சிறிய தாயாரோ! இவர் சிற்றப்பாவோ!' என்றுகேட்டான். தகப்பன், 'அடே முட்டாள், அந்தப் பெண்தான் உன் மனைவி; தூணின்கிட்ட இருக்கிறாரே அவர்தான் உன் மாமனார். அடுத்தாற்போல் குதிருக்குப் பக்கத்தில் நிற்கிறாளே அவள் தான் உன் மாமியார்' என்று சொன்னார். பையன், 'என் அப்பா பரிகாசம் செய்கிறீர்கள்' என்று கூறிவிட்டு, 'ஐயோ அந்தப் பெண் 2 பிள்ளைகள் பெற்றிருப்பாள். யாருடைய மனைவியோ அது மட்டும் எனக்குத் தெரியாது. ஆனால் அந்தப்பெண்ணை இதுவரை

யில் நான் பார்த்ததேயில்லை. நான் பிறப்பதற்கு முன்பு இந்தப் பெண் பிறந்திருப்பாள் என்பதற்கு சந்தேகமே இல்லை' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். தகப்பனரிடம் இன்னும் உண்மையை விசாரிப்பவன்போல் சந்தேகத்தோடு ஏறிட்டுப் பார்த்தான். தகப்பனர் இதற்கு என்ன செய்யலாமென்று நினைத்துப் பின்னும் உள்ளதைச் சொன்னர். பையனே ஒன்றையும் நம்பவில்லை. அந்தப் பெண்ணுக்கும் இந்தப் பையன் தனது புருஷன் என்ற ஞாபகமாவது நம்பிக்கையாவது சிறிதளவும் கிடையாது.

பையனே மிகுந்த யோசனையில் ஆழ்ந்தான். 'ஐயோ! அந்த பெண் எனன அழகா யிருக்கிருள். முகத்தில் என்ன களை. எவ்வளவு புத்திசாலித்தனம்! யாருக்கோ கலியாணம் செய்துவிட்டார்களே. (இவன்முதலில் சந்தேகித்துக் கடைசியில் அப்படியே நம்பிவிட்டான்) எனது தகப்பனர் சொல்லுவதுபோல் அவள் எனக்குத்தான் மனைவியாய் இருக்கக்கூடாதா! அந்தப் பெண்ணுக்கு கல்யாணம் ஆகாமல் இருந்திருந்தால் நானே கலியாணம் செய்துகொள்ளுவேன். அல்லது கைம்பெண்ணுக இருந்தாலும் நான் தடையன்னியில் கலியாணம் செய்துகொள்ளுவேன். எவன் கட்டின தாலியோ கழுத்தில் தொங்குகின்றதே.' இவ்வாருக யோசித்துக் கடைசியில் பலவித நினைவுகளால் மனம் குழம்பி சஞ்சலம் அதிகரிக்க மௌனமா யிருந்தான். தகப்பனர் எவ்வளவுதடவை சொல்லியும் பிள்ளை சந்தேகப்பட்டதால் கடைசியில் ஆத்திரத்தோடு, 'அடே போடா முட்டாள்! என் பேச்சை நம்பினல் நம்பு, இல்லாவிட்டால் போ' என்று சொன்னர். பையன் ஏற்கனவே சஞ்சலமுற்றிருக்கையில் தகப்பனர் கோபத்தோடு பதில் சொன்னதைப் பொறுக்க முடியாமல் வெளியில் போய்விட்டான். பையன் வெகுவெறுப்புடன் கப்பலேறி தேசாந்திரம் போய்விட்டான். பிள்ளை வீட்டுக்காரர்கள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, 'எனக்கு ஒரே ஒரு குழந்தையாயிற்றே, போய்விட்டானே, போய்விட்டானே' என்று அழுதனர். பெண் வீட்டுக்காரர் 'ஆ! தெய்வமே! எங்களுக்கு ஒரே பெண்ணுச்சே. அது இப்படியா போகவேணும்!' என்று நினைத்து நினைத்து அழுது கொண்டு, வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போய்விட்டார்கள்.

இவ்வளவு கஷ்டமும் வினைத் தெரியாத பாலியப் பருவத்தில் கலியாணம் பண்ணினதால் வந்த வில்லங்கமென்பதற்கு கேட்பானேன்? பாலிய விவாகத்தால் விளையும் துன்பங்கள் இன்னும் எத்தனையோயுள. இந்தப் பாலவிவாகத்தை தடுக்க சாரதா சட்டம் ஏற்பட்டும், இன்னும் அநேகர் பாலிய விவாகம் செய்வதில் கண்ணுயிருக்கிருர்கள். இது நாம் செய்த பாவமே.

கேசவபுரம் மைனர்
அல்லது கற்பரசி கமலாம்பாள்

[சி. டி. வேலு]

இரவு 8 மணியிருக்கும். கேசவபுரம் பெரிய வீதியில் ஒரு மாளிகையின் உட்புரத்தில் சிறு விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருக்கிறது. ஒரு பெண்ணை ஒரு வாலிபன் தாறுமாறாக அடித்துத் துன்புறுத்திக்கொண்டிருக்கிறான். அம்மாளிகையில் வெளி ஜன்னல்வழியாக அனேக ஆண்களும், பெண்களும் வேடிக்கை பார்த்து நிற்கின்றனர். அவ்வாலிபன் கையில் சிக்கிய யுவதியோ எவ்வளவோ பொறுமையுடன் அவனது வசைமொழிகளையும், அடி உதை, குத்து முதலியவைகளையும் பொறுத்துக்கொண்டிருந்தாள். ஆனால் அவ்வாலிபனோ கொஞ்சமும் நெஞ்சிரக்கமில்லாது அவ்வனிதை ஸ்மரணை தப்பி விழும் வரை துன்புறுத்திக்கொண்டிருந்தான். இறுதியாக அம்மாதும், வேரற்ற மரம்போல் பூமியில் விழுந்தாள். அவ்வாலிபனது கைகளும், ஓய்வெடுத்துக் கொண்டதுடன் அக்கன்னிகையின் இடுப்பில் இருந்த ஒரு சாவியை எடுத்து சுவரிலுள்ள அலமாரியை திறந்து ஏதோ ஒரு சிறு வஸ்துவை கையிலெடுத்துக்கொண்டு கீழே விழுந்தவளைக் கடைக்கண்ணால் கூடத் திரும்பிப் பாராமல் மனதிற்குள், அல்ப நாய் எவ்வளவு நாட்களாக மறைத்திருக்க முடியும். இன்றைக்கல்லவா மாட்டிக்



கொண்டது' என்று சொல்லிக்கொண்டு வீட்டைவிட்டு வெளிக் கிளம்பிவிட்டான்.

அவன் யார்? கேசவபுரத்தில் உமாமஹேஸ்வரம் பிள்ளை என்பவர் ஓர் மிராசுதார். அன்னவருக்கு சுமார் இரண்டு லக்ஷ ரூபாய்க்கு மேல் ரொக்கமாகவும் பூஸ்திதிகளாகவும் இருந்தும், புத்திரபாக்கியம் வெகு நாட்களாக இல்லாமல் இருந்தது. அதற்காக அவரும் அவரது பத்தினியும் அனேக சிவஸ்தலங்களில் சென்று சுவாமி தெரிசனம் செய்தும், சத்திரம் சாவடி முதலியன கட்டுவித்தும், தானதருமங்கள் குறைவறச்செய்தும் வந்ததின்பயனாக கடவுள் கிருபையால் ஒரே புத்திரன் ஜனித்தான். வெகு நாட்களாக பிள்ளையில்லாது பிறந்த பிள்ளையை மிக மிக செல்வமாக வளர்த்து வந்தனர். அவன் பிறந்த 3 வருஷத்துக்கெல்லாம் தகப்பனாரை விண்ணுலகுக் கனுப்பிவிட்டான். பிறகு தாயாரால் வளர்க்கப்பட்டு வந்தான். என்ன இருந்தாலும் தகப்பன் இருந்து வளர்ப்பதுபோலாகுமா? கம்மனாட்டி வளர்த்த கழுசடை என்பதற்கிணங்க, சிறுவயதிலேயே பள்ளிக்கூடத்தில் சரிவர வாசிக்காமலும், சில காலிகளோடு சேர்ந்த துர்சகவாசம் செய்ததினாலும் கெட்டகுணமே அவனிடம் குடிகொண்டிருந்தது. அவனது 18 வயதில் பவானியென்னும் ஊரில் வசிக்கப்பட்ட நல்ல செல்வந்தாகிய அருணாசலம் பிள்ளையின் குமாரத்தி கமலாம்பாள் என்பவளை மணம் முடித்தனர். அப்பெண்மணியும் நல்ல அழகும், நற்குண சீலியுமாக இருந்தது மன்னியில் இல்லறத்துக்கு இன்றியமையாதவளாகவும் வந்தமர்ந்தாள். வந்த ஆறும்மாதத்தில் மாமியார் சிவகாமி ஆச்சியும், விண்ணுலகடைந்தனள். பையன் கந்தசாமியின் திருவிளையாடல்களுக்கு பெரும் முட்டுக்கட்டையாக இருந்துவந்தவளும் துலைந்தவுடன் கந்தசாமியின் களியாட்டங்கள் துவக்கலாயின

அவனது சகாக்கள் பலரும் நாள் தவறாமல் வீட்டுக்கு வருவதும், சதா சீட்டாடுவதும், குடிப்பதும், கூத்தாடுவதும், இரவில் தாசி வீடுகள் சுற்றுவதுமாக உமாமஹேஸ்வரம் பிள்ளை சிக்கனமாக சேமித்துவைத்த சொத்துகளை மனம்போனபடி செலவிடத் துடங்கிவிட்டனர். மனைவி கமலாம்பாளோ கணவன் மனம் கோணாமல் அவன் இஷ்டப்படிக்கே சகல பணிவிடைகளும் செய்துகொண்டிருந்தாள்.

சுமார் ஒரு வருஷத்தில் கைவசமிருந்த ரொக்கமும், தகப்பனார் பேங்கில் போட்டு வைத்திருந்த ரூ. 50000 மும் செலவு செய்து விட்டதுடன், தாயார், மனைவி முதலியவர்களுடைய ஆபரணங்களையும் விற்று செலவு செய்து விட்டான். சத்தகிரயம், அடமானம் முதலியவைகளின் பேரிலும் பணம் வாங்கி செலவு செய்துவந்தான். மனைவி கமலத்தின் வசம் மிஞ்சியிருந்த வைரமூக்குத்

பொட்டு இரண்டையும் தரும்படி கேட்டதற்கு கமலம் கொடுக்க மறுத்ததின் காரணமாகத்தான் மேற்கூறிய இரவு அவளை அடித்து கீழே தள்ளிவிட்டு சாவியை எடுத்து அலமாரியைத் திறந்து அதை எடுத்துக்கொண்டு போய்விட்டான். அற்பர்களின் சகவாசத்தின் கொடுமைதான் என்னே!

அன்று இரவு சுமார் ஒரு மணியிருக்கும். கமலத்துக்கு ஸ்மாரணைவந்து எழுந்து உட்கார்ந்தாள். மண்டையில் இரத்தம் வடிந்திருந்ததுடன், கைகால்களை அசைக்க முடியாதபடி வலியும் ஏற்பட்டிருந்தது. அவளோ மஹா உத்தமி. கற்பே ஆபரணமாகப் பூண்டவள். கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருடன் என்பதைக் கடைப்பிடித்து நடக்கும் குணமுடையவள். தலையில்பட்ட காயத்தை தன் சேலை முனையில் ஒரு துண்டு கிழித்துக் கட்டிக்கொண்டு மெள்ள எழுந்தாள். கணவருக்கு சாப்பாடு போடவில்லையே என்ற நினைவு வந்தது. சமையலறையில் புகுந்தாள். 4, 5 சாப்பிட்ட இலைகள் கிடக்கக்கண்டாள். ஆ, ஹோ! சாப்பிட்டுவிட்டுத்தான் போயிருக்கிறார் என்று நிம்மதியுடன் தன் பசியை தீர்த்துக்கொள்ளலாமென்று அன்னம் வட்டித்த பாத்திரத்தைப் பார்த்தாள். ஒரு பருக்கைகூட கிடையாது. கண்பஞ்சடைந்தது; கால் தள்ளாடியது. மயங்கிப் படுத்தாள்; நித்திராதேவியின் அன்பிற்குப் பாத்திரமானாள்.

II

அந்தப் பாவி கந்தசாமி தாசி காந்தாமணிக்கு அடிமைப்பட்டு அவள் வீடே கதியாக இருந்துவிட்டான். கமலமோ ஒவ்வொரு நாளும் வருவார் வருவார் என்று எதிர்பார்த்திருந்தாள். சுமார் ஆறு மாதமாயிற்று. கமலத்துக்கு சாப்பாட்டுக்கே கஷ்டமாகிவிட்டது. வீட்டிலிருந்த தட்டு முட்டு சாமான்களையும், மாச்சாமான்களையும் ஈனமான விலைக்கு விற்று காலம் கடத்திக்கொண்டிருந்தாள்.

ஒரு நாள் இரவு கந்தசாமி அவனது சகாக்கள் சிலருடன் திடீரென்று வந்து நுழைந்தான். கமலமோ கரைகடந்த மகிழ்ச்சியுடன் கந்தசாமியை 'வாருங்கள். இத்தனை நாட்களாக எங்குச் சென்றீர்கள். என்னை ஒருவேளை சாப்பாட்டுக்கும் கெதியன்னியில் விட்டு விட்டு இப்படி ஊர்சுற்றுவது தகுமோ? நம்மைச் சேர்ந்தவர்கள் தூஷிக்கின்றார்களே, நமது முன்னோர்கள் இருந்த காலத்தில் நமது குடும்பத்தின் பெருமை என்ன! இப்போது அடைந்திருக்கும் சீர்கேடென்ன? தாங்கள் வீட்டுக்கே வாராமையால் சாப்பாட்டுச் செலவுக்காக வீட்டிலிருந்த சாமான்களை எல்லாம் விற்றுப் புசித்துவிட்டேன். இனி மீதி இருப்பதையாவது வைத்துக்கொண்டு சிக்கனமாக குடித்தனம் செய்துவருவோம். எனக்கு ஒரு நாட்டினமும், கொஞ்சம்

பருத்திப் பஞ்சும் வாங்கிக்கொடுங்கள். எனக்கு நூல் நூற்கத் தெரியும். நாள் ஒன்றுக்கு 2 ராத்தல் நூல் நூற்பேன். அதில் நமக்கு சாப்பாட்டுச் செலவுக்கு வந்து விடும். இனி எந்த ஊருக்கும் போக வேண்டாம். நானோ பெண்பால். ஒரு விநாடிகூட தங்களைப் பிரிந்திருக்க முடியாது' என்று கண்கள் கண்ணீர் சொரிய, கல்லும் கரைந்துருகும்படி கந்தசாமியிடம் புகன்று நின்றாள். அவனோ அதைக் காதில்வாங்குபவன். 'சீ நாயே; என் கண்முன் நில்லாதே. துஷ்டை, என் மூதாதைகள் தேடிவைத்த சகல சாமான்களையும் விற்று விட்டாயே. சண்டாளி! நானும் எனது நண்பர்களும் இப்பொழுது எதில் உட்காருவது என்று நினைத்துக்கொண்டாய்? இந்த நிமிஷம் முதல் உனக்கு இங்கே இருக்க இடமில்லை. உன் தாயார் வீட்டுக்குத் தொலைந்துபோ' என்று மயிரைப் பிடித்து நடுவீதியில் அவளைத் தள்ளிவிட்டு வீட்டுக்கதவை இழுத்துப்பூட்டிவிட்டு வெளிக் கிளம்பினான். கமலத்துக்கோ வெந்த புண்ணில் வேல் ஏற்றினது போலாயிற்று. கந்தசாமியின் காலைப் பிடித்துக்கொண்டு 'நாதா, என்னை இப்படி நடுவீதியில் விட்டுப்போவது தருமமா? உங்கள் கண்யமான குடும்பத்தில் வாழ்க்கைப்பட்ட பெண்ணை இப்படி அநாதியாக தெருவில் தவிக்கவிட்டுப்போவது உங்கள் குடும்பத்துக்கு இழிவல்லவா? பார்ப்பவர்கள் கேவலமாகப் பேசமாட்டார்களா? நான் தங்களைப் பிரிந்து என் தாய்வீடு சேர்ந்தால் என் தாய்வீட்டார் என்னைத் தூற்றுவார்கள். ஆதியில் தாங்கள் இருந்த நிலைமை என்ன? சிலகாலமாக (தாயார் இறந்தபின்) இந்தக் காலிகளுடன் கூடி மதுபானத்திலும், சூதாட்டத்திலும், வேசியர்கள் சகவாசத்திலும் ஏராளமான சொத்துக்களை வீணில் செலவு செய்துவிட்டு என்னை இக்கதிக்காளாக்கியதும் அன்னியில் வீட்டைவிட்டும் துரத்துகிறீர்கள். இந்த உயிர் (உடல்) தங்கள் பணிவிடைக்கென்றே இறைவன் அமைத்தது, தங்களுக்கே உரித்தானது. இதைத் தாங்களே உதறித் தள்ளினால் இது இனி யாரை அடையும்? இதோ தங்கள் பாதத்தடியிலேயே உயிரை மாய்த்துக் கொள்ளுகிறேன்' என்று அவனது காலை விடாமல் பிடித்தபடியே அழுதுபுரண்டாள்.

கல்லினும் கடிய நெஞ்சுடைய கந்தசாமிக்கோ கிஞ்சிற்றும் மனம் இளகவில்லை. 'சீ, துன்மார்க்கி! விடு காலை,' என்று உதறித் தள்ளிவிட்டு சகாக்களுடன் தாசிவீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

III

நண்பகல். கதிரவன் கொடுமை சகிக்கக்கூடவில்லை. புதர்கள் அடர்ந்தகாடு. மாடுகள் புல்லுள்ள இடங்களில் மேய்ந்துகொண்டும், சில தண்ணீர் தேங்கி நிற்கும் இடத்தைத் தேடிச் சென்றுகொண்டுமிருக்கின்றன. ஆடு மேய்க்கும் இடையர்கள் கானலுக்குப் பயந்து

அவரவர்களுக்கிஷ்டப்பட்ட மா, பலா, கொய்யா, இலந்தை முதலிய மரங்களில் ஏறிக்கொண்டு அவரவர்களுக் கிஷ்டமான பாடல்களை இன்னிசையுடன் பாடிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு புறம் விறகு ஒடிக்கும் ஏழைப் பெண்மணிகள் விறகு சேர்த்து ஆலமரநிழலில் வைத்துக் கத்தை கத்தையாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அருகில் இருந்த குளக்கரையில் ஒரு யௌவனமங்கை கால்கள் தள்ளாட மெள்ள நடந்து சென்று ஜலத்தில் இறங்கி இரண்டுகைகளாலும் ஜலத்தை அள்ளிப்பருகினாள். கால் தடுமாறி தாறுமாறாக விழுந்துவிட்டாள். பாதி உடல் கரையிலும் பாதி ஜலத்திலுமாக விழுந்தவள் யார்! அவளே நமது கமலா.



விறகு கட்டிக்கொண்டிருந்தவர்களில் அவளையே கவனித்துக்கொண்டிருந்த ஒருத்தி, அவள் விழுந்துவிட்டதைப் பார்த்து பரபரப்புடன் ஓடினாள். அவளுடன் இன்னும் 4, 5 பெண்களும் ஓடினர். கமலாவைத் தூக்கி மரநிழலில் கிடத்திவிட்டு சுற்றிலும் உட்கார்ந்துகொண்டு ‘அம்மா, அம்மா’ என்று அடிக்கடி கூப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். குளிர்ந்த காற்று ஜில்லென்று வீசியதுடன் கமலாவும் கண்திறந்து உடைகளைச் சரிசெய்துகொண்டு உட்கார்ந்தாள். பேச நாவெழவில்லை; கூடியிருந்த பெண்களும், ‘அம்மணி உனக்கு எந்த ஊர்? உனக்கு ஒருவரும் துணைவரவில்லையா? தனியாக ஏன் வந்தாய்? இந்தப்பாதை காட்டுக்கல்லவா கொண்டுபோய்விடும்’ என்று அவரவர்களுக்குத் தோன்றியபடி அடுக்கடுக்காக கேள்வி கேட்டார்கள். கமலாவுக்கோ பதில்சொல்ல நாவெழவில்லை. ஈனஸ்வரத்தில், ‘அம்மா இந்தப் பாவியின் வரலாற்றைப்பற்றி ஒன்றும் கேட்கவேண்டாம். அருகில் ஏதும் ஊர் இருக்கிறதா. போகும் மார்க்கம் எது? என்று பைத்தியம் பிடித்தவள்போல் நடக்க முயன்றாள். கால்கள் தள்ளாடிற்று. மற்றவர்கள் அவளை நடக்கவிடாது கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு ஊர்கொண்டுபோய்ச் சேர்ந்து அவர்களில் ஒருத்தி வீட்டில் இருக்கச்செய்து அன்னம் புசிக்கும்படி உபசரித்தனர். அவள் தாழ்ந்த வகுப்பினர் வீட்டில் ஆகா

ரம் கொள்ள மனமிசையாதவள் போல் பதில் சொன்னாள். அதை உணர்ந்த வீட்டுக்காரி அவளைப் பட்டினியாகப் போட சகியாமல் கடைவீதிக்குச் சென்று கொஞ்சம் ரொட்டியும் வாழைப்பழமும் வாங்கிக்கொண்டுவந்து பசியை தீர்த்துக்கொள்ளும்படி சொன்னாள். கமலம் அவைகளை சாப்பிட்டுவிட்டு ஆடைகளை உலர்த்திக்கொண்டு அவ் வீட்டின் திண்ணையில் படுத்துக் கண்ணயர்ந்தாள். மறுநாள் விடியற்காலை வீட்டுக்காரி கமலாவை வெளியில் வந்துபார்க்க அவளைக் காணவில்லை.

கந்தசாமியும் தான் நெடுநாட்களாக ஆசைநாயகியாக வைத்துக் கொண்டிருந்த தாசி காந்தாமணியிடம் தன் சொத்து அனைத்தையும் இழந்துவிட்டதுடன் சுமார் 50000 ரூபாய்வரை கடன்பட்டு விட்டான். கடன் கொடுத்தவர்களில் சிலர் கோர்ட்டில் வியாஜ்யம்செய்து சொத்துக்கள் பூராவையும் எடுத்துக்கொண்டதுடன் அவனையும் வாரண்டில் பிடிக்கத் துடங்கிவிட்டார்கள். அனேகம் வாரண்டுகளுக்கு அகப்படாமல் காந்தாமணி வீட்டிலேயே ஒளிந்து கொண்டு வந்தான். பாவம்! அவனிடம் பலவழிகளிலும் பிடுங்கித் தின்றுகொண்டிருந்த சகாக்களும் அவனைக் கைவிட்டனர். காந்தாமணியும் 'கந்தசாமியிடம் இனி பைசாகூட கிடையாது. இவனை வாரண்டில் பிடித்துக் கொடுத்துவிட்டால் நாம் வேறு மைனரைப் பிடித்துக்கொள்ளலாம்' என்ற எண்ணங்கொண்டு அவனைக் கண்டபடி ஏளனம் செய்தும், மனம் புண்படப் பேசியும், வீட்டைவிட்டுத் தலையும்படி பலமுறை சொல்லியும் வந்தாள்.

என்ன இருந்தாலும் தாசிகளின் குணம் விடுமா? சொத்துள்ள வரை 'தா. தா' என்று பிடுங்கிக்கொண்டு சொத்து தீர்ந்தவுடன் 'சீ! சீ!' என்று தாத்திவிடும் வேசியினத்தைச் சேர்ந்தவள் தானே தாசி காந்தாமணி.

கந்தசாமியோ கண்யமான குடும்பத்தைச் சேர்ந்தவன். வறுமை என்பதையே அறியாதவன். எப்படி அந்த ஸ்திதியில் வெளிக்கிளம்புவான்! காந்தாமணியின் சொல்லம்புகளால் இருதயம் சல்லடைக் கண்களாகத் துளைக்கப்பட்டு நெஞ்சம் கலங்கினான். கடவுளை நினைப்பான். கதறுவான். மனைவி கமலத்தின் நினைவு தோன்றியது. எங்குச் சென்றனளோ, எக்கதிக்காளாயினளோ, எங்குச் சென்று கண்டு பிடிப்பது என்று ஏங்குவான். கடன்காரர்கள் தொல்லை ஒருபுறம். பைத்தியம்கொண்டவன் போலானான்.

கபடநெஞ்சுடைய காந்தாமணியும் கந்தசாமியைக் காட்டிக் கொடுத்துவிடுவதாக ரூ. 1000 தாகு பேசிக்கொண்டு கந்தசாமியை கடைவீதிக்கு அழைத்துக்கொண்டு வந்து கடி. ந. திருவுள்ளஞ் செட்டியின் 20000 ரூபாய் வாரண்டிற்கு ஒப்படைத்துவிட்டாள்

கந்தசாமி கண் கலங்கினான். கடனைத் தீர்க்க வகையில்லை. கடை வீதியில் கண்டவர்கள் நகைக்க அவமானமடைந்தான். காந்தாமணியும் கம்பி நீட்டினாள்.

கந்தசாமி ஜெயிலுக்குள் இருக்கிறான். சதாகாலமும் தாசி வீட்டில் கோலாகாலங்கள் அனுபவித்துக்கொண் டிருந்தவனுக்கு ஜெயிலுக்குள் தனிமையில் அடைபட்டுக் கிடப்பது நரகவேதனையை அனுபவிப்பதுபோ லிருந்தது. அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக யிருப்பான். காந்தாமணியின் நினைவை ஒழித்தான். கமலத்தின் நினைவே தோன்றிற்று. அவள் சொல்லைக் கேட்டிருந்தால் இக்கதிக் குள்ளாக வேண்டியதில்லையே! சண்டாளி காந்தாமணியின் மாய வலையில் சிக்கியதனால் அல்லவா அவ்வளவு சொத்துக்களையும் இழந்து அவளாலேயே இந்த ஜெயிலுக்குள்ளும் அவதிப்படுகிறோம். ஏ! கருணாகரா ! தீனாசஷகா ! இதுவும் உன் திருவிளையாடல்களில் ஒன்றோ' என்று கதறுவான். சில சமயங்களில் உயிரைவிடவும் துணிவான். கயிற்றைத் தேடுவான். அந்தயிடத்தில் என்ன இருக்கும்! ஒரு கம்பளியும் கலயமுந்தான்! அவன் கண்களில் பட்டுக்கொண் டிருந்தன. தலைவிதி யாரைவிடும்? 6 மாதத்தையும் 6 யுகம்போல் கடத்தினான். விடுதலையடைந்தான்.

தன் சொந்த ஊராகிய கேசவபுரத்துக்கே போக மறந்தான். மனம்போன பாதைகளில் நடந்தான். ஊர்ஊராகச் சுற்றினான். ஒருவேளை அன்னத்துக்கும் கெதியின்றி வாடினான். ஒரு வீட்டுக் குச்சென்று பிச்சை கேட்டு வாங்கவும் சங்கோசப்பட்டான். சத்திரத்திலோ சாவடியிலோ படுத்துறங்குவான். அவனது முக வாட்டத்தைக் கண்டு சகியாத சிலர்கள் ஒரு அணா இரண்டணா காசு கொடுத்து வந்தார்கள். சிலர் சாப்பாடும் போட்டு வந்தார்கள். எத்தனை நாள்தான் இப்படிச் சுற்ற முடியும். உடம்பு பாதியிலும் பாதியாக இளைத்துவிட்டது. உருவமும் மாறி கருத்துவிட்டது. சுருங்கக்கூறின் கந்தசாமி என்றே சொல்ல முடியாத நிலைமைக்கு வந்துவிட்டான்.

V

திருப்பூர் பாரதமாதா நெசவுச்சாலையில் சுமார் 100 தறிகள்வரை நெசவு நடந்துகொண் டிருந்தது. அதில் 100, 150 ஆண்பாலர்களும் 200, 250 பெண்பாலர்களும் தறி நெய்துகொண்டும் பஞ்சு அடித்துக் கொண்டும் நூல் நூற்றுக்கொண்டும் இருக்கின்றனர். முதலாளி சங்கரஞ் செட்டியார் சகல வேலைகளையும் கவனித்துக்கொண்டு முன் புறவாயிலருகில் நாற்காலியில் அமர்ந்துகொண் டிருக்கிறார். மாலை சுமார் 4 மணியிருக்கும். ஒரு வாலிபன் 'ஐயா! தர்மப் பிரபு! தங்கள் நெசவுச்சாலைக்கு ஒரு ஆள் தேவை யிருக்குமா? நான் ஒரு அனாதை. என் வயிற்றுச் சாப்பாட்டுக்குக் கிடைத்தால் போதுமானது

தயவுசெய்யுங்கள்' என்று கெஞ்சிக் கேட்டு நின்றான். செட்டியாருக்கும் அவன் முகத்தைப் பார்த்த அளவிலேயே ஒருவித இரக்கம் தோன்றிவிட்டது. 'அப்பா! உனக்கு என்ன வேலை செய்யத் தெரியும்' என்று கேட்டார். வேலை தெரிந்திருந்தால் அல்லவா பதில் சொல்வான். 'எந்த வேலையைக் காட்டினாலும் செய்யத் தயார், இதுவரை ஒரு வேலையிலும் தேர்ச்சி பெறவில்லை. பழகவுமில்லை' என்றான். செட்டியாரும் தரிநெய்யச் சொல்லலாம் என்ற எண்ணத்துடன் அன்றுமுதல் வேலைக்கமர்த்திக்கொண்டார். யாரை? நமது கந்தசாமியைத்தான்.

மூன்று மாதமாக வேலை கற்றுக்கொண்டதின் பயனாக ஒரு தனித் தரியில் நெசவு செய்யத் தொடங்கினான். சுறுசுறுப்பாகவும் அழுத்தமாகவும் நெய்து வந்தமையால் முதலாளியும் நல்ல கூலி கொடுத்து வந்தார். அதில் செலவு செய்ததுபோக பாக்கியை முதலாளியிடமே விட்டு வைத்திருந்தான்.

ஒருநாள் நெசவுக்கு நூல்வா தடைப்பட்டுவிட்டது. நூல் நூற்கும் இடத்துக்கு இவனே நேரில் சென்றான். அங்கு ஒருபுறம் பஞ்சு அடித்துக்கொண்டும் மற்றொருபுறம் அனேகம் பெண்கள் வரிசை வரிசையாக ராட்டினத்தில் நூல் நூற்றுக்கொண்டும் இருந்தனர். அவர்களைக் கடந்து சென்று கொண்டிருந்த நமது கந்தசாமி ஒரு பெண்ணைப் பார்த்து, 'ஆம்! அவளேதான் கமலாவாக இருக்க வேண்டும். அல்லது அவளைப்போலவே வேறு ஒரு பெண்ணைப் பிரமன் படைத்து விட்டானோ! நமது கமலா எப்படி இங்கு வந்திருக்க முடியும்' என்று மனதுக்குள்ளாகவே எண்ணமிட்டுக்கொண்டு அவளையே பார்த்து தயங்கி நின்றான்.



அவளும் இவனை தலை நிமிர்ந்து பார்த்தாள். அவளது வாயில் நின்றும் 'ஹா! பிராணநாதா!' என்ற சப்தம் கிளம்பிற்று. அப்படியே மூர்ச்சையாகிச் சாய்ந்துவிட்டாள். கந்தசாமியும் ஆச்சரியத்துடன் 'இவள்தான் நமது கமலா' என்று அசைவற்று கலங்கிய கண்களுடன் ஸ்தம்பித்து நின்றான். கமலா விழுந்ததைக் கண்ட மற்றப் பெண்மணிகள் பரபரப்புடன் ஜலம் கொண்டு வந்து அவளது மூர்ச்சை

யைத் தெளிய வைத்தனர். கண்ணைத் திறந்து பார்த்தாள். கந்தசாமி அருகில் உட்கார்ந்திருப்பதையும், முதலாளி சங்கரஞ் செட்டியார் நிற்பதையும் கண்டு நாணத்துடன் எழுந்து ஒருபுறமாக நின்றாள்.

முதலாளிக்கு ஒன்றும் புரியவில்லை. கந்தசாமியோ அனுதை என்று தெரிவித்தான். கமலாவோ புருஷன் உப்பு சத்யாக்ரஹத்தின் போது சர்க்காரால் தண்டனை யடைந்து சிறையிலிருந்து வருவதாகத் தெரிவித்தாள். இவர்கள் இருவரின் வாழ்க்கையில் ஏதோ மர்மம் இருக்கிறது. இதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதாக நினைத்து தமது சொந்த மாளிகைக்கு இருவரையும் அழைத்துச் சென்றார். இவர்கள் பால் கவலைகொண்ட சில ஆண்களும் பெண்களும் இவர்களைப் பின் தொடர்ந்தனர்.

கந்தசாமி தனது வரலாறு முழுமையும் ஒன்றுகூட ஒளியாமல் சொன்னான். கமலாம்பாளும் கந்தசாமியை விட்டுப் பிரிந்தது முதல் அந்த நிமிஷம்வரை நடந்தவைகளைச் சொல்லி நின்றாள். இவர்கள் இருவரது வரலாறுகளைக் கேட்டவர்கள் அனைவரும் கந்தசாமியின் மேல் ஒருவித ஆத்திரமும் இப்பொழுது இவர்கள் பிரிந்து கூடினதை கண்டு சந்தோஷமும் கொண்டு அவரவர்கள் வேலையைக் கவனிக்கச் சென்றனர்.

முதலாளி சங்கரஞ் செட்டியாருக்கும் அவ் விருவர்பால் பரம அன்பு உண்டாய்விட்டது. கந்தசாமியின் பாலியத் திருவிளையாடல்களுக்கு சற்றுக் குறை கூறினர். பிரிந்துகூடிய காதலர்களிருவரும் சந்தோஷசாகரத்தில் கொஞ்சநேரம் அமிழ்ந்து மீண்டனர். சங்கரஞ் செட்டியாரைக் காப்பாற்றும்படி வேண்டினர். அவரும் அவர்களுக்கு தைரியமொழிகளைச் சொல்லி, அன்றுமுதல் ஒரு வீடு கொடுத்து தனியே இருக்கச் செய்து கமலாவுக்கு ராட்டினமும் பஞ்சும் கொடுத்துவந்தது மன்னியில் கந்தசாமிக்கும் தனி நெசவு போட்டுக் கொடுத்து விட்டார்.

காதலர்களிருவரும் சிக்கனமாகச் செலவு செய்து குடுத்தனம் நடத்தி வந்ததின்பலனுக தொழிலில் நல்ல ஊதியம் கிடைத்தது. கடவுள் திருவருளால் ஒரு ஆண்மகவும் ஒரு பெண்மகவும் பிறந்திருக்கிறது. இப்பொழுது திருப்பூரில் ஒரு கதர் கிடங்குக்கே கந்தசாமிப் பிள்ளை முதலாளியாகி விட்டார். கமலம் இன்னும் ராட்டினத்தில் நூல் நூற்று தரிகளுக்கு கொடுத்து வருகிறாள். அவர்கள் நெசவுச் சாலையில் அனேகம் ஏழைகள் கூலிவேலை செய்து பிழைத்து வருகிறார்கள். அவர்களுக்கு மறுபடியும் திரண்ட ஐஸ்வரியமும், தீர்க்காயுளும் அருள்புரியும்படி கடவுளைப் பிரார்த்திப்போமாக.

பேயின் பேட்டி

[V. A. M. முஹைதீன்]

மாயா ஜால விநோத விகட சிந்தாமணியான மிஸ்டர். தேவதாச பாகவதர் அவர்களும், வேறு பிரபல நடிகர்களும், மானிலத்தில் நாடகமேடையில் தனக்கு நிகரில்லை என்று தங்கப் பதக்கமும், பற்பல வெகுமதிகளும் பெற்ற குயிலின் குரலை குண்டால் அடித்துத் தோற்கடிக்கும், 'மிஸ். கனகாம்புஜம் அம்மாளும்' நடிக்கும் 'அரிச்சந்திரா' நாடகம் இன்றே கடைசிமுறை, வரத்தவறுதீர்கள்' என்று எழுதிய பெரிய வால்நோட்டீஸ் ஒன்று, எங்கள் ஊரில் 'சுப்பிரமணியஞ் செட்டியார்' பக்கத்து கிராமத்தில் முனியாண்டி பறையனிடம் வாங்கிய பழைய ஓட்டை வண்டியின் பக்கத்தில், வெளியில் அடிக்கும் வெயில், டாப்பின் வழியாய் உள்ளே வராதபடி அந்த கூண்டின்மேல் ஒட்டப்பட்டு இருந்தது.

எனக்கோ நடாகம் பார்க்கவேண்டுமென்ற பித்தம் தொண்டை வரை நிறைந்து சிற்சில சமயங்களில் உண்ணும் உணவைக்கூட வாபீஸ் வாங்கிக்கொள் என்று வெளியே தள்ளிவிடும். ஆனால் டிக்கட்டு வாங்க துட்டுவேண்டாமோ? நானே சும்மா இருப்பவன்! விளம்பரத்தைப் பார்த்ததுதான் தாமதம். என் முகம் புன்னகை பூத்தது. எழுந்தேன், குதித்தேன், கூத்தாடினேன். பிறகு என் பெண்ஜாதி கடைச் செலவுக்காகக் கொடுத்த பணத்தில் மிச்சம் பிடித்து பல வருஷங்களாக சேர்ந்து புறவாயில் முருங்க மரத்தடியில் புதைத்து வைத்த ரூபா 0—10—2 யையும் அடிக்கடி போய் இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டேன். இரவு வந்தது. என் பெண்ஜாதியிடம் திண்ணையில் படுப்பதாக உத்திரவு வாங்கிக்கொண்டு 9 மணிக்குப் பிறகு நாடகம் பார்க்க நடையைவிட்டேன்.

*　　　*　　　*

மணியோ 2 அடித்தது. நாடகமும் வெகு விமரிசையாகத்தான் நடத்தப்பட்டு முடிக்கப்பட்டது. வெளியேவந்தேன். எங்கும் காரிருள் ஓரே மயமாக மூடிக்கொண்டிருக்கிறது. மழையோ சினு சினு என்று தூத்திக்கொண்டிருக்கிறது. மின்னலோ பார்த்தோர் கண்ணை பறிகொடுக்குமாறு பளீர், பளீரென்று வெட்டுகிறது. இடியோ கேட்டோர் காது செவிடாகுமாறும், கர்ப்பிணிகள் கர்ப்பம் கலங்குமாறும் கிடுகிடென்று முழங்குகிறது. காற்றோ விர், விரென்று

வீசுகிறது. நானோ விடியுமுன் வீட்டை அடையவேணும். வீடோ நாடகக் கொட்டகையிலிருந்து 4 மைலுக்கு அப்பாலிருக்கிறது வழியோ காடு. முரடான சாலைகளையும் ஒற்றை அடிப் பாதைகளையும் கடந்துபோக வேண்டும். அநேக நாளாய் 'சாலையூர்' குளத்தைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். அங்கே திடீரென்று ஓர் உருவம் தோன்றும். அதன கால் கீழ்ப்படாது. வாயைப்பிளந்தால், 'நெருப்பு கங்காய் வந்து எதிரில்வரும் மனிதரை பொசுக்கிவிடும்' என்று என் பக்கத்துவீட்டுப் பாட்டி சொல்ல கேள்விப்பட்டிருக்கிறேன். அது அப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வந்தது. வீட்டிற்கு அக்குளத்தைத்தான் தாண்டிப் போகவேண்டும். போகும் போதே என்னால் 'கனகாம்புஜத்தின் குரலை கேட்கவேண்டுமென்ற ஆசை, இதை மறந்துவிட்டேன்.

கிட்டத்தட்ட என் உயிரை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு குளத்தை நெருங்கினேன். 10 அடி தூரத்திலுள்ள ஓர் மொட்டை பனைமரம் இரண்டாய் பிளந்து 20 அடி உயரமுள்ள ஓர் உருவம் என்னை நோக்கி நெருப்பு கங்கை சிந்தியவண்ணம் ஓடிவந்தது. கண்டதுதான் தாமதம். புத்திகலங்கியது, கண்கள் சுழன்றன, மார்பு படபடவென்று அடித்தது. கால் சோர்ந்தது; ' கண்ணே கோமளா! நீ தலையில் அடித்து கையில் கொடுத்தாலும் தட்டாது வாங்கி தின்று கொண்டாவது, உன் பாதாரவிந்தத்தில் கிடந்தாவது என் வாணாளைக் கொடுப்பேனே. அந்தோ! ஆறுமற்ற அனாதையைப்போல் குளத்தின் கரையின்மேல் பாழும்பேய், பெரும்பேய், உன்னிலும் கொடும் பேய், அதன்வாய் தீயில் அகப்பட்டு தேவலோகம் போகவேண்டுமோ. ஏ தேவா! என்னை இப்படியும் வருத்தலாமோ' என்று கதறினேன்.

இதற்குள் பேயும் நெருங்கிவிட்டது. 'ஐயோ கோமளா! என்ன செய்வேன். பாழும் பேய் பிடிக்கவருகிறதே. நீ இதினும் பன்மடங்கு இம்சித்திருக்கினும் நான் உன்னை ஒன்றும் சொல்லவில்லையே. மாபாதகப் பேய் என்னை மடியச் செய்யும் போலிருக்கிறதே' என்று சொல்லிக்கொண்டு ஓடினேன். காலோ ஓட மறுத்து விட்டது. பிறகு தடால் என்று பனைமரம்போல் கீழே சரிந்தேன் அதுதான் தெரியும்.

* * *

'ஆமாம் பைசாவுக்கு பாடுபட முடியவில்லை. உண்டு உண்டு ஓரே உறக்கமாய் உறங்கிக்கொண்டிருப்பது காணாதென்று பட்டப் பகலிலும்கூட கொஞ்சமேனும் பயமின்றி கோமளா கோமளா என்று உளறிக் கொட்டுகிறீர்களே! என்ன ஆணவம்!! மணி 9 ஆகியும்

இன்னும் படுக்கையைவிட்டு எழுந்தபாடில்லை. பைத்தியம், கிய்த்தியம் பிடித்து விட்டதா? என்று என் பெண்சாதியுடைய அசரீரிவாக்கு ஒன்று கேட்டது. திடீரென்று கண்விழித்தேன்.

என் தாயார் அம்மி அடியிலிருந்து மிளகாய் அறைத்துக்கொண்டிருந்த சப்தம்தான் இடியைப்போல் கேட்டதென்றும், என் மனைவி குளித்துவிட்டு தலையை தட்டுகையில் தப்பித்தவறி என்மீது தெரித்த தண்ணீர்தான் மழையைப்போல் தெரித்ததென்றும், காலுநாலுக்கு முன்னுள்ள எச்சிப்பானையிலுள்ள தண்ணீரின் மேல் சூரிய வெளிச்சம் பட்டு, அடிக்கடி அத்தண்ணீர் காற்றில் அலையும்போது என் முகத்தில் பட்டுப்பட்டு மறையும் வெளிச்சம்தான் மின்னலைப்போல் தோன்றிற்றென்றும் பிறகுதான் தெரிய வந்தது.

அது எப்படியும் போகிறது. எப்படியாவது பேயிடம் அகப்படாமல் என் பெண்ஜாதிக்கு ஊழியம் செய்வது பூர்வஜென்மத்தில் புண்ணியம் செய்தேனே! அதையே நினைத்துத்தான் இப்பொழுதும் சந்தோஷப்படுகிறேன்.



முந்துங்கள்! முந்துங்கள்!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் எழுதிய

அநுபவ வைத்திய நூல்

(இரண்டாம் பதிப்பு)

இப் புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவேயிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூலின் உதவியைக்கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூலில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அநுபவ வைத்திய நூலை வைத்துக்கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்தியராகலாமென்பது திண்ணம்.

முன் பதிப்பைவிட இப்பதிப்பில் அநேக விஷயங்கள் சேர்க்கப்பட்டு உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டுள்ளது. சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன. முந்துங்கள்.

இதன் விலை ரூபா 2.

பழய 2-ஆம் பாகம் விலை அணா 8. தபால் சார்ஜ் வேறு

உங்கள் கைரேகைப் பலன்களை நீங்களே பார்த்துக் கொள்ளலாம்.

திரிகால ரேகை சாஸ்திரம்

(இரண்டாம் பதிப்பு)

இப்புத்தகம் தூய்மையான தமிழில் எளிய நடையில் படங்களுடன் விளக்கமாய் அநுபவ ஹஸ்த ரேகை சாஸ்திர ஆசிரியரான சக்தி தாஸரால் எழுதப்பட்டிருக்கிறது. இதைப் படித்தும், இதில் படங்கள் மூலம் விளக்கப்பட்டிருக்கும் கை ரேகைகளின் குணகுணங்களைப் பார்த்தும், ஒவ்வொருவரும் அவரவர்களின் ஆயுள், விவாகம், சந்தானம், பக்தி, அதிர்ஷ்டம், கண்டம், காரியசித்தி, இல்லற சுகம் முதலியவைகளை எல்லாம் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். இப்புத்தகம் வேண்டுவோர் பன்னிரண்டு அணா ஸ்டாம்புகள் அனுப்பி அன்ரிஜிஸ்டர் பார்சலாகப் பெற்றுக் கொள்ளலாம். வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது.

'தமிழரசு' புக்டிபோ,

31, வைத்தியநாத முதலி தெரு, ஜி. டி. சென்னை.

காங்க்ரீன்

என்னும்

இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரிகளிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (சைனஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும் டாக்டர் குருசாமி முதலியாருக்கும், கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும் ராம ஐயங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறு முறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலை, அறையாப்புக் கட்டி இவைகளையும் எத்தகைய ராஜ கட்டிகளையும், புரைப் புண்களையும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேத்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளை நீக்கும்.

ஆறாத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். மவுத்திர வியாதிக்கு மேல் பூசினால் இரணம் ஆறிவிடும்.

சில அபிப்பிராயங்கள்

சென்னை கந்தப்பமுதலித் தெருவு, நெ. 21, P. சோமசுந்திர செட்டியார் தெரிவிப்பது:—நான் என் தாயாருக்கு ஏற்பட்டிருந்த ராஜகட்டிக்காக டாக்டர் மல்லய்யாவிடமும், ரங்காசாரியாரிடமும் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலும் காட்டி குணமடையாமல் சாகும் நிலையில் இருந்தபோது துரைசாமி ஐயங்கார் சொல்லியபடி தங்களிடம் வந்து மருந்து கேட்டேன். தாங்கள் கொடுத்த இரண சஞ்சீவியால் முள்ளந்தண்டிலும் மார்பிலும் வயிற்றிலும் இருந்த கட்டிகள் சுகமாய் விட்டது. பிறகு இன்பசாரம் சாப்பிட்டதில் இரத்தம் விருத்தி யடைந்தது. நீரில் சர்க்கரை அதிகமாய் இருந்ததும் மறைந்து விட்டது. 12—12—33.

தே. வ. இ. சோமசுந்திரம் செட்டியார், கல்லல். தெரிவிப்பது :-

எனக்கு முதுகில் ஏற்பட்டிருந்த ராஜ கட்டிகளை ஒரு தரம் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து ஒரு வருடமாய் ஆராமல் நீர் வந்துக்கொண்டே இருந்ததும் தவிர மேல்கொண்டு பல கட்டிகளும் முதுகு பூராவும் சல்லடைக் கண்கள் போல் உண்டாய் விட்டது. பாதை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டிருக்கும் சமயத்தில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கல்லல் ஆ. மு. ஆ. வீட்டுக்கு வந்தபோது காண்பித்தேன். அவர் பட்டணம் வந்தால் பூரணமாய் குணப்படுத்தலாம் என்று சொல்லி இரண சஞ்சீவியைப் போடக் கொடுத்தார் கொஞ்சம் வலி குறைவாயிருந்தது அதுசமயம் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் அவர்கள் இந்த கேசை உங்களால் குணப்படுத்த முடியுமானால் பட்டணம் அனுப்பலாம் இல்லாவிடில் திருப்பத்தூரிலேயே பார்க்கலாம் என் மகன் இந்த வியாதியால் இறந்து போனான் என்று சொன்னதைக் கேட்ட பின் உறுதி சொன்னதின் மேல் நான் பட்டணம் வந்து ஒரு மாதம் மறுந்தை போட்டதில் சகல கட்டிகளும் ஆச்சரியமான வகையில் இரண சஞ்சீவியால் குணமாய் விட்டது என்னிடம் ஒரு டஜன் இரண சஞ்சீவியை வைத்துக் கொண்டு ஏழைகளுக்கு கொடுத்து சுகப்படுத்தி வருகிறேன். இரண சஞ்சீவியை ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பாக வைத்திருப்பது அவசியம். 10—9—33.

குறிப்பு:—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் சில மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட்டிருந்தாலும்,

இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்



புத்திர உற்பத்தியையளிக்கும்.

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது ஒன் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை பிஜுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையயும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தை யில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப் போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ணு அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

ஹகீம் டாக்டர் அவர்கள் நேரில் சொன்னதாவது :

இன்பசார மாத்திரையை சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜி கனம் மாதவன் நாயர் அவர்களின் மனைவிக்குக் கொடுத்து குணம் கண்டசாம். அவ்வம்மையாருக்கு மூளை சம்பந்தமான வியாதி இருந்ததாயும் இருட்டறையிலேயே சதா இருக்கவேண்டும் இல்லாவிடில்

மயக்கம் வந்துகொண்டிருந்ததாம். இவ்வியாதிக்காக ஐரோப்பா நாடுகள் பூராவும் சுற்றி அவ்விடத்திய தேர்ந்த வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்தனர்களாம். இந்தியாவிலும் தேர்ந்த வைத்திய நிபுணர்களால் சிகிச்சை செய்தும் குணமாகாதிருந்ததாம். அத்தகைய வியாதியை தன்னிடம் காண்பித்ததாயும், அதற்கு என்ன செய்யலாம் என்று என்னைக்கேட்டபோது நான் இன்பசார மாத்திரையைக் கொடுத்தால் குணமாய்விடும் என்று சொன்னதின் பேரில் மேற்படி மாத்திரையைக் கொடுத்து நோய் பூராவும் குணப்பட்டு தனக்கு நல்ல பெயர் கிடைத்ததாய் சொன்னார். இதனை சூசகமாய் தமது பதிப்புத்தாளில் குறித்திருக்கின்றார். மே. மா.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

தைலாமிர்தம்

இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலாண உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சாக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் தீட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

சில அபிப்பிராயங்கள்.

லக்ஷிமி நரசிம்மராவ், பார்ப்பத்திதார் (திருப்பதி தேவஸ்தானம்) எழுதுவது:— எனது மனைவியின் நேத்திரம் சிவந்து பார்வை போய், நீர்வடிந்துகொண் டிருந்தது. என் தம்பியின் மனைவி நேத்

திரமும் பூ விழுந்து பார்வை நீங்கி யிருந்தது. இவ்விருவர்களின் கஷ்டத்தைப்பற்றிச் சென்னை காசிச்செட்டி தெருவிலிருக்கும் ஜி. ஆர். கிருஷ்ணசாமி செட்டியாரிடத்திலும், நேஷனல் பாங் தலைமை குமாஸ்தா சுந்தர ராமாஞ்சலு நாயுடுகாரு இடத்திலும், வி. பெருமாள் செட்டி கம்பெனி சொந்தக்காரர் ஆழ்வார் செட்டியாரிடத்திலும் சொல்லித் துயருற்றபோது அம் மூவரும் சென்னைக்கு அனுப்பும் படிக் கட்டளையிட்டனர். அதன்படியே திருவாளர் ராவ்சாகிப் தர்ம லிங்க முதலியார் அவர்களின் சகாயத்தால் பட்டணம் சேர்ந்து டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடம் காட்டினேம். அவர் என் மனைவிக்குத் தான் சிகிச்சை செய்வதாயும் என் தம்பி மனைவியைக் கண்ணாஸ்பத்திரிக்கு அனுப்பும்படி கட்டளையிட்டார். அதுபோலவே நடந்துகொண்டதில், என் மனைவிக்கு தைலாமிர்தம் என்னும் தைலம் ஒரு புட்டி கொடுத்து, 4 நாளைக் கொருமுறை ஸ்நானஞ் செய்து வரச் சொன்னார். அதன்படி செய்ததில் 15 நாளில் கண் சிவப்பு மாறிப் பார்வையும் நன்றாய்த் தெரிந்தது. பிறகு 2 புட்டி தைலாமிர் தம் வாங்கிக்கொண்டு திருப்பதிக்கு என் மனைவி வந்துவிட்டாள்.

என் தம்பியின் மனைவி ஒரு வருடமாகக் கண்ணாஸ்பத்திரிக்குப் போய், சிகிச்சைபெற்றுக் கடைசியாய்க் கண் பார்வை உண்டாகாது என அனுப்பிவிட்டார்கள். பிறகு இச்செய்தியை டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடம் சொல்ல அதைத் தான் பார்ப்பதாக ஒப்புக்கொண்டு ஒரு புட்டி தைலாமிர்தம் கொடுத்து தலை முழுகச் சொல்லி, வேறொரு மருந்துப் பொட்டலம் கொடுத்துக் காட்டுக் களாப்பூவை முலைப்பாலில் ஊரவைத்து மருந்தையும் அதனுடன் கலந்து நாள்தோறும் கண்ணுக்குப் போட்டுவரச் சொன்னார். அதன் படியே செய்ததில் ஒரு மாதத்தில் கண்பார்வை பெற்று சுகமாக வாழ்கின்றாள். டாக்டர் அவர்களின் உதவிக்குத் திருப்பதி பெரு மாள் அவருக்கு சகாயம் அளிப்பார்.

5 பலம் கொண்ட டின் ரூபா 1. தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5 நிமிஷத்தில் தலைவலி நீங்கும்; தவிர உடம்புவலி, கைகால்வலி, இவைகள் போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வை விட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப் படும். இம்மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித அஞ் சனமும் வேண்டியதில்லை. புட்டி 1-க்கு விலை அணு 8.

காஸ்டோலின்

(இது சர்வ படையையும் சம்மரிக்கும்)

சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளி லும், துடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானாபி மானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட் டில் கையைவைத்து நமை நீங்க சொறிந்துக் கொள் ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகா ரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங் காலுக்குக் கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந் நேரமும் நீர் கசிந்துகொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப் பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்ட மாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என் னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோ கித்துப் பாருங்கள்.

வேண்டுவோர் 6 அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Rangoon,
Dated 24th August 1933

Dear Doctor

I have the pleasure to inform you that your GASTOLINE has got a very good effect in curing all kinds of skin diseases sa the stock previously recieved by V. P. P. is nearly finished, and there is a good demand for it, I request you to send ½ dozen bottles by earliest V. P. P. & oblige.

Thanking you in anticipation, yours faithfully
E. K. Panchanatham,
c/o The Rangoon Electric Tramway & Supply Co. Ltd.
Merchant Street, Rangoon.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.